# செம்மண்

நிலம் 2 துகள் 94 வள்ளுவர் ஆண்டு 2052, 07 - 13 வைகாசி 2022 வாரமலர் பக்கங்கள் 20 விலை ரூபா 50/-

### வெள்ளிக்கிழமை முழு அடைப்பு வேலை நிறுத்தத்தால்

# நாடு முழுமையாக செயலிழப்பு ஆனால் பதவி விலகல் இல்லை

### ஆட்சியாளர்கள் வெளியேற மறுத்தால் தொடர் போராட்டம் என அறிவிப்பு

அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோர் பதவி விலகுவதுடன் இன்றைய ஆட்சியும் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வெள்ளிக் கிழமை அழைப்பு விடுக்கப்பட்ட 24 மணி நேர முழு அடைப்புப் போராட்டத்தால் நாடு முழுவதும் வெள்ளிக்கிழமை முற்றாகச் செயலிழந்தது. பொதுப் போக்குவரத்து, சுகாதாரம், கல்வி, வங்கி ஆகிய துறை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். தனியார் வர்த்தக நிறுவனங்களும் அரச அலுவலகங்களும் இழுத்து மூடப்பட்டிருந்தன. இதனால் நாடு முழுவதும் வீதிகள் வெளிச்சோடிக் கிடந்ததுடன் அத்தியாவசிய சேவைகளை மட்டுமே பெறக்கூடியதாக இருந்தது. இவ்வாறு மிகப் பெரும் எதிர்ப்பு நடவடிக்கை மூலம் மக்கள் தற்போதைய ஆட்சிக்கு எதிரான தமது உணர்வுகளை வெளிப்படுத்தியபோதும் அதற்குச் செவி சாய்த்துப் பதவி விலகும் எண்ணமோ திட்டமோ ஆட்சியாளர்களிடம் இல்லை என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

பக்கம் 02




## தொடரும் போராட்டத்தை ஒழித்துவிட சூனியக்காரி ஞானாக்காவின் உதவி

### காலி முகத்திடலுக்கு ஏற்கனவே மந்திரித்த தண்ணீர் அனுப்பப்பட்டாயிற்றாம்

அரச தலைவர் கோத்தாபய ராஜபக்சவுக்கும் அவரது ஆட்சிக்கும் எதிராக தொடர்ச்சியாக நடந்துவரும் போராட்டங்களை நீர்த்துப் போகச் செய்து ஒழித்து விடுவதற்காக அனுராதபுரத்தைச் சேர்ந்த சூனியக்காரியான ஞானாக்காவின் உதவி நாடப்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

ஞானாக்கா அரச தலைவருக்கு ஆன்மிக ரீதியில் மிகவும் நெருக்கமானவர் என்று அறியப்பட்ட ஒருவர். காலி முகத் திடலில் கோத்தா கோ கம என்ற பெயரில் முகாமிட்டுள்ள போராட்டக்காரர்களின் போராட்ட மூர்க்கத்தைக் கலைப்பதற்காக அங்குள்ளவர்களுக்கு ஏற்கனவே ஞானாக்காவினால் மந்திரிக்கப்

பக்கம் 16

## நள்ளிரவு முதல் நாட்டில் அவசரகால நிலை அறிவிப்பு

ஆட்சியாளர்களுக்கு எதிரான போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் கட்டுக்கடங்காமல் பெருகி வரும் நிலையில் வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் நாட்டில் அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரச தலைவர் கோத்தாபய ராஜபக்ச தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இதற்கான உத்தரவை விடுத்துள்ளார் என்று அரச தலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

என்ன காரணத்திற்காக அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரிவிக்கப்படவில்லை என்றாலும் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளின்போது

பக்கம் 02

## 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு 4ஆம் கட்ட தடுப்பூசி

கொரோனா பெருந்தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான பொறிமுறையாக 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 4ஆம் கட்டத் தடுப்பு மருந்தை ஏற்றும் பணிகள் திங்கட்கிழமை முதல் தொடங்கும் என்று சுகாதாரத்துறை அமைச்சர் சன்ன ஜெயசுமன்ன தெரிவித்தார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த அவர், மருத்துவ வல்லுநர்

பக்கம் 15

## திங்களன்று மகிந்த பதவி துறப்பார்?

நெருக்கடிகள் அதிகரித்து வரும் நிலையில் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச தனது பதவி விலகலை திங்கட்கிழமையன்று அறிவிக்கக்கூடும் என்கிற எதிர்பார்ப்பு ஒன்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் நிலவுகின்றது.

பக்கம் 02

## நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தை வலியுறுத்தி சபாநாயகர் நேற்று முற்றுகை

### மக்களின் கோரிக்கைக்கு செவிசாய்க்காவிட்டால் குருதியாறு ஓடும் என்றும் எச்சரிக்கை

தற்போதைய ஆட்சிக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மான வரைவை நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும்படி வலியுறுத்தி சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த் தனவின் அலுவலகத்தை

பக்கம் 15




## இனப்பிரச்சினைக்கான தீர்வில் ஸ்டாலினின் பங்கு அவசியம்

### சிறிதரன் எம்.பி. வலியுறுத்து

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் பங்கு அளப்பரியதாக இருக்கவேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினையை கருத்திற் கொண்டு தமிழக

பக்கம் 15

## யாழ். போதனா வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்துக்கு தட்டுப்பாடு

### மக்கள் விழிப்புடன் நடக்கவேண்டும் என்று கோரிக்கை

யாழ். போதனா வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதுடன் இது ஓர் மருத்துவப் பேரிடரினை வடக்கில் ஏற்படுத்தும் அபாயம் உள்ளது என வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளரும் மருத்துவருமான சி.யமுனாநந்தா தெரிவித்தார்.

அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சத்திர சிகிச்சைக்குத் தேவையான மருந்துகள் பல பற்றாக்குறையாகக் காணப்

பக்கம் 02

செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
ஆசிரியர்: தே.பிரேமானந்த்

# பதவி விலகி செல்வதே சிறந்தது

மிக நீண்ட காலத்திற்குப் பின்னர் முழு நாடும் கிட்டத்தட்ட முடங்கிப்போகுமளவிற்கு ஒரு அடைப்பு மற்றும் வேலை நிறுத்தப் போராட்டம் ஆட்சியாளர்களுக்கு எதிராக இலங்கையில் நடந்திருக்கின்றது. 1953ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்கு எதிராக நடந்த வேலைநிறுத்தப் போராட்டத்திற்குப் பின்னர் நாட்டு மக்கள் ஒட்டுமொத்தமாக ஒரு ஆட்சிக்கு எதிராகத் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கும் சந்தர்ப்பமாக இது அமைந்திருக்கின்றது.

அரச தலைவர், தலைமை அமைச்சர் உள்ளிட்ட ஒட்டுமொத்த ஆட்சியாளர்களும் பதவி விலகவேண்டும் என்பதே போராடும் மக்களின் கோரிக்கையாக இருக்கின்றது. நாட்டைப் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளி மக்களின் வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கி, அதலபாதாளத்திற்குள் தள்ளிவிட்ட இந்த ஆட்சியாளர்களைத் துரத்தியடிக்கவேண்டும் என்கிற ஆவேசத்தோடு மக்கள் உள்ளார்கள். அதன் வெளிப்பாடாகவே எவ்வளவு முடியுமோ அவ்வளவு கீழ்த்தரமாக ஆட்சியாளர்களை விமர்சிக்கவும் அவர்கள் தவறவில்லை. அவை உள்ளாடைப் போராட்டங்கள் வரை நீண்டிருக்கின்றன.

அப்படியிருந்தும் பதவியிலிருந்து அகன்று செல்லாமல் மக்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்காமல் பிடிவாதம் பிடித்து நாட்டை இன்னும் இன்னும் மோசமான நிலைமைக்குள்ளேயே தள்ளிச் செல்கின்றனர் இந்த ஆட்சியாளர்கள். வாக்குறுதிளித்தபடி நாட்டை சுபீட்சத்தை நோக்கி வழிநடத்திச் செல்வதற்குப் பதில் பொருளாதார நெருக்கடி நோக்கித்தான் வழிநடத்திச் சென்று இன்றைய இக்கட்டை ஏற்படுத்திவிட்டார் தான் என்பதை அரச தலைவரே ஏற்றுக்கொண்டுவிட்டார். அவரைப் சுற்றியிருப்பவர்களும் இன்று அதையே கூறுகின்றார்கள்.

வரிகளைக் குறைத்தது, விவசாயத்திற்கான செயற்கை உரத்தைத் தடுத்து நிறுத்தியது, பன்னாட்டு நாணய நிதியத்திடம் உதவி கேட்டுச் செல்லாமல் வீம்பு பிடித்தது போன்ற இன்னபிற தவறுகளை விட்டிருக்கின்றோம் என்று நிதி அமைச்சர் அலி சப்ரிகூட அண்மையில் நாடாளுமன்றத்தில் வாக்குமூலமளித்திருந்தார். அதனால் வரும் நாட்களில் இன்னும் மோசமான நிலைமையும் பட்டினியும் ஏற்படப்போகின்றது என்றும் எச்சரித்தார். ஆனால் அந்த நிலைமையை ஏற்படுத்தியதற்காகப் பொறுப்புக்கூற அவரோ அவரது ஆட்சித் தலைவர்களோ இந்த நிமிடம்வரை முன்வரவில்லை. அதனால் நிலமை இன்னும் மோசமாகிச் செல்கிறதே தவிர மேம்படுவதற்கான வழியைக் காணவில்லை. அதுபோன்றே இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான எந்தவொரு திட்டத்தையும் ஆட்சியாளர்கள் கொண்டிருக்கவில்லை என்பதும் நிதி அமைச்சரின் உரையில் இருந்து தெரியவருகின்றது.

நட்பு நாடுகள் உதவும், நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியன உதவும் என்பதைத் தவிர்த்து எந்தவொரு திட்டமும் ஆட்சியாளர்களிடம் இல்லை. அப்படிப்பட்ட நிலையில் தலைமை அமைச்சரை மட்டும் பதவி நீக்கிவிட்டு மீண்டும் புதிய ஒரு தலைமை அமைச்சர் தலைமையில் இடைக்கால ஆட்சி என்ற பெயரில் பழைய மொந்தையில் புதிய கள்ளாகப் பழையவர்களையே புதிதாக அமைச்சுப் பொறுப்புக்களில் அமர்த்துவதன் மூலம் நாடு இந்த நெருக்கடியில் இருந்து மீண்டுவிடமுடியாது.

எனவே இடைக்கால ஆட்சி என்கிற ஏமாற்று வேலைகள் நிறுத்தப்பட்டு அனைத்து அரசியல்வாதிகளும் விலகிக் கொண்டு நாட்டை உண்மையான துறைசார் நிபுணர்களைக் கொண்ட காபந்து ஆட்சி ஒன்றிடம் ஒப்படைக்கவேண்டும். அதுவே ஊழலற்ற நேர்மையான புதிய எண்ணங்களைக் கொண்ட எதிர்காலத்தை உருவாக்குவதற்கான முயற்சியாக அமையும். அதன் மூலமே நாட்டை மீட்டெடுக்கமுடியும். அதைத் தவிர்த்து இப்போதிருக்கும் அரசியல்வாதிகளை மாற்றி மாற்றி பதவிகளில் இருத்துவதன் மூலம் எதனையும் சாதிக்க முடியாது.

அத்தகைய முற்றிலும் புதிதான, நிபுணத்துவ அறிவு வாய்ந்த, நாட்டை நேர்மையாக நிர்வகிக்கக்கூடிய, ஊழலற்ற காபந்து ஆட்சி ஒன்றை அமைப்பதற்கு வழிவிடும் வகையில் அரச தலைவர், தலைமை அமைச்சர் உள்ளிட்ட ஒட்டுமொத்த ஆட்சியாளர்களும் உடனடியாகப் பதவி விலகவேண்டும். மக்களின் கோபம் வன்முறையாக மாறும் வரையில் பொறுத்திருந்து வன்முறைக்குப் பதில் அரச வன்முறை என்பதாக குருதிச் சகதியில் மீண்டும் ஒருமுறை நாட்டு மக்களை நனைக்காமல் மக்களாட்சி மான்பைக் காக்கும் வகையில் பதவி விலகிச் செல்வதே தற்போதைய ஆட்சியாளர்களுக்குச் சிறந்தது.

## நாடு முழுமையாக...

ஒட்டுமொத்த ஆட்சியாளர்களும் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி அழைப்பு விடுக்கப்பட்டிருந்த வெள்ளிக்கிழமை போராட்டத்தினால் தலைநகர் கொழும்பின் வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் உள்ளிட்ட நாட்டின் அனைத்து நகரங்களிலும் கடைகள், வர்த்தக நிறுவனங்கள் முழுமையாக அடைக்கப்பட்டிருந்தன. அரச மற்றும் தனியார் பாடசாலைகள், வங்கிகள் மற்றும் அனைத்து அலுவலகங்களும் மூடப்பட்டிருந்தன. தொடருந்துகள், 18 ஆயிரம் தனியார் போக்குவரத்து பேருந்துகள் என்பன தமது சேவைகளை நிறுத்தி முழுமையான போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன.

முழு அடைப்பு நடத்தப்பட்டுக்கொண்டிருந்த அதேசமயம் பல பாகங்களிலும் ஆர்ப்பாட்டப் பேரணிகளும் நடத்தப்பட்டன. கொழும்பு கோட்டை, பொரள்ளை சந்தி ஆகிய இடங்களில் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் இடம்பெற்றன. சுதந்திர வர்த்தக வலையத்தைச் சேர்ந்த பணியாளர்களும்கூட ஆக்ரோசத்துடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும்படி அவர்கள் வலியுறுத்தினர். ஏனைய முக்கிய நகரங்களிலும் தொழிற்சங்கங்களால் ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் நடத்தப்பட்டன.

வடக்கு, கிழக்கில் அத்தகைய ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகள் இடம்பெறாத போதும் அடைப்புப் போராட்டமும் வேலை நிறுத்தமும் முழுமையாக இடம்பெற்றன. நாடு முழுவதையும் செயலிழக்கச் செய்யும் வகையில் மிகப் பெரிய போராட்டமாக இது அமைந்த போதிலும் அதற்கு அசைந்து கொடுத்து பதவி விலகும் எண்ணம் அரச தலைவருக்கோ தலைமை அமைச்சருக்கோ அமைச்சரவைக்கோ கிஞ்சித்தும் இல்லை என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

பிரதி சபாநாயகர் பதவிக்கான போட்டியையும் வெற்றிகரமாகச் சமாளித்திருக்கும் பின்னணியில் போராட்டங்களுக்கு மதிப்பளித்து பதவி விலகும் நிலைமை இல்லை என்பது வெளிப்படையானது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால், எதிர்வரும் 11ஆம் நாள் புதன்கிழமைக்குள் அரச தலைவரும் இந்த ஆட்சியாளர்களும் பதவி விலகவில்லை என்றால் நாட்டில் உள்ள 2 ஆயிரம் தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தயாராக இருப்பதாக சுயாதீன துறைமுக சேவைகள் சங்கத் தலைவர் லால் பங்கமுவகே தெரிவித்தார்.

இன்றைய செய்திக்குப் பின்னரும் பதவி விலகுவதற்கு அரச தலைவர் கோத்தாபய மறுத்தால், 11ஆம் நாள் அவரைக் காதில் பிடித்து இழுத்து வெளியே தள்ளுவதற்கு மக்கள் தயாராக இருக்கிறார்கள் என்றார் சுதந்திர பணியாளர்கள் சங்க செயலாளர் ஆரியதாச பத்திரன.

வெள்ளிக்கிழமை போராட்டம் கடந்த பல 10 ஆண்டுகளில் நடந்த மிகப் பெரும் வேலை நிறுத்தப் போராட்டம் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். 1953ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு எதிராக நடந்த இத்தகைய போராட்டத்திற்குப் பின்னர் இப்போதுதான் நாடு மீண்டும் ஒரு மிகப் பெரும் வேலை நிறுத்தத்தை எதிர்கொண்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## நள்ளிரவு முதல்...

சில இடங்களில் வன்முறை இடம்பெற்றதைக் காரணங்காட்டி இந்த நடவடிக்கையில் ஆட்சியாளர்கள் இறங்கியிருக்கலாம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

போராட்டக்காரர்கள் அரச தலைவர் செயலக வாசலைத் தடை செய்ததுடன் தலைமை அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்ல வாசலையும் தடை செய்து போராட்டத்தில் ஈடுபட்டனர். நாடாளுமன்றத்திற்குச் செல்லும் வாயிலையும் அவர்கள் தடுத்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளே செல்லவோ வெளியேறவோ முடியாத வகையில் பாதையைத் தடுப்பதற்கு அவர்கள் முயற்சித்தனர். இதையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க காவல்துறையினர் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியதுடன் தண்ணீரைப் பீச்சியடித்தனர். ஒட்டுமொத்த 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவி விலகவேண்டும் என்று போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

இதனால் ஏற்பட்ட களேபரங்களைத் தொடர்ந்து நாடாளுமன்றத்திற்கு முன்பாக இடம்பெற்ற போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. இந்த நிலையிலேயே அவசர கால நிலையை அரச தலைவர் பிறப்பித்திருக்கிறார்.

## திங்களன்று...

இடைக்கால ஆட்சி ஒன்றை நிறு வும் வகையில் தலைமை அமைச்சர் பதவி விலகவேண்டும் என்று அரச தலைவர் கோத்தாபய ராஜபக்சவும் அவருக்கு நெருக்கமான அமைச்சர்கள் சிலரும் மகிந்த ராஜபக்சவிடம் கோரிக்கை முன்

வைத்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. வெள்ளிக்கிழமை பின்னரவுவரை அதற்கு எந்தவிதப் பதிலையும் வழங்காத மகிந்த, திங்கட்கிழமை தனது பதவி விலகலை அறிவிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு அரச தலைவர் எடுத்த தன்னிச்சையான முடிவுகள் சிலவே காரணம் என்று கருதும் மகிந்த ராஜபக்ச, அதற்காகத் தன்னைப் பதவியிலிருந்த அகற்றுவது நியாயமானதல்ல என்று கருதுகின்றார். அதனால் தானாகப் பதவி விலகப் போவதில்லை என்று அவர் திட்டவட்டமாக இருந்து வந்தார். இருப்பினும் அரச தலைவர் கேட்டுக்கொண்டால் அல்லது அவர் பதவி விலக்கினால் தான் பதவியிலிருந்து அகன்று செல்வார் என்பதையும் தெரியப்படுத்தியிருந்தார்.

இந்த நிலையிலேயே தற்போது அவரைப் பதவி விலகுமாறு அரச தலைவர் கோரியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

## யாழ். போதனா...

படுகின்றன. இதனால் அவசர சத்திரசிகிச்சை, கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சத்திரசிகிச்சை தவிர்ந்த ஏனைய சத்திரசிகிச்சைகளைச் செய்யமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

மயக்கமருந்துகள், சேலைன், சத்திரசிகிச்சையில் அதிகமாகத் தேவைப்படும் பெட்டடின் உட்பட பல மருந்துகள் இரண்டு வாரங்களுக்கு மட்டும் உபயோகிக்கக்கூடியளவிலேயே இருப்பில் உள்ளது. புற்றுநோய்களுக்கான சிகிச்சை உட்பட பல சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளமுடியாத சூழ்நிலையே காணப்படுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் பொதுமக்களை விழிப்படைய வைத்தல் அவசியம். விபத்துக்கள், குழு மோதல்கள், கேளிக்கை நிகழ்வுகளைத் தவிர்த்து தற்போதைய சூழலை எதிர்கொள்ள அனைவரும் உதவுதல் வேண்டும். மேலும் வைத்தியசாலைச் சமூகம் மருத்துவ சேவையினைத் தொடர மனித நேய மருத்துவ அவசர உதவிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது என்றுள்ளது.

# அருந்ததி

இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

## மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**23851 | வே | 1976**
அச்சுவேலி | இந்து | A/L
Own Business
சுவாதி (துலாம்)
172 செ.மீ | சூ.செவ் : 04

**22678 | வே | 1978**
புங்குடுதீவு | இந்து | B.Com,
MBA | Business Analyst
அமெரிக்கா | மகம் (சிம்மம்)
170 செ.மீ | செவ் : 08

**23842 | வே | 1981**
நயினா தீவு | இந்து | BA
CIMA | Own Business
உத்தரம் (கன்னி)
167 செ.மீ | செவ் : 12

**22531 | வே | 1982**
சண்டிலிப்பாய் | Divorced
BBA | Director
உத்திரட்டாதி (மீனம்) | இந்து
177 செ.மீ | செவ்: 12

**22588 | க | 1983**
பண்டத்தரிப்பு | கிறிஸ்தவம்
A/L | Handyman
கேட்டை (விருச்சிகம்)
180 செ.மீ | அவுஸ்ரேலியா

**22555 | வே | 1984**
மாத்தளை | இந்து | A/L
Tourist Guide | Hong Kong
பூசம் (கடகம்)
165 செ.மீ | செவ் : 08

**22579 | வே | 1984**
புங்குடுதீவு | இந்து | A/L
Staff | பிரான்ஸ்
அத்தம் (கன்னி)
165 செ.மீ

**22636 | சாண் | 1984**
ஆனைக்கோட்டை | இந்து
A/L | Own Business
பரணி (மேடம்)
183 செ.மீ | செவ் : 02

**22543 | கு | 1986**
காரைநகர் | இந்து | A/L
Customer Service Executive
ரேவதி (மீனம்)
170 செ.மீ | செவ் : 12

**22675 | வி | 1987**
நல்லூர் | இந்து | BA, MIPA &
AFA | Aviation Officer
அவுஸ்ரேலியா | அத்தம் (கன்னி)
180 செ.மீ

**23839 | கோ | 1988**
வேலணை | A/L
Bakery Business
விசாகம் (விருச்சிகம்)
170 செ.மீ | இந்து

**22627 | வே | 1989**
மட்டக்களப்பு | இந்து | A/L
Fabricator | அவுஸ்ரேலியா
பூசம் (கடகம்)
172 செ.மீ | செவ் : 02

**22546 | வே | 1989**
ஆவரங்கால் | இந்து | A/L
Contractor | பிரான்ஸ்
அனுஷம் (விருச்சிகம்)
182 செ.மீ

**22050 | வே | 1989**
வண்ணார்பண்ணை | இந்து
A/L | Own Business
திருவாதிரை (மிதுனம்)
172 செ.மீ | சூ.செவ் : 02

**20136 | வே | 1989**
நீர்வேலி | இந்து | BSC,MSC
& PHD | Admin Manager
South Korea | சுவாதி (துலாம்)
172 செ.மீ | சூ.செவ் : 10

**23806 | வே | 1989**
கோண்டாவில் | இந்து
MBBS | Doctor
மூலம் (தனுசு)
180 செ.மீ | செவ் : 07

**23824 | ந | 1989**
முல்லைத்தீவு | இந்து
BA | Graduate Teacher
அஸ்வினி (மேடம்)
168 செ.மீ | செவ் : 07

**22606 | கோ | 1990**
பருத்தித்துறை | இந்து | BD,
Reading MBA | Executive
Manager | அவிட்டம் (கும்பம்)
180 செ.மீ | செவ் : 02

**22621 | கு | 1990**
வேலணை | இந்து | B.Eng,
MSC | Manager
உத்தராடம் (மகரம்)
160 செ.மீ | செவ் : 04

**23005 | வே | 1990**
அல்வாய் | இந்து | A/L
Own Business
பூரம் (சிம்மம்)
185 செ.மீ

**22633 | வே | 1992**
கரவெட்டி | இந்து | NVQ
Technican Officer
ரோகிணி (ரிஷபம்)
180 செ.மீ

**22639 | வே | 1992**
நெடுந்தீவு | இந்து | NVQ
Assistant Engineer
பூரட்டாதி (கும்பம்)
167 செ.மீ | செவ் : 01

**23854 | வே | 1993**
இளவாலை | இந்து | BSC
Software Engineer
அத்தம் (கன்னி)
179 செ.மீ | செவ் : 01

**22612 | வே | 1994**
மட்டக்களப்பு | இந்து
A/L | Gym Coach Trainer
கார்த்திகை (ரிஷபம்)
160 செ.மீ

**19599 | வே | 1995**
வவுனியா | இந்து | HND,
Reading MSC| Grama
Sevagar | புனர்பூசம் (மிதுனம்)
175 செ.மீ

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**22360 | வே | 1982**
கோண்டாவில் | Divorced
Diploma | Teacher
அத்தம் (கன்னி) | இந்து
175 செ.மீ | செவ் : 01

**22642 | கோ | 1986**
மல்லாகம் | இந்து
MBA | Executive
திருவாதிரை (மிதுனம்)
153 செ.மீ | செவ் : 02

**22264 | கோ | 1987**
கரவெட்டி | இந்து | BSC,
MSC | Civil Engineer
பூரட்டாதி (கும்பம்)
160 செ.மீ

**22258 | கு | 1987**
முல்லைத்தீவு | இந்து
MBBS & MD | Doctor
மகம் (சிம்மம்)
164 செ.மீ

**22657 | வே | 1991**
கொக்குவில் | இந்து | Reading
Music Course | Studying
ரேவதி (மீனம்)
162 செ.மீ

**22200 | ப | 1991**
சுன்னாகம் | இந்து | BA
Development Officer
பூரம் (சிம்மம்)
165 செ.மீ | செவ் : 01

**22249 | கு | 1991**
சித்தங்கேணி | இந்து | BSC
Graduate Trainee
அஸ்வினி (மேடம்)
149 செ.மீ | செவ் : 12

**22167 | சாண் | 1991**
பண்டத்தரிப்பு | இந்து | BA
Development Officer
பூரம் சிம்மம்
165 செ.மீ | சூ.செவ் : 09

**22206 | கோ | 1993**
அச்சுவேலி | இந்து | A/L
Searching for a Job
சதயம் (கும்பம்)
157 செ.மீ | செவ் : 01

**22618 | சாண் | 1993**
ஆனைக்கோட்டை | இந்து
A/L | Cake Designer
பூசம் (கடகம்)
167 செ.மீ | செவ் : 01

**22197 | வே | 1993**
நீர்வேலி | இந்து | HNDA,
CIMA | Searching for a Job
உத்தராடம் (மகரம்)
162 செ.மீ | செவ் : 02

**22158 | வே | 1993**
அல்வாய் | இந்து |
MBBS | Doctor
திருவாதிரை (மிதுனம்)
163 செ.மீ

**22660 | கோ | 1994**
அச்சுவேலி | இந்து | BFA
Searching for a Job
மூலம் (தனுசு)
159 செ.மீ | சூ.செவ் : 12

**23827 | வே | 1994**
வேலணை | இந்து | BSC
Project Manager | கனடா
உத்தரம் (சிம்மம்)
156 செ.மீ

**22513 | வே | 1994**
மானிப்பாய் | இந்து | BD
Marketing Executive
திருவாதிரை (மிதுனம்)
170 செ.மீ

**22104 | வே | 1994**
அளவெட்டி | இந்து | Diploma
in Beautician | Proprietor
பூராடம் (தனுசு)
156 செ.மீ

**23809 | வி | 1995**
மட்டக்களப்பு | இந்து | Bachelor
in Teaching | Teacher
பூசம் (கடகம்)
165 செ.மீ | செவ் : 04

**23860 | வே | 1995**
காரைநகர் | இந்து | LLB
Software Engineer
அனுஷம் (விருச்சிகம்)
174 செ.மீ | செவ் : 12

**22384 | வே | 1996**
ஏளாலை | இந்து | கனடா
MD | Doctor
சித்திரை (கன்னி)
165 செ.மீ

**22441 | வே | 1996**
திருநெல்வேலி | இந்து | HRM
Final | Staff Assistant
சித்திரை (கன்னி)
157 செ.மீ

## அருந்ததி பிரைவட் லிமிடட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்



# அரசியலில் முஸ்லிம்கள்


**விதுரன்**

2019 ஏப்ரல் 21ஆம் திகதியானது இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் ஒரு பெரும் பிரிகோடாக அமைந்தது. முஸ்லிம்களின் அரசியல், சமூக வாழ்க்கையை அன்று நிகழ்ந்த தாக்குதல் மிகக் கடுமையாகப் பாதித்தது. சஹ்ரான் என்கிற முஸ்லிம் நபர் ஒருவர் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புடன் ஏற்படுத்தியிருந்த உறவு இலங்கையில் பெரியதொரு அசம்பாவிதத்தை ஏற்படுத்தியது. அதிலிருந்து மீள்வதற்காகச் சிங்களவருடன் விரும்பியோ, விரும்பாமலோ இணைந்து செயற்படவேண்டிய நிலை அல்லது கட்டாயம் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டது. தற்போதைய அரசில் அலிஷப்ரி என்கிற முஸ்லிம் நபர் ஒருவர் நிதி அமைச்சராகவும், நீதி அமைச்சராகவும் பதவி வகித்தது என்பது முஸ்லிம் ஒருவருக்கு இதற்கு முன்னர் ஒருபோதும் நடக்கவில்லை.

அலி சப்ரி வடக்குக் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் அல்ல. கொழும்பு மையத்தைக் கொண்டவர். யாவாவிலிருந்து வந்த முஸ்லிம் பரம்பரையைச் சேர்ந்தவர். வடக்குக் கிழக்கு மாகாணத்தைத் தவிர ஏனைய பகுதிகளில் வாழ்கின்ற இவ்வகை முஸ்லிம்கள் வேறுபட்ட கல்வித்தரத்தையும் பண்பாட்டு விழுமியங்களையும் கொண்டவர்கள். வடக்குக் கிழக்கு முஸ்லிம்களுடன் திருமண உறவுகளைக்கூட வைத்திருப்பதில்லை. இவர்கள் தமக்கென ஒரு கட்சியை உருவாக்காமல் சிங்களப் பாரம்பரியக் கட்சிகளான ஐ.தே.க, சிறீலங்கா சுதந்திரக் கட்சிகளுடன் இணைந்து தமது அரசியலை நடத்தி வருகின்றனர். பாக்கீர் மாக்கர், பௌசி, அஷ்பர், எ.சி.எஸ்.ஹமீட், அலவி மௌலானா ஆகியோரை இதற்கு உதாரணமாகக் குறிப்பிட முடியும்.

**அஷ்ரப்பின் அரசியல் நுழைவு**

முதல் தடவையாகக் கிழக்கு மாகாண அரசியலில் பிரசித்தமாக இருந்தவர் எம்.எச்.எம்.



அஷ்ரப்பின் குடும்பத்தைச் சேர்ந்த காரியப்பர். அவரது அரசியல் தமிழ் அரசுக் கட்சியுடன் தொடங்கியது. 1981இல் அஷ்ரப் முஸ்லிம்களுக்கு என்று தனியான கட்சி ஒன்றை தொடங்கினார். அதன் விபரீதம் பற்றி அமிர்தலிங்கம் விளங்கியிருந்தார். முஸ்லிம்களுக்குத் தனியான கட்சி அவசியமில்லை, தமிழருக்கான அரசியல் தீர்வில் தமிழ் - முஸ்லிம்கள் என நீங்கள் அடையாளப்படுத்தப்படுவீர்கள் என்று அமிர்தலிங்கம் எடுத்துக் கூறியபோதும் முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தனியான கட்சி ஒன்று அவசியம் தமிழருக்கான தீர்வு கிடைக்கும் பட்சத்தில் தமிழ் - முஸ்லிம் விடயங்களை இரு கட்சிகளும் பேசித் தீர்ப்போம் - என முற்றுப்புள்ளி வைத்தார் அஷ்ரப்.

அஷ்ரப் ஒரு சிறந்த சட்டத்தரணி என்பதால் பல முஸ்லிம் சட்டத்தரணிகளை அரசியலுக்குள் கொண்டுவந்தார். பல அமைச்சுப் பதவிகளைப் பெற்றுத் தனது சமுதாயத்தின் நிலைபேற்றுக்கு வித்திட்டார். தனது கட்சியைக் கிழக்கில் மட்டும் மட்டுப்படுத்தாது அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் என நாடு தழுவிய முஸ்லிம் கட்சியாக மாற்றினார்.

**ரிஷாத் பதியுதீனின் அரசியல்**

வடக்கிலிருந்து 1990 ஒக்ரோபர் 30ஆம் திகதியன்று முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதன் பின் உருவாக்கப்பட்ட கட்சியே ரிஷாத் பதியுதீனின் மக்கள் காங்கிரஸ். இந்தக் கட்சியும்



வடக்கு அரசியலில் பெரிய தாக்கத்தைச் செலுத்தி வருகிறது. 2005இன் பின்னர் மகிந்த தலைமையிலான அமைச்சரவையில் மீள்குடியேற்றம், மறுவாழ்வு அமைச்சராகப் பதவி வகித்த ரிஷாத் பதியுதீனுக்கும் அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான பசில் ராஜபக்சவுக்கும் மிக நெருக்கமான உறவு இருந்தது. 2008க்குப் பின்னர் வன்னியிலிருந்து வவுனியாவுக்குச் சென்ற மக்களுக்கான தற்காலிக முகாம் அமைக்கும் பணி துறைசார் அமைச்சர் என்ற வகையில் ரிஷாத்துக்குக் கிடைத்தது.

காடு துப்புரவு செய்தல், பெரிய மரங்களை விற்றல், விறகு விற்பனை என்பன ஒருபுறமிருக்க மறுபுறம் தற்காலிக முகாம்களையும் ஏனைய முகாம்களையும் கட்டும் பணியும் அவரிடம் இருந்தது. அவரது சகோதரர்கள் மிகப் பெரிய திடீர் ஒப்பந்தகாரர்களாக மாறினார்.

**ஹிஸ்புல்லா அரசியல்**

கிழக்கில் விடுதலைப் புலிகளை அழிக்கும் முயற்சியின் ஓர் அங்கமாக வாகரைச் சந்தி, புனாணைப் பகுதிகளில் வீதியோரமாக இருந்த பெருங்காடுகளை வெட்டித் துப்புரவு செய்தார்



ஹிஸ்புல்லா. அதனால் அதிக பணம் சம்பாதித்தார். காடு துப்புரவு செய்த இடத்தில் பல முஸ்லிம் கிராமங்களை உருவாக்கினார். ரிதிதென்ன, ஹிஸ்புல்லா நகர் ஆகிய கிராமங்கள் இவ்வாறு உருவாக்கப்பட்டவையே. இதைவிட மட்டக்களப்புப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் பெரியதொரு தனியார் பல்கலைக்கழகத்தையும் நிறுவினார். கோத்தாபய அரச தலைவரானதும் அதனை அரசுடைமையாக்க முயற்சிக்கப்பட்டது.

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்**

முஸ்லிம்களை அதுவரை தமது உச்ச நண்பர்கள் என்று நினைத்துவந்த சிங்களவர்களுக்கு (புலிகளை அழிப்பதற்கு முஸ்லிம்கள் பெரியளவான ஒத்துழைப்பை வழங்கினர்) உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல் பேரிடியாக அமைந்தது. சாதாரண சிங்கள மக்கள் முஸ்லிம்களை வெறுக்கும் நிலை ஏற்பட்டது. அதுவரை புலிகள் கெட்டவர்கள் என்கிற சிங்கள மக்களின் எண்ணத்தை இஸ்லாமிய அடிப்படைவாதியான சஹ்ரான் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் மூலம் தகர்த்தார். அதன் பின்னர் முஸ்லிம்களை எல்லா இடங்களிலும் ஒடுக்கும் முயற்சியில் கோத்தாபய அரசு செயற்பட்டது.

தற்போது நிலவிவரும் டொலர் தட்டுப்பாட்டுக்கு முக்கிய காரணமாக இருப்பது பெரும்

57

# எமையறிதல்

ஐயங்கொண்டான் சுவாமிகள்

எல்லாம் நானே, எல்லாம் என்னால் மட்டுமே என்கிற போக்கானது பிறர் கருத்தை உதவிகளை ஒத்துழைப்புகளைப் பெற அனுமதிக்காது. அது மட்டுமல்ல அவனே எல்லாவற்றையும் செய்யும்போது அவனது வேலைக்குள் நாமேன்? என்கிற விதமாகப் பிறரை ஒதுங்கவும் செய்திருக்கலாமல்லவா? பிறரை ஏற்காமை மட்டுமல்ல தவறுகளுக்கான மூலத்தை தம் மீது சுமத்தி விடுவான் என்கிற அச்சம்கூட ஒதுங்கச் செய்திருக்கலாமல்லவா? யாரோ ஒருவன் தனக்காகப் பெயரெடுக்க நாமேன் சிரமப்படுவான் என்கிற ஒரு சுயநலப் போக்காலும் ஒதுங்க வாய்ப்புகள் உள்ளன என்பதும் கவனிக்கத்தக்கது.

எல்லாம் நானே எனும் போக்கானது சரியா? தவறா? என்பதைவிட அனைத்து நிலைகளிலும் வேலையினது பெறுதி பற்றி அச்சமின்றி ஏற்றுக்கொள்ள முடிகிறதா? ஏற்றுக்கொள்ளும் பக்குவம் இருந்தால் தனியனாகப் பொறுப்பேற்கவும் உரிமை கொண்டாடவும் முடியும். யதார்த்தம் அவ்வாறிருக்கிறதா? இல்லை என்பதே யதார்த்தம். இங்கேதான் நாம் எம்மைப் பரிசீலிக்க வேண்டியுள்ளது.

தனியே எடுத்த முயல்வுகளினது சாதக நிலைமைகள் என்னாலேயே ஆனவை என்றும் பாதக விளைவுகள் கிரக பலன், காலப் பிழை, விதியினது விளையாட்டு, தெய்வக்குற்றம் என்றறேதேதோ பேசவிளைகிறோம். எம்மை நாமே மட்டுமல்ல பிறரையும் முட்டாள்களாக்கும் அயோக்கியத்தனம் வந்து சேர்வது இவ்விடத்தில்தான். எதுவும் எவராலும் தனித்து நடந்து முடிந்துவிடுவதில்லை. விளைவு சாதகமாகட்டும் பாதகமாகட்டும் சரியான புரிதல், திட்டமிடல், செயல்முறையொழுங்கு என்பவற்றினதும் பிறரது கண்ணுக்குத் தெரிந்த தெரியாத பங்களிப்புகளாலுமே நடந்தேறியிருக்கின்றன என்பதே யதார்த்தமானது.

விளைவு சாதகமெனில் மேற்குறித்த காரணிகளாலான பங்களிப்புகள் சரிவர ஒழுங்குபடுத்தப்பட்டதாக இருந்திருக்கும். பாதகமெனில் மேற்குறித்த காரணிகளாலான கூட்டில் எங்கோ இடைவெளியொன்று இருந்திருக்கிறது. விளைவு நோக்கிய முயல்வினைச் செய்தவனில்தான் விளைவினது சாதக-பாதகக் கூறுகள் இருக்கின்றன. பயன்படுத்திய விதம், முறை, முயற்சிக்கான காலம், சூழல் என்பவற்றிற்கு அப்பால் குறித்த விடயம் தொடர்பான அறிதல் புரிதல் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவையே.

இவ்வாறான நிலை ஏற்படுவதற்கான எமது மதிப்பீடு சரியாகத்தான் இருக்கிறதா? விளைவை அல்லது பெறுதியை எவ்வாறு மதிப்பீடு செய்கிறோம்? குறித்த விளைவால் ஏற்படுத்தப்பட்ட பயன்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்துதான் முடிவு செய்கிறோமா? தனியனொருவனுக்கான பயனா? சமூகத்துக்கான பொதுப் பயனா? பயனாளிகள் எவ்வாறானவர்கள்? பயன்களென்று கூற வருவது எது? எவை? எமது மதிப்பீட்டில் இவற்றைக் கவனத்தில் கொண்டிருக்கிறோமா?



பயன் எதிர் பயனின்மை தொடர்பான மதிப்பிடலானது எவ்வாறாக நிகழ்த்தப்படுகிறது? யாரால் நிகழ்த்தப்படுகிறது? ஏன்? எதற்காக? போன்று வினாமுடிச்சுகளை அவிழ்த்திருக்கிறோமா? எனக்குப் பயனுள்ளதாக நான் கருதுகிற ஒரு விடயம் பிறனொருவனுக்கும் பயனுடையதே என்கிற எண்ணம் தவறானது. அனேகமான முடிவுகள் இவ்வாறாகவே எடுக்கப்படுகின்றன. உழவு செய்யும் தேவையுடைய விவசாயிக்கு மழை பயனுடையது. கதிரறுக்கத் தயாரான விவசாயிக்கு பயனற்றது மட்டுமல்ல, ஆபத்தானது. விவசாயி என்கிற பொதுமையான தொகுதிக்கு மழை இவ்வாறு நேரெதிர் விளைவுகளைத் தருகிறது.

எல்லாமே இந்த எடுத்துக்காட்டைப் போலத்தான் முரணிலைத் தன்மையான பெறுதிகளையே ஏற்படுத்துகின்றன. பெறுதிகளை வகைப்படுத்துவது சாத்தியமாகுமா? பயன் எதிர் பயனின்மை எனும் முரணும்கூட ஒரு மாயச்சந்தியேதான். எனக்கான தேவையை நிறைவு செய்தது எனக்குப் பயனுடையது. அதுவே உனக்கு உனது தேவையை அதிகப்படுத்தியோ உதாசீனப்படுத்தியோ இருக்கலாம். அது உனக்கு பயனற்றதாக இருந்திருக்கும்.

இங்கே நாம் ஏற்கனவே ஒருமுறை பேசிய தேவை ஆசை எனும் விளக்கத்தை மீளவும் நினைவிற் கொண்டுவருதல் அவசியமாகிறது. பயனுடையதென ஒன்றிருந்தால் அது நிலையான ஒரு புள்ளியிலிருந்தால் அதனைச் செய்தது நானே என்று உரிமை கோரமுடியும். நிலையறுந்த மாயப் புள்ளிக்காக உரிமை கோருவதை எவ்வகைக்குள் அடக்குவது? சிந்திப்போம்.

---

## அரசியலில் ...

வர்த்தகர்கள் டொலருக்கு மத்திய வங்கி வழங்கும் விலையைவிட அதிக விலை கொடுத்து டொலரைக் கொள்வனவு செய்து புழக்கத்தில் விடாது தடுத்துள்ளமைதான் என்றும் ஒரு காரணம் கூறப்படுகிறது. இத்தகைய பெரும் வர்த்தகர்களில் பலரும் முஸ்லிம்கள் என்பதும் கண்கூடு.

இப்போது கோத்தாபய அரசுக்கு எதிரான எல்லாச் செயற்பாட்டிலும் முஸ்லிம்கள் களமிறங்கியுள்ளனர். எரிபொருள் வாங்க வரிசையில் நிற்கும் முஸ்லிம் பெண்களை அணுகும் போது ஊடகங்களிடம் அரசு மீதான ஆத்திரத்தை அநாகரிகமான வார்த்தைகளால் அவர்கள் திட்டுவதைக் காணமுடிகிறது.

**காலிமுகத்திடல் போராட்டத்தில் முஸ்லிம்கள்**

காலி முகத்திடல் போராட்டத்தின் பின்னூட்டல்கள் பலதையும் முஸ்லிம்கள் செய்து வருகின்றனர். உணவு, குளிர்பானங்கள், சிற்றுண்டிகள், மழைக்கவசங்கள் எனப் பலவற்றையும் வழங்கி ராஜபக்சாக்களுக்கு எதிராகச் செய்யப்படுகின்றனர். போராட்ட மையத்தில் நோன்பு திறக்கும் சம்பவங்களும் நடந்தன. சாதாரண நாள்களில் முக்கிய கூட்டம் நடந்தால் நோன்பு திறக்கப்போகிறோம், தொழப் போகிறோம் எனச் சிங்கள தமிழ் மக்களுக்குக் கதைவிடுகின்ற முஸ்லிம்கள் நோன்பு துறப்பதற்குப் பள்ளிக்குச் செல்லாமல் போராட்டத்தில் கலந்து கொண்டு நோன்பு துறப்பது அவர்களின் மதக் கட்டுப்பாடுகளை மீறிய செயலாகவே காணப்படுகிறது. இது இந்த ஆட்சிக்கு எதிரான அவர்களின் உச்ச வெளிப்பாடாகவே கொள்ளத்தக்கது.

உண்மையில் முஸ்லிம்களின் இந்தச் செயற்பாடுகள் உயிர்த்த ஞாயிறுக்கறைகளைக் கழுவுவதற்கான ஓர் ஏற்பாடாகும். அதேவேளை நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவைப்படும்போதெல்லாம் இதே ஆட்சிக்கு வாக்களித்துத் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முற்பட்டுத் தோற்றுப் போயினர். 20ஆவது திருத்தத்தைக் கோத்தாபய தரப்பு இலகுவாக நிறைவேற்றுவதற்கு இறுதி நேரத்தில் கைகொடுத்தவர்கள் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களே.

தற்போதும் அமைச்சரவையில் அலிசப்ரி, ஹாபிஸ்நசீர், முஷாரப், எனப் பலர் அமைச்சுப் பதவிகளில் உள்ளனர். அந்த வகையில் அரசுக்கு எதிரான இடத்திலும் ஆதரவான இடத்திலும் முஸ்லிம்கள் நிற்கிறார்கள். இதன் மூலம் எங்கும் முஸ்லிம்கள் எதிலும் முஸ்லிம்கள் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியுள்ளனர். கோத்தாபய வீட்டுக்குப் போனால் என்ன, அரசை விழவிடாது காப்பாற்றினால் என்ன இரு சந்தர்ப்பங்களிலும் முஸ்லிம்களும் உடனிருந்தார்கள் என்ற செய்தியை முஸ்லிம்கள் இப்போதும் தக்கவைத்துக்கொண்டுள்ளனர்.




> ஒரே குடும்பத்தின் அண்ணண் - தம்பி. அதைவிடக் கோத் தாபயவை அரசியலுக்குக் கொண்டு வந்ததே மகிந்த ராஜபக்சதான். மகிந்த சிங்கள மக்கள் மத்தியில் மக்கள் தலைவர் மட்டுமல்லாது தென் பகுதியிலிருந்து வந்த ஓர்மமான மீசை வைத்த தலைவர்.

நியூட்டன்

# சேற்றில் சிக்கிய ராஜபக்சாக்கள்...!

**''கால்ஆழ் களரில் நரிஅடும் கண்அஞ்சா வேலாள் முகத்த களிறு''**

மேற்சொன்ன திருக்குறளின் அர்த்தம் என்னவென்றால், வேல் வீரன் ஒருவனைத் தனது கொம்பால் குத்தி எறிந்த பலம்கொண்ட யானையாக இருந்தாலும் அதன் கால் சேற்று நிலத்தில் அகப்பட்டுவிட்டால் நரிகள் கூட அதைக் கொன்றுவிடும் என்பதாகும். இத்தகைய ஒரு சூழலே யானையை ஒத்த பலமுள்ளதாக இருந்த ராஜபக்ச குடும்பத்துக்கும் ஏற்பட்டிருக்கிறது.

வெகுவிரைவாக வளர்ந்து வந்து அரசியலில் கோலோச்சிய ஒரு குடும்பத்தைக் கேலி செய்வது, நையாண்டி பண்ணுவது, பழிப்பது, நக்கலடிப்பது, விசிலடிப்பது, கூக்குரல் இடுவது, ஒப்பாரி வைப்பது, வசைபாடுவது எனச் சாதாரண மக்களும் சமூக வலைத்தளங்களும் பலவகையான தூற்றுதலுக்கு உட்படுத்தி வருகின்றனர். ஆனாலும் அரச தலைவரும், தலைமை அமைச்சரும் பதவி விலகப் பின்னடிக்கிறார்கள். இந்த நெருக்கடி நிலமைக்கு மத்தியிலும் அவர்கள் பதவி விலகப் பின்னடிப்பதற்கு ஒரு வலுவான காரணம் இருக்க வேண்டும்.

**ஏன் பின்னடிக்கிறார்கள்...?**

ராஜபக்சாக்களில் சமல் ராஜபக்ச, மகிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச, பசில் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச, சசீந்திர ராஜபக்ச, பவித்ரா வன்னியாராய்ச்சி என எல்லோரும் இந்தப் போராட்டச் சூழலில் உடைந்துபோய் விட்டனர். இது மக்களின் சுற்றி வளைப்புக்கும் எதிர்ப்புக்கும் கிடைத்த வெற்றியாகக் கருதப்பட்டாலும் முக்கிய புள்ளிகளான அரச தலைவரும் தலைமை அமைச்சரும் பதவி விலகுவதற்குத் தொடர்ந்தும் பின்னடிக்கிறார்கள். நல்லாட்சி அரசில் அல்லது அதற்கு முன்னரான அரசுகளில் இருந்ததுபோல அரச தலைவர் ஒரு கட்சியையும் தலைமை அமைச்சர் மற்றொரு கட்சியையும் சார்ந்தவராக இருந்தால் தற்போதுள்ள விடாப்பிடிச் சூழல் அமைந்திருக்க வாய்ப்பில்லை. இங்கு அரச தலைவரும் தலைமை அமைச்சரும் ஒரே கட்சிக்காரர்கள். ஒரே குடும்பத்தின் அண்ணண் - தம்பி. அதைவிடக் கோத்தாபயவை அரசியலுக்குக் கொண்டு வந்ததே மகிந்த ராஜபக்சதான். மகிந்த சிங்கள மக்கள் மத்தியில் மக்கள் தலைவர் மட்டுமல்லாது தென் பகுதியிலிருந்து வந்த ஓர்மமான மீசை வைத்த தலைவர். அவரால் சிங்களவரை மட்டுமல்லாது சிறுபான்மை இனங்களையும் சுமூகமான உறவுகளுடன் அணுக முடிந்தது.

தமிழரில் முக்கியமானவர்கள்கூடத் தமது பிறந்தநாளுக்கு மகிந்தவை அழைத்து கேக் வெட்டும் அளவுக்கு மகிந்த சாதாரண உறவுகளைப் பேணியிருந்தார். விடுதலைப் புலிகளை அழித்ததில் சிங்கள மக்கள் மத்தியில் பிரபலம் பெற்ற மகிந்த ராஜபக்ச புலிகளைத் தோற்கடித்தபோது அள்ளிச்சென்ற தங்கம், வெளிநாட்டு நாணயங்களால் அப்போதைய படைத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவுடன் முரண்பட்டார் என்று சிங்கள ஊடகங்கள் பல சுட்டிக்காட்டின. இந்த முரண்பாடு சரத்பான் சேகாவைச் சிறைக்குள் அடைக்கும் நிலை வரை தள்ளியது.

2015இல் தேர்தலின் போது தன்னை எதிர்த்துப்போராடவோ வெற்றி பெறவோ எதிரில் எவருமில்லாததால் தான் தனது நிழலுடன் தான் போட்டி போட இருக்கிறது என்று கர்வத்துடன் மகிந்த ராஜபக்ச களமிறங்கியபோது சிறுபான்மை இனங்களான முஸ்லிம்களும் தமிழரும் மகிந்தவுக்கு எதிராக வாக்களிதததால் சற்றும் எதிர்பாராத தோல்வியை மகிந்த அடைந்தார். அதன் பின்ர் பசில் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச ஆகியோர் சிறைக்குச் செல்லும் நிலை இருந்தது. அடுத்தது மகிந்த சிறைப்பிடிக்கப்படுவார் எனப் பலராலும் எதிர்பார்க்கப்பட்டபோதும் மகிந்தவும் அவரது மனைவியும் ஒருபோதும் கைதுசெய்யப்பட மாட்டார்கள் என அப்போதைய தலைமை அமைச்சரான ரணில் விக்கிரமசிங்க வெளிப்படையாகக் கூறினார். அதற்கு மாறாக அவர் செயற்படவில்லை.

ரணிலைப் பல தடைவைகள் ஐ.தே.கட்சியின் தலைவர் பதவியிலிருந்து ஓரம் கட்டுவதற்குக் கட்சிக்குள் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின்போது (2005-2015 வரை) அதைச் செய்யவிடாது ரணிலைப் பாதுகாத்தவர் மகிந்த. அந்த நன்றிக்கடனையே பின்னர் நல்லாட்சிக் காலத்தில் மகிந்த விடயத்தில் ரணில் மேற்கொண்



## சேற்றில் சிக்கிய...

டார். தற்போதுகூட 21ஆம் அரசமைப்புத் திருத்தம் மூலம் இலங்கையில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகளைத் தீர்த்துவிட முடியாது என்று ரணில் கூறுகின்றார். அதற்கூடாக ராஜபக்சக்களின் அதிகாரங்கள் குறைக்கப்படாமல் பேணிக் காக்க அவர் முற்படுகின்றார்.





### கெட்ட இறந்த காலங்கள்

ராஜபக்சாக்களின் கெட்ட இறந்த காலங்கள் தற்போது அவர்களைத் துரத்திக்கொண்டிருக்கின்றன. ராஜபக்சாக்களின் களவுகள், முறைகேடுகளை விசாரிக்க பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவை நியமிக்க இருக்கிறேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அறிவித்துள்ள நிலையில் சரத் பொன்சேகாவும் தான் அதை நிறைவேற்றுவேன் என்றிருக்கிறார். எனவே புதிதாக அமையவிருக்கும் அரசு ராஜபக்ச குடும்பத்தைப் பழி வாங்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவே கோத்தாபய ராஜபக்ச, மகிந்த ராஜபக்ச, ஏனைய சகோதரர்கள் தமது இறுதிக் காலத்தைச் சிறையில் கழிக்க அதிக வாய்ப்புண்டு.

எதிர்க்கட்சிகள் கூறுவதுபோல மகிந்த குடும்பத்தின் வெளிநாடுகளில் உள்ள சொத்துகளை இலங்கைக்குக் கொண்டுவருவது என்பது இலகுவான காரியமாகப் புதிய ஆட்சியாளர்களுக்கு இருக்காது.

போர்ச் செலவு, கொரோனா, யூறியா, டொலர் பிரச்சினைகள் எனத் தொடர்ச்சியாகப் பல்வேறு பிரச்சினைகள் 2019இன் பின்னர் இலங்கைக்கு ஏற்பட்டாலும் ஓய்வு பெற்ற படைத்தளபதிகளைப் போசிப்பதற்காகப் புதிய பதவிகள், ஊதியங்கள், வாகனங்கள், படைப் பாதுகாப்புப் போன்ற விடயங்களில் ஏற்படுத்தப்பட்ட மேலதிக செலவுகள், விரும்புப் போதெல்லாம் பணத்தை மத்திய வங்கி அச்சிடும் நிலை, வெளிநாடுகளில் பெற்றுக்கொண்ட அளவுக்கதிகமான கடன்கள் என்பனவே ராஜபக்ச குடும்பத்தைச் சுற்றிவளைத்திருக்கிறது.



சங்க சபை (பிக்குகளின் சபை) எடுத்த தீர்மானத்துக்கு மகிந்த பதவியிறங்கும் நிலையிருந்த போதும் சர்வ கட்சி அரசு ஒன்றை அமைக்கும் சங்க சபையின் நோக்கத்துக்கு சஜித் பிரேமதாசவும் அனுரகுமார திசாநாயக்காவும் எதிர்ப்புத் தெரிவித்திருப்பது மகிந்தவைத் தற்போதைய நெருக்கடியிலிருந்து காப்பாற்றியிருக்கிறது. எதிர்க் கட்சிகளாலும் அரசுக்கு எதிரான போராட்டக்காரர் களாலும் முன்வைக்கப்படும் பழிக்குப் பழி என்ற விடயமும் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவி துறந்து வீடு செல்லவேண்டும் எனக்கோருவதும் ராஜபக்ச குடும்பத்துக்குத் தற்போதுள்ள சாதகமான சூழலாகும். யானையின் கால்கள் சேற்றுக்குள் இறுகிவிட்ட சூழல் ராஜபக்ச குடும்பத்துக்கு இருப்பதால் சேற்றை விட்டு வெளியேறினால் மட்டுமே சுற்றி வளைத்திருக்கும் நரிகளிடமிருந்து தப்ப முடியும். இந்தப் போராட்டமானது ஒரு வகையில் சிங்கள மக்கள் தமக்கான ஜனநாயகத்தை உருவாக்கவும் சிங்களப் பெரும்பான்மையினரிடமிருந்து புதிய தலைவர் ஒருவரை உருவாக்கவுமே வாய்ப்பேற்படுத்தும். சிறுபான்மை இனங்களின் நிலை எண்ணெய்ச் சட்டிக்குள் இருந்து தவறி அடுப்புக்குள் விழுந்தது போலாகும் வாய்ப்பே அதிகமுண்டு.

---



# கணவாய்ப் பொரியல்...!

*இந்த வார சமையல்*



மீனைப் பொரிப்பது என்பது மிகச் சிறிய சமையல் விடயமாக இருந்தபோதிலும் அது குறித்துப் பலருக்கும் பல தெரியாமைகள் இருக்கவே செய்கின்றன. ஆனாலும் அன்றாடம் பலரும் மீன்பொரிக்கிறார்கள். மீனைப் பொரிக்கப் பழக்கப்பட்டவர்களுக்கும், மின்கூடப் பொரிக்கத் தெரியாதவர்களுக்கும் இந்தக் கணவாய்ப் பொரியல் புதிய விடயமாக இருக்கும். கணவாய் மீனைப் பொரிக்க முடியுமா? என்பதைப் பலர் ஆச்சரியத்துடனும் கேட்கலாம். காரணம் கணவாய் மீனில் கறி மற்றும் அவித்த பிரட்டல் ஆகியவற்றையே ஆக்கியுண்ணும் பழக்கம் பரவலாக இருக்கிறது. அத்தோடு கணவாய் மீனைப் பொரிப்பது என்பது மீனைப் பொரிப்பதுபோல சாதரண விடயமுமல்ல. ஆபத்தானது....!

கணவாய் மீனைப் பொரிப்பதற்குப் பலரும் விரும்புவதில்லை. காரணம் பொரிக்கும்போது வெடிப்புகளுடன் எண்ணெய்யைச் சிதற வைக்கும் தன்மை அதற்குண்டு. நீர்ப்பற்று நிறைந்த கணவாயின் தசைகள் எண்ணெய்யில் பொரிந்து சுருக்கமடையும்போது வெடிக்கும். அதன்போது சூடாகவுள்ள எண்ணெய் சமையலாளிக்கு ஆபத்தை ஏற்படுத்தும். இதனாலேயே கணவாய் மீனைப் பொரிப்பது அரிது. கடைகளில்கூடக் கணவாய் டெவலே சுவைக்கும் வாய்ப்பு அதிகமுண்டு. அவித்து எண்ணெய்யில் வதக்கிய கணவாய்ப் பிரட்டலாக அந்த டெவல் இருக்கும். கணவாயை அவிக்காமல் அப்படியே பொரித்தெடுப்பது பற்றி இந்த வாரச் சமையல் பகுதியில் பார்ப்போம். முயற்சிப்பவர்கள் மிக அவதானத்துடன் செயற்படுவது நல்லது.

### தேவையான பொருள்கள்

இதற்குத் தேவையானது கணவாய் மீன்கள், மிளகாய்த்தூள், தேங்காய் - மரக்கறி எண்ணெய் மற்றும் உப்பு.

### எப்படிப் பொரிப்பது...?

கணவாய் மீன்களைச் சுத்தம் செய்து வெட்டிக் கொள்ளுங்கள். வட்ட வடிவிலோ, சிறிய சதுரங்களாகவோ வெட்டியதும் தூள் மற்றும் உப்பிட்டுப் பிரட்டிக்கொள்ளுங்கள். சிறிது நேரம் வரை ஊற வைத்ததும் சட்டி ஒன்றை எடுத்து அடுப்பில் வைத்து எண்ணெய்யை விட்டுச் சூடாக்குங்கள். எண்ணெய் சூடாகியதும் கணவாய் மீன் துண்டுகளைப் போட்டு உடனடியாகவே மூடு சட்டியால் மூடிவிடுங்கள். மூடு சட்டியை அழுத்தமாக மூடினால் எண்ணெய் வெடித்துப் பறப்பதில் இருந்து பாதுகாப்புப் பெற முடியும். வெடிப்புச் சத்தங்கள் குறைந்துவிட்டால் கணவாய் மீன்கள் பொரிந்து விட்டன என்று அர்த்தம். அப்போது இறக்கிப் பொரியலைச் சுவைத்துப் பாருங்கள். அவித்த பின்னர் எண்ணெய்யில் வதக்கி உண்கிற கணவாய் டெவலுக்கும் இந்தக் கணவாய்ப் பொரியலுக்குமுள்ள சுவையை உணர்வீர்கள். அதேநேரம் பலரும் அதை ஏன் பொரிக்க விரும்புகிறார்கள் இல்லை என்ற ஆபத்தையும் உணர்வீர்கள். இந்தக் கணவாய்ப் பொரியலுக்குத் தேர்ந்தெடுக்கும் சட்டிக்குத் தகுந்த மூடி இருப்பது அவசியம் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

# எலான் மஸ்க்...

தணிக்கை நடவடிக்கைகளை ட்விட்டர் நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. இந்த வகையில், அமெரிக்காவின் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ட்விட்டரிலிருந்து நிரந்தரமாகத் தடைசெய்யப்பட்டுள்ளார்.

ஆனால், சட்டத்துக்குப் புறம்பாக இல்லாத எந்த ஒரு கருத்துக்கும் ட்விட்டரில் இடமளிக்கப்பட வேண்டும் என்கிறார் மஸ்க். கருத்து/பேச்சு சுதந்திரத்தின் முற்றுமுழுதான ஆதரவாளர் என்று தன்னை முன்வைக்கிறார். மேலும், பயனர்களுக்கு எந்தெந்த ட்வீட்களை முன்னிலைப்படுத்திக் காண்பிப்பது என்பதை முடிவுசெய்யும் அல்காரிதங்களில் வெளிப்படைத் தன்மையைக் கொண்டுவருவது, ஃபேஸ்புக் பதிவுகளுக்கு இருப்பதுபோல் ட்வீட்களைத் திருத்துவதற்கான எடிட்டிங் வசதியை அறிமுகப்படுத்துவது, நபர்கள் மூலம் அல்லாமல் மென்பொருள் மூலம் இயக்கப்படும் ட்விட்டர் பாட் (BOT) கணக்குகளை நீக்குவது, பிரபலங்களின் அதிகாரபூர்வ கணக்குகளுக்கு மட்டுமே அளிக்கப்பட்டுவந்த நீல டிக் அங்கீகாரத்தைத் தனி நபர்களால் இயக்கப்படும் அனைத்து ட்விட்டர் கணக்குகளுக்கும் அளிப்பது உள்ளிட்ட பல மாற்றங்களைக் கொண்டுவரத் திட்டமிட்டிருக்கிறார் எலான் மஸ்க்.

**கருத்துச் சுதந்திரம் X அவதூறுகள்**

மஸ்க் முன்வைக்கும் மாற்றங்கள் அனைத்துக்கும் நல்விளைவுகளும் உண்டு, தீய விளைவுகளும் உண்டு. கருத்துச் சுதந்திரத்துக்கு முற்றுமுழுதான ஆதரவு என்னும் பெயரில் ஆதாரமற்ற பொய்யான கருத்துகளையும் வசைகளையும் அனுமதிப்பது சமூகத்தில் தவறான தகவல்களைப் பரப்புவதோடு, தனிநபர்கள் மீதான தாக்குதல்களை இயல்பாக்கிவிடும். ஏற்கெனவே ட்விட்டரில் இவை அதிகமாக இருந்ததால்தான் ட்விட்டர் நிர்வாகம் தணிக்கை நடவடிக்கைகளைச் செயல்படுத்திவந்தது. அவற்றிலேயே பல போதாமைகள் இருப்பதாக மக்களாட்சிச் சிந்தனையாளர்களும் மனித உரிமைச் செயல்பாட்டாளர்களும் குற்றம்சாட்டிவருகையில், கருத்துச் சுதந்திரத்தின் பெயரில் இந்தத் தணிக்கை முறையை நீக்குவதோ மாற்றியமைப்பதோ நன்மையைவிடத் தீமையையே கொண்டுவரும் என்று அஞ்சப்படுகிறது.

அதேநேரம், இந்தத் தணிக்கை முறையை ட்விட்டர் நிறுவனம் தவறாகப் பயன்படுத்தியதற்கான குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன. 2020 அமெரிக்க அதிபர் தேர்தலை ஒட்டி, அமெரிக்க அதிபர் பதவிக்குப் போட்டியிட்ட ஜோ பைடன், அவருடைய மகன் ஹண்டர் பைடன் ஆகிய இருவர் மீதும் கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்த 'நியூயார்க் போஸ்ட்' கட்டுரை ட்விட்டரிலிருந்து நீக்கப்பட்டதைத் தீவிர வலதுசாரிகளும் குடியரசுக் கட்சியின் ஆதரவாளர்களும் கடுமையாக விமர்சிக்கிறார்கள். பொதுவாகவே, ட்விட்டர் நிறுவனம் இடது தாராளவாதப் போக்குக்கு ஆதரவாக இருப்பதாக தீவிர வலதுசாரிகள் குற்றம்சாட்டிவருகிறார்கள். ஜனநாயகக் கட்சி மீதான சாய்வும் அதிகமாக இருப்பதாகவும் கருதப்படுகிறது. இந்தப் பின்னணியில் மஸ்க் ட்விட்டரைக் கைப்பற்றியிருப்பது குடியரசுக் கட்சி ஆதரவு முகாமில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

**ஊழியர்களின் எதிர்காலம்**

ட்விட்டரின் ஊழியர்கள் நிலை என்னவாகும் என்கிற கேள்விக்கு இப்போதைக்குத் தெளிவான விடை தெரியவில்லை. ஐந்தரை மாதங்களுக்கு முன் ட்விட்டர் சி.இ.ஓ.வாகப் பொறுப்பேற்ற பராக் அகர்வால், ட்விட்டரில் கணக்குகளை முடக்குவது உள்ளிட்ட போலித் தகவல் தடுப்பு நடவடிக்கைகளில் முக்கியப் பங்கு வகித்த சட்டப் பிரிவுத் தலைவர் விஜயா கட்டே உள்ளிட்ட இந்திய-அமெரிக்கர்கள் அந்தப் பதவிகளிலிருந்து நீக்கப்படுவார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

ட்விட்டரை மஸ்க் கைப்பற்றிய பிறகு நிகழ்ந்த ஊழியர் கூட்டத்தில் விஜயா கண்ணீர் சிந்தி அழுததாகச் செய்திகள் வெளியாகின. விஜயா கட்டேவை மஸ்க் கடுமையாக விமர்சித்துவருகிறார். நீக்கப்பட்டாலும் இவ்விருவரும் அதற்கான இழப்பீட்டுத் தொகையைப் பெறுவார்கள். பிற ஊழியர்கள் இந்த ஆண்டின் இறுதிவரை வேலையை விட்டு நீக்கப்பட மாட்டார்கள் என்று ஊழியர்களுக்கிடையிலான கூட்டத்தில் பராக் அகர்வால் உறுதியளித்துள்ளார். ஊழியர்களை நீக்குவது அல்லது தக்கவைத்துக்கொள்வது குறித்து எலான் மஸ்க் இதுவரை எதுவும் பேசவில்லை.

ஆனால், ட்விட்டரைக் கைப்பற்றுவதற்கான தொகையில் கிட்டத்தட்ட பாதியை எலான் மஸ்க் ரொக்கமாகக் கொடுத்தாக வேண்டும். இதற்காகக் கடன் கொடுக்கும் வங்கிகளிடம் அவர் ட்விட்டரின் ஊழியர்கள் எண்ணிக்கையைக் குறைப்பது, ட்வீட்கள் மூலம் வருவாய் ஈட்டுவது உள்ளிட்ட நடவடிக்கைகளால் ட்விட்டரின் நிதிநிலைமையை மேம்படுத்தப்போவதாக உத்தரவாதம் அளித்திருக்கிறார் என்னும் செய்திகள் வெளியாகியுள்ளன.

லாப நோக்கத்தை முதன்மைப்படுத்தாத பொதுப் பங்கு நிறுவனமாக இருந்த ட்விட்டர், தனியார் நிறுவனமாக, பெரும் பணக்காரரான ஒற்றை நபரின் கட்டுப்பாட்டுக்குள் சென்றுள்ளது. தனிநபர்கள் எவ்வளவு மக்களாட்சி விழுமியங்களைப் பேணுகிறவர்களாக, நவீன சிந்தனைகளைக் கொண்டவர்களாக இருந்தாலும் அவர்கள் முழுமையாக ஒரு விஷயத்தைக் கட்டுப்படுத்துவது மக்களாட்சித் தத்துவத்திற்கு நல்லதல்ல என்னும் குரல் முற்றிலும் புறக்கணிக்கத்தக்கதல்ல.




# ஒரே ஷாட்டில் எப்படி உருவானது 'இரவின் நிழல்'?

பார்வையாளர்களுக்குப் புதிய அனுபவத்தைக் கொடுக்கவேண்டும் என்பதில் ஆர்வம் குன்றாதவர் பார்த்தீபன் இராதாகிருஷ்ணன். அவருடைய 'ஹவுஸ் ஃபுல்', 'குடைக்குள் மழை', 'கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்' போன்ற சோதனை முயற்சித் திரைப்படங்கள் பல. அவை பொருளாதார ரீதியாக வெற்றிபெற்றதோ இல்லையோ, தனது முயற்சிகளை அவர் கைவிட்டதில்லை. தன்னைப் போன்ற ஒருவன், உருவக் கவர்ச்சியோ திரைத் துறையில் பெரியளவிலான வர்த்தக வாய்ப்போ கொண்டிருக்காத ஒருவன் இப்படி எதையாவது புதிது புதிதாகச் செய்தால்தான் இந்தத் துறையில் நிலைத் திருக்க முடியும் என்று ஒரு நேர்காணலில் கூறியிருப்பார்.

அந்த வரிசையில் 2019ஆம் ஆண்டு 'ஒத்த செருப்பு சைஸ் 7' படத்தைக் கொடுத்தார். ஒரேயொரு கதாபாத்திரம் மட்டுமே திரையில் தோன்றித் தன் கதையைக் கூறும் உத்தியை, தரமான ஒளிப்பதிவு, ஒலியாக்கம், குரல் நடிப்பு, இசை ஆகியவற்றின் துணையுடன் சிறந்த முறையில் உருவாக்கம் செய்து, பார்வையாளர்களின் உள்ளத்தைத் தொட்ட 'ஒத்த செருப்பு சைஸ் 7' திரையரங்கு, படவிழாக்கள் என இரு தளங்களிலும் பாராட்டுகளைக் குவித்தது.

தற்போது மீண்டும் 'இரவின் நிழல்' என்கிற சாதனையைச் செய்திருக்கிறார், மூன்று முறை இந்திய தேசிய விருது பெற்றவரான பார்த்திபன். 'நான் - லீனியர்' கதை சொல்லும் உத்தியில், ஆனால், ஒரே ஷாட்டில் (அதாவது ஒரு தடவை கமெராவை இயக்கிவிட்டால் அதனை நிறுத்தாமல் மொத்தத்தையும் பதிவு செய்வதையே ஒரே ஷாட் என்று சொல்லப்படும்) ஒளிப்பதிவு செய்யப்பட்டிருக்கும் இந்தப் படத்தை எழுதி, இயக்கி, தயாரித்து, நடித்திருக்கிறார்.

**எப்படிச் சாத்தியமானது 'இரவின் நிழல்'?**

59 பிரிவுகள் கொண்ட பிரமாண்டமான அரங்கத்தில், 300 நடிகர்கள், 150 தொழில்நுட்ப வல்லுநர்கள், ஏராளமான ஆடை, ஒப்பனை மாற்றங்களுடன் 50 வருடம் பயணிக்கும் கதைக்களம் கொண்ட உலகின் முதல் 'நான்-லீனியர் சிங்கிள் ஷாட்' படமாக 'இரவின் நிழல்' படத்தை உருவாக்கியிருக்கிறார்.

சென்னையில் நடக்கிறது கதை. முறையற்ற உறவில் பிறக்கும் ஒரு குழந்தையுடைய வாழ்க்கைப் பயணத்தின் பல்வேறு கால கட்டங்கள், முன்னும் பின்னுமாக 'நான் - லீனியர்' திரைக்கதையில் சொல்லப்பட்டுள்ளன.

'இரவின் நிழல்' படத்தின் திரைக்கதையை கடந்த 10 வருடங்களாக எழுதி வந்திருக்கிறார் பார்த்திபன்.

முதலில் 59 பகுதிகள் கொண்ட செட் அமைக்கப்பட்டு, அவை இறுதி செய்யப்பட்டதும் அதில் தொடர்ந்து 90 நாட்கள் ஒத்திகை செய்து பார்க்கப்பட்டிருக்கிறது. ஒத்திகையில் நடிகர்கள் அத்தனை பேரும் அவரவர் இடத்தில் கேமராவின் வருகைக்காகக் காத்திருந்து நடித்திருக்கிறார்கள். இந்தப் படத்தில் பெரியவர்களுடன் குழந்தைகள் நடித்துள்ளார்கள். விலங்குகளும்கூட நடித்துள்ளன.

கதையோட்டத்துக்கு ஏற்ப 64 ஏக்கரில் 50 பகுதிகளாக அரங்கு அமைக்கப்பட்டிருக்கிறது. முதன்மைக்

# நம்மவூர்ச் சுத்துமாத்து

## வட்டிக்குப் பணம்வாங்குதிலும் கொடுப்பதிலும் தில்லுமுல்லு



கணேசன் - கிளிநொச்சி

வட்டிக்குப் பணம் வாங்குவதற்கு முற்படுபவர்கள் பலரும் வட் டிக்குப் பணம் கொடுப்பவர்கள் பலரும் தில்லுமுல்லுகளின் உறைவிடங்களாக இருக்கின்றனர். வட்டிக்குப் பணம் வாங்க வருபவரது வருமான வழிகள் அனைத்தும் முற்றாக அடைபட்டுப்போயுள்ள நிலையிலேயே தன்னிடம் வருகிறார் என்பது வட்டிக்குப் பணம் கொடுப்பவர்கள் பலருக்கும் தெரிந்திருப்பதில்லை. தெரிந்திருந்தாலும் காட்டிக்கொள்ளாமல் பணத்தை வழங்குகின்றனர். வட்டிக்குப் பணம் வாங்கும் ஏழ்மை நிலை ஏற்பட்டதை வெளிக்காட்டாத பெண்கள் பலர் தாம் சகல நகைகளையும் வைத்திருப்பதாகக் காட்டுவது, ஆடம்பர வாழ்க்கையை அனுபவிப்பதாகக் காட்டுவது, வெளிநாடு மற்றும் பல வழிகளில் தமக்கு வருமானம் வருவதுபேன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியிருப்பது எனப் பல செயல்களைச் செய்து பணத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

வட்டிக்குப் பணம் கொடுப்பவர் அதை மீளளிக்கக்கூடிய தக்க வருமானம் உள்ள ஒருவருக்குக் கொடுக்கவே விரும்புவார். அதன் மூலம் தனது பணம் அதிக வட்டியுடன் திரும்பி வரும் என்று எதிர்பார்க்கிறார்.

வட்டிக்குப் பணம் வாங்குபவர்கள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னரே வட்டியை மாத்திரம் சில மாதங்களுக்கு ஒழுங்காகக் கட்டிக்கொள்வதால் (அதற்காக வேறு கடன்படுவதும் உண்டு) பணம் கொடுத்தவர் திருப்தி அடைகிறார். தனது பணத்துக்கு வங்கி ஒரு வருடத்துக்குக் கொடுக்கும் வட்டியை அல்லது தேறிய லாபத்தைத் தன்னிடம் பணம் வாங்கியவர் ஒருசில மாதங்களில் தருகிறார் என்கிற திருப்தி அவருக்கு ஏற்படுகிறது.

தன்னால் இனிமேல் உழைக்கமுடியாது என்கிற நிலையிலும் வருமானம் தடைப்பட்டு இறுகிப்போயுள்ள நிலையிலும் தனது வருமானத்தைக் கொண்டு இனிமேலும் அவற்றிலிருந்து மீள முடியாது என்று முடிவெடுத்த பின்னரே பலரும் வட்டிக்குப் பணம் பெற முடிவெடுப்பதால் தாம் வாங்கும் முதலைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் திண்டாடுகிறார்கள். தொடக்கத்தில் வட்டிக்குப் பயந்து பணம் வாங்காது இருந்தவர்கள்கூட தமது ஆடம்பர வாழ்க்கைக்காக வட்டிக்குப் பணம் வாங்குகின்றனர். ஆனால், கடன்பட்டார் நெஞ்சம்போல கலங்கினான் இலங்கை வேந்தன். என்ற கம்பராமாயண பாடலுக்கு எதிரான மனநிலையிலேயே வட்டிக்குப் பணம் வாங்குபவர்கள் செயற்படுகிறார்கள். கலங்காது தில்லு முல்லுகளைச் செய்கின்றனர்.

வட்டிக்குப் பணம் கொடுத்தவர்களில் பெரும்பாலானவர்கள் தமது முதலை மீள வாங்கியதாகச் சரித்திரமே இல்லை. இவ்வாறு வட்டிக்குப் பணம் வாங்குபவர்கள் பல நபர்களிடம் ஒரே நேரத்தில் பெருந்தொகைப் பணத்தை வட்டிக்கு வாங்கிவிடுகின்றனர். இறுதியில் அவர்கள் வழமையாகச் செலுத்தி வந்த வட்டியையும் செலுத்தாது விடுகின்றனர். இதுவிடயத்தில் காவல்துறை, நீதிமன்றம் எனச் சென்றாலும் "இப்ப பண வசதி இல்லை. கிடைக்கிறபோது தருவேன்" அல்லது "கொஞ்சம் கொஞ்சமாகத் தருகிறேன்" என்று முடித்து விடுகின்றனர். இதனால் பணம் கொடுத்தவர் உயிரை மாய்க்கும் நிலையும் பல பக்கங்களில் வட்டிக்கு வாங்கியதால் அவர்கள் நெருக்கும் நிலையில் வெளியே தலைகாட்ட முடியாமல் கடன் வாங்கியவர் குடும்பமாக உயிர்மாய்க்கும் நிலையும் பல இடங்களில் ஏற்பட்டிருக்கிறது. இன்று தமிழ்ச் சமூகம் எதிர்கொள்ளும் முக்கிய சுத்துமாத்துகளில் வட்டிக்குப் பணம் கொடுப்பதும் - வாங்குவதும் முதன்மையானது. அண்மையில் யாழ்ப்பாணம் கிழக்கு அரியாலையில் வட்டிக்குப் பணம் கொடுத்தவரைக் கொன்று புதைத்த நிலை அதன் உச்சமேயாகும்.

# ஒரே ஷாட்டில்...



கதாபாத்திரத்தின் 60 ஆண்டுக் கால வாழ்க்கையைப் பிரதிபலிப்பதற்கு அரங்க அமைப்பு முக்கியப் பங்காற்றியுள்ளது. கதாபாத்திரத்தின் ஒவ்வொரு காலகட்டத்தையும் கச்சிதமாகக் காட்டும் வகையில் இந்த செட்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

நடிகர்கள், தொழில்நுட்பக் குழுவினர் உள்ளிட்ட 350 பேர் கொண்ட படக் குழுவினருடன் 90 நாட்கள் ஒத்திகையின்போது ஒருவர்கூட வராமல்விட்டதில்லை.

காட்சிக்கு ஏற்ற மாதிரி ஒவ்வொரு அரங்கிலும் வெயில், மழை என வானிலையும் மாற்றி அமைத்துள்ளனர்.

ஒரு முழு நீளத் திரைப்படம் ஒரே ஷாட்டில் எனும்போது, அதற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய கேமராவையும் அதைத் தூக்கிச் செல்வதற்கான கருவியையும் தேர்வு செய்வதில் நடைமுறைச் சாத்தியங்களை மனதில் கொண்டு செயல்பட்டுள்ளனர். சிங்கிள் ஷாட் முழுவதும் ஜிம்பல் கருவியின் துணைகொண்டு படமாக்கப்பட்டிருக்கிறது.

ஒருசில நிமிடக் காட்சியை ஒரே ஷாட்டில் எடுப்பது என்றாலே கேமராவில் 'ஃபோகஸ் ஷிப்ட்' செய்வது மிகவும் கடினமான சவால்! ஆனால் 'இரவின் நிழல்' படத்தில், 59 செட்களின் குறுகிய சந்துகள், மூலை, முடுக்குகளைக் கடக்கும் கேமரா, 100 நிமிடங்கள், 19 வினாடிகள் கொண்ட ஒரே காட்சியைப் படம் பிடித்த நிலையில், தேவைப்படும் அனைத்து இடங்களுக்கும் 'ஃபோகஸ் ஷிப்ட்' செய்து அசத்தியிருக்கிறார்கள் படக்குழுவினர்.

படத்துக்கு ஆஸ்கார் நாயகன் ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துள்ளார். படத்தில் இடம்பெற்றுள்ள மூன்று பாடல்களை ஒரே கோர்வையில் இசையமைத்துள்ளார். ஆஸ்கார் விருது பெற்ற கலைஞரான கிரேக் மான், ஒலிய மைப்பு மேற்பார்வை பணிகளையும் மற்றொரு ஆஸ்கர் விருதுபெற்ற கலைஞரான கோட்ட லாங்கோலியோன் வி.எஃப்.எக்ஸ் பணிகளையும் செய்துள்ளனர்.தற்போது 'இரவின் நிழல்' படத்தின் முதல் தனிப் பாடல் வெளியாகி, வரவேற்பைப் பெற்று வருகிறது.

# மலைகளின் வெற்றி



வில்லியம் பாக்னர்

தமிழில் கார்குழலி

(கடந்த வார தொடர்ச்சி)

'அங்கே இருக்கும் பெண்கள் தினமும் காலணி அணிவார்களா?' என்றாள்.

கறுப்பினத்தவன் சமையலறையைக் கண்களால் துழாவினான். 'டென்னெஸ்ஸியின் சுனை நீரை எங்கே வைத்திருப்பீர்கள்? இங்கே எங்காவது இருக்குமா?'

'சுனை நீரா?'

கண்ணை மெல்லச் சிமிட்டினான். 'விளக்கு குடிக்குமே? அந்த கெரோசின்தான்.'

'கெரோசினா?'

'நீங்கள் எல்லோரும் குடிக்கிறீர்களே, அந்த வெளிர்நிற விளக்கு எண்ணெய். அதில் கொஞ்சம் இங்கே எங்காவது கிடைக்குமா?'

'ஓ, சோளத்தில் வடித்த மதுபானமா?' என்றபடி அறையின் மூலையில் நிலத்தை மூடியிருந்த பலகையை மேலே தூக்கினாள். உள்ளே இருந்த மண் குடுவையை எடுத்து அதில் இருந்ததைக் கனமான கோப்பையில் சரித்து அவனிடம் நீட்டினாள். அதைக் கண்ணை மூடிக்கொண்டு ஒரே மடக்கில் விழுங்கினான்.

'வ்வ்ஹ்ஹ்ஹ,' என ஓசை எழுப்பியபடி புறங்கையால் வாயைத் துடைத்தான்.

'என்னை ஏதோ கேட்டாயே.. என்னது?' என்றான்.

'கவுண்டிமேய்ஸனில் இருக்கும் பெண்கள் எல்லோரும் காலணி அணிவார்களா?'

'சீமாட்டிகள் எல்லோரும் அணிவார்கள். யாரிடமாவது இல்லையென்றால் உடனே நூறு கறுப்பினத்தவர்களை அனுப்பி வாங்கிவரச் சொல்லுவார் எஜமானர் சோஷே. இங்கே எஜமானர் சோஷேவைக் கறுப்பினத்தவன் என்று சொன்னது யார்?'

இளம்பெண் அவனையே பார்த்தாள். 'அவருக்குத் திருமணமாகிவிட்டதா?'

'திருமணம் செய்துகொள்ள அவருக்கு எங்கே நேரம்? இத்தனை வருடமாக யாங்கிகளோடு போரிட்டோம். பல வருடமாகச் சொந்த ஊருக்குப் போகவே இல்லை. இப்போது திருமண வயதில் பெண்கள் யாரும் இருக்கிறார்களா என்பதே தெரியவில்லை' என்றபடியே அவளைப் பார்த்தான். வெள்ளை முழி இரத்தச் சிவப்பாக மாறி இருந்தது. தோல் பளபளத்தது. குளிர் காய்ந்ததில் அவனுடைய உருவம் கொஞ்சம் பெரிதாகி இருந்தது. 'அவருக்குத் திருமணமாகிவிட்டதா இல்லையா என்பது பற்றி உனக்கென்ன கவலை?'

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். அவள் மூச்சுவிடும் ஓசையை அவனால் கேட்க முடிந்தது. அவள் அவனைப் பார்க்கவில்லை, கண்ணைச் சிமிட்டவோ தலையைத் திருப்பவோ இல்லை. 'காலணிகூட அணியாத பெண்ணை அவன் திரும்பிப் பார்ப்பானா எனத் தெரியவில்லை' என்றாள்.

சுவரருகே சென்று பிளவின் வழியே எட்டிப் பார்த்தாள். கறுப்பினத்தவன் அவளையே பார்த்தான். உள்ளே வந்த அவள் தாய் இவர்கள் இருக்கும் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்காமல் இன்னொரு உணவுப் பாத்திரத்தை எடுத்துச் சென்றாள்.

## V

உணவருந்தும் மேசையில் நான்கு ஆண்கள் அமர்ந்திருந்தனர். சரியாகச் சொல்வதென்றால் மூன்று ஆண்களும் ஒரு சிறுவனும். குருணையாக உடைக்கப்பட்ட சோளம் கனமான தட்டில் பரிமாறப்பட்டது. கத்திகளும் முள்கரண்டிகளும் இரும்பில் செய்தவை. அந்தக் குடுவை இன்னமும் மேசையின்மீது இருந்தது. வெடெல் இப்போது மேலங்கியை அணிந்திருக்கவில்லை. முகத்தை மழித்து ஈரமான தலைமுடியைப் பின்னோக்கிச் சீவி இருந்தான். விளக்கொளியில் சட்டையின் முன்புறச் சுருக்கங்கள் அலைபோல மேலே பொங்கின. சட்டையின் வலது கை வெறுமையாக இருந்தது. மார்புக்குக் குறுக்கே மடித்து தங்க ஊசியால் குத்தி இருந்தான். மேசைக்குக் கீழே ஒரு ஜோடி உடைந்து சீராக்கப்பட்ட நடன காலணிகள், இரண்டு ஜோடி கடினமான கணுக்காலை மறைக்கும் காலணிகள், இவற்றோடு சிறுவனின் வளைந்த வெற்றுக் கால்கள் ஆகியவை தெரிந்தன.

'நீ கறுப்பினத்தவன் என்கிறான் வேட்ச்,' என்றார் தந்தை.

நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தான் வெடெல். 'இப்போது புரிகிறது,' என்றான். 'பிறவியிலேயே கோபக்காரன் என்று நினைத்தேன், எப்போதும் வெற்றியாளனாக இருக்க வேண்டும் என்பதும்தான் போல.'

'நீ கறுப்பினத்தவனா?' என்றார் தந்தை.

'இல்லை,' என்றபடியே ஆச்சரியத்தோடு சிறுவனைப் பார்த்த வெடெல்லின் முகம் போரினால் மூப்படைந்து இருந்தது. பின்கழுத்தில் படர்ந்திருந்த நீளமான முடியைத் துப்பாக்கி முனைக் கத்தியால் வெட்டி இருந்தான். ஆடாமல் அசையாமல் அவனையே பார்த்தான் சிறுவன். 'என்னைப் பிசாசு என்று நினைக்கிறானோ? ஒருவேளை நான் பிசாசுதானோ என்னவோ,' என நினைத்துக்கொண்டான் வெடெல்.

'இல்லை, நான் கறுப்பினத்தவன் இல்லை,' என்றான்.

'நீ யார்?' என்றார் தந்தை.

நாற்காலியில் பக்கவாட்டில் திரும்பி உட்கார்ந்தான் வெடெல். கையை மேசையின்மீது வைத்திருந்தான். 'விருந்தினர்களை நீ யார் என்று கேட்பதுதான் டென்னெஸ்ஸியில் வழக்கமா?' குடுவையில் இருப்பதைக் கோப்பையில் ஊற்றினான் வேட்ச். தலையைக் கீழே குனிந்திருந்தான், கைகள் பெரிதாக கடினமாக இருந்தன, முகம் இறுக்கமாக இருந்தது.

வெடெல் அவனைப் பார்த்தான். 'உன் உணர்வைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஒரு காலத்தில் நானும் அப்படித்தான் உணர்ந்தேன். ஆனால் நான்கு வருடங்களாக ஒரே உணர்வை தக்கவைப்பது கடினம், எதையும் உணர்வதுகூட கடினம்.'

திடீரென கடுமையாக ஏதோ சொன்னான் வேட்ச். கோப்பையை மேசையின்மீது ஓங்கி அடித்தான். உள்ளே இருந்த பானம் மேசையில் தெறித்தது. பார்ப்பதற்குத் தண்ணீரைப் போல இருந்தாலும் கடுமையான மணத்தோடு இருந்தது. எளிதில் ஆவியாகும் தன்மை கொண்டதாக இருந்தது. மேசையின்மீது தெறித்த துளிகள் வெடெல்லின் நைந்து போனாலும் பளிச்சென்று இருந்த ஆடையை ஊடுருவி மார்பில் சில்லிட்டது.

'வேட்ச்!' என்றார் தந்தை.

வெடெல் நகரவில்லை. அவன் முகத்தில் அலட்சியமும் கேள்வியும் துயரமும் கலந்த உணர்வு வெளிப்பட்டது. 'அவன் வேண்டுமென்றே செய்யவில்லை,' என்றான்.

'நான் செய்யும்போது அது விபத்தைப் போல இருக்காது,' என்றான் வேட்ச்.

வெடெல் வேட்ச்சைப் பார்த்தான். 'நான் ஏற்கெனவே சொன்ன நினைவு. என் பெயர் சாஸியர் வெடெல். மிஸ்ஸிஸிப்பிக்காரன். கவுண்டிமேய்சன் என்ற ஊரில் வசிக்கிறேன். அதை உருவாக்கியதும் பெயர் வைத்ததும் என்னுடைய தந்தை. சாக்ட்டா இனத்தின் தலைவர், பெயர் பிரான்சிஸ் வெடெல். அவரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். சாக்ட்டா இனப்பெண்ணுக்கும் மாவீரன் நெப்போலியனின் தளபதியும் பெருமைக்குரிய உயர்குடியைச் சேர்ந்தவனுமான பிரெஞ்சு நாட்டிலிருந்து நியூ ஆர்லியன்ஸில் குடியேறிய பிரான்சுவா விடலுக்கும் பிறந்தவர்.

'ஒருமுறை என் தந்தை அரசாங்கம் மக்களை நடத்தும் விதம் பற்றி பிரதமர் ஜாக்சனிடம் புகார் சொல்வதற்காகக் குதிரை வண்டியை ஓட்டியபடி வாஷிங்டன் வரையில் சென்றார். அதற்கு முன்னால் ஒரு பெரிய வண்டியில் புத்தம்புதிய வலுவான குதிரைகளைப் பூட்டி அதில் கால்நடைத் தீவனமும் பரிசுப்பொருட்களும் நிறைத்து அனுப்பினார். எந்தக் கலப்புமற்ற முழுமையான சாக்ட்டா இனத்தைச் சேர்ந்த அப்பாவின் உறவினர் அந்தக் குழுவுக்குத் தலைமை வகித்தார். பழங்காலத்தில் 'மனிதன்' என்பதுதான் எங்கள் இனத் தலைவரின் பட்டப் பெயராக விளங்கியது. ஆனால் வெள்ளைக்காரர்களைப் போலவே ஐரோப்பியர்களின் பழக்கவழக்கங்களை நாங்கள் பின்பற்றத்

தொடங்கிய பிறகு அந்தப் பட்டத்தை வைத்துக் கொள்ளும் தகுதியை இழந்தோம்.

இனக்கலப்புக்கு எதிர்ப்பு தெரிவித்த எங்கள் இனத்தின் இன்னொரு குழுவுக்கு அது சொந்தமானது. ஆனால் நிலத்தையும் அடிமைகளையும் வைத்துக்கொள்ளும் உரிமையைத் தக்கவைத்துக் கொண்டோம். இப்போது 'மனிதன்' கறுப்பினத்தவர்களின் குடியிருப்பைவிடவும் கொஞ்சம் பெரிய அளவிலான மர வீடொன்றில் வசிக்கிறார், சிறிது மேல்நிலையில் இருக்கும் வேலைக்காரரைப் போல இருக்கிறார். என்னுடைய தந்தை வாஷிங்டனில் என் தாயைச் சந்தித்து மணம் செய்து கொண்டார். பிறகு மெக்சிகன் போரில் உயிரிழந்தார்.

'என் தாய் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், 63-இல் நிமோனியா தொற்றால் மறைந்தார். ஃபெடெரல் இராணுவம் ஊருக்குள் நுழைவதற்கு முன்னர் வெள்ளிப் பொருட்களை புதைத்து வைக்கும் பணியை மேற்பார்வையிட்டார், கூடவே ஒவ்வாத உணவு எதையோ சாப்பிட்டார். ஆனால் அம்மா இறந்துபோனதை நம்ப மறுக்கிறான் என் உதவியாளன். அம்மா ஒவ்வொரு ஞாயிறு மதியமும் புதன் மாலையும் விரும்பிச் சாப்பிடும் மார்டினிக் காபியும் பிஸ்கோத்தும் வடக்கு மாகாணக்காரர்களால் தடைசெய்யப்பட்டதை இந்த நாடு அனுமதித்திருக்கக் கூடாது என்கிறான். அவருக்காக ஊரே கொந்தளித்து துப்பாக்கியை ஏந்தி இருக்க வேண்டும் என நினைக்கிறான். ஆனால் அவன் ஒரு கறுப்பின அடிமை, விடுதலை என்னும் பார்த்தைச் சுமப்பவன். தினமும் நான் செய்யும் தவறுகளின் பட்டியலை ஊருக்குப் போனதும் அம்மாவிடம் சொல்லப் போகிறேன் என்கிறான். நான் பிரான்ஸில் பள்ளிக்குச் சென்றேன், ஆனால் அதிகம் சிரமப்பட்டு படிக்கவில்லை. இரண்டு வாரங்களுக்கு முன்னால் வரை லாங்ஸ்ட்ரீட் என்பவரின் மிஸ்ஸிஸிப்பி படைத்தளபதியாகப் பணியாற்றினேன். அவரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம்.'

'ஆக, நீங்கள் ஓர் இராணுவ இடைநிலை அதிகாரி,' என்றான் வேட்ச்.

'ஆம். என் மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அதுதானே?'

'இதற்கு முன்னர் கிளர்ச்சியாளர்களின் இராணுவ அதிகாரியைப் பார்த்திருக்கிறேன். எங்கே என்பதைச் சொல்லட்டுமா?'

'சொல்,' என்றான் வெடெல்.

'ஒரு மரத்தின் கீழே படுத்திருந்தான். நாங்களும் ஓய்வெடுப்பதற்காக அங்கே நிற்க வேண்டி இருந்தது. 'நண்பனே, தண்ணீர் இருக்கிறதா?' என்றான். 'இருக்கிறது,' என்றேன். 'நிறைய இருக்கிறது.' என்னால் எழுந்து நிற்க முடியவில்லை என்பதால் தவழ்ந்து சென்று அவனைத் தூக்கி மரத்தில் சாய்த்து உட்கார வைத்தேன். நேரே பார்க்கும்படி முகத்தைச் சரிசெய்தேன்.'

'உன் துப்பாக்கியில் கத்தி இல்லையா?' என்றான் வெடெல். 'ஓ, மறந்துவிட்டது. உன்னால் எழுந்து நிற்க முடியவில்லை என்பதை மறந்துவிட்டேன்.'

'தவழ்ந்தபடியே பின்னால் சென்றேன். சுமார் முந்நூறு அடி சென்று அங்கே...'

'பின்னாலா?'

'மிகவும் நெருக்கத்தில் இருந்து சுடுவது சிரமமல்லவா? அதனால் பின்னால் சென்றேன். அந்த நாசமாய்ப்போன கைத்துப்பாக்கி...'

'நாசமாய்ப் போன துப்பாக்கியா?' என்றான் வெடெல். நாற்காலியில் பக்கவாட்டில் உட்கார்ந்து மேசையின் மேல் கையை ஊன்றியிருந்தான், முகத்தில் கேள்விக்குறியும் வெறுப்பும் தோன்றியது.

'முதல்முறை குறி தவறிவிட்டது. அவன் முகத்தை நேரே திருப்பி வைத்து கண்கள் என்னைப் பார்க்கும்படி செய்திருந்தும் குறி தவறி தொண்டையில் சுட்டேன். அந்த நாசமாய்ப் போன கைத்துப்பாக்கியால் மீண்டும் சுட வேண்டியதாகியது.'

'வேட்ச்,' என்றார் அப்பா.

கைகளை மேசை மேலே வைத்திருந்தான் வேட்ச். தலையும் முகமும் தந்தையின் சாடையை ஒத்திருந்தது. ஆனாலும் அவரைப் போல நிதானமாக யோசிக்கும் தன்மை கொண்டவனாகத் தெரியவில்லை. முகம் உக்கிரமாக இருந்தது, என்ன செய்வானென்று உறுதியாகச் சொல்ல முடியவில்லை.

'எல்லாவற்றுக்கும் காரணம் அந்த நாசமாய்ப் போன கைத்துப்பாக்கிதான். மூன்று முறை சுட வேண்டியதாயிற்று. அதனால் அவன் முகத்தில் ஒரே வரிசையில் மூன்று கண்கள் தோன்றின. மூன்றும் திறந்திருப்பது போலவும் என்னைப் பார்ப்பது போலவும் இருந்தது. அவன் நன்றாகப் பார்ப்பதற்காக இன்னொரு கண்ணைத் தந்தேன். அந்த நாசமாய்ப் போன துப்பாக்கியால் இரண்டு முறை கூடுதலாகச் சுடவேண்டியதாயிற்று.'

'ஏய், வேட்ச்,' என்றபடி எழுந்தார் தந்தை. உடல் இறுக்கமாக இருந்தது. மேசையின்மீது கையை அணைகொடுத்து நின்றார்.

'புதியவனே, வேட்ச் சொல்வதைக் கண்டுகொள்ள வேண்டாம். போர் முடிந்துவிட்டது.'

'நான் கண்டுகொள்ளவில்லை,' என்றபடியே நெஞ்சைத் தொட்டான் வெடெல். ஆடையின் மடிப்புக்குள் கையை நுழைத்தபடியே விழிப்புணர்வோடும் கேள்வியோடும் வெறுப்போடும் வேட்ச்சை உன்னிப்பாக கவனித்தான். 'இத்தனை நாட்களில் இவனைப் போன்ற எத்தனையோ பேரைச் சந்தித்திருக்கிறேன். மேலும் ஒருவரைச் சந்திப்பதில் கவலையேதும் இல்லை,' என்றான் வெடெல்.

'கொஞ்சம் விஸ்கி அருந்துங்கள்,' என்றான் வேட்ச்.

'குறிப்பாக எதையாவது சொல்ல நினைக்கிறாயா?'

'நாசமாய்ப்போன துப்பாக்கி,' என்றான் வேட்ச். 'கொஞ்சம் விஸ்கி அருந்துங்கள்.'

கையை மீண்டும் மேசைமீது வைத்தான்



வெடெல். குடுவையில் இருந்து கோப்பைக்குள் திரவத்தை ஊற்றாமல் வெறுமனே உயர்த்திப் பிடித்திருந்தான் வேட்ச். அவன் பார்வை வெடெலின் முதுகுக்குப் பின்னால் சென்றது. வெடெல் திரும்பினான். இளம்பெண்ணும் அவள் தாயும் அறையின் வாசலில் நின்றார்கள். தரையிடம் பேசுவது போலக் கீழே பார்த்தபடி தாய் சொன்னாள். 'நீங்கள் சொன்னது போலவே அவளை வரவேண்டாம் என்று சொன்னேன். ஆனால் ஓர் ஆணைப் போலவே வலிமையும் பிடிவாதமும் கொண்டவளாக இருக்கிறாள்.'

'உள்ளே போ,' என்றார் தந்தை.

'என்னையா சொல்கிறீர்கள்?' என்று மீண்டும் தரையிடம் பேசினாள் தாய்.

பெயரை உச்சரித்தார் தந்தை.

வெடெலுக்கு அவர் சொன்னது கேட்கவில்லை. கேட்கத் தவறியதைக்கூட அவன் அறியவில்லை. 'உள்ளே போ.'

இளம்பெண் நகர்ந்தாள். அவர்கள் யாரையும் பார்க்காமல் கனத்த தோலால் ஆன வெடெலின் மேலங்கி கிடந்த நாற்காலியின் அருகே வந்தாள். அதை விரித்து அதன் உட்பகுதி கத்தியால் கிழிப்பட்டு இருந்ததை எல்லோரும் பார்க்கச் செய்தாள். வேட்ச் அவள் தோளைப் பற்றினான். அவளோ வெடெலைப் பார்த்து, 'கறுப்பினத்தவன் காலில் சுற்றிக்கொள்வதற்கு இதை வெட்டிக் கொடுத்திருக்கிறீர்கள்,' என்றாள்.

இந்த முறை தந்தை வேட்ச்சின் தோளைப் பற்றினார். உடல் அசையாமல் முகத்தை மட்டும் திருப்பினான் வெடெல். சிறுவன் நாற்காலியின் கைப்பிடியில் கையை ஊன்றி மேலே எழுந்து விளக்கை நோக்கி முன்னால் சாய்ந்தான். வேட்ச்சும் அவன் தந்தையும் வெளியிட்ட மூச்சுக்காற்றைத் தவிர வேறெந்த ஓசையும் கேட்கவில்லை.

'இன்னமும் உன்னைவிடவும் நான்தான் வலிமையானவன்,' என்றார் தந்தை. 'நல்ல மனிதனும்கூட.'

'உங்களால் எப்பொழுதும் அப்படியே இருக்க முடியாது,' என்றான் வேட்ச்.

தந்தை மகளைப் பார்த்தார். 'உள்ளே போ.' அவள் முன்னறையை நோக்கி ஓசையின்றி நடந்தாள். தந்தை அவளைப் பெயர் சொல்லி அழைத்தார். வெடெல் இப்போதும் அதைக் கேட்கவில்லை. கேட்கத் தவறியதைக்கூட அவன் அறியவில்லை. அவள் கதவைக் கடந்தாள். தந்தை வெடெலைப் பார்த்தார். அவனுடைய போக்கில் எந்த மாற்றமும் இல்லை. கை மட்டும் மீண்டும் மார்புப் பகுதியில் மறைந்திருந்தது. இரு உணர்ச்சியற்ற முகங்களும் ஒன்றையொன்று பார்த்துக்கொண்டன. முதலாவது நோர்டிக் இனத்தின் தோற்ற இயல்புகளைக் கொண்ட முகம். இரண்டாவது, ஒரு பாதி கேல் இனம், மற்றொரு பாதி மொங்கோல் இனம் இரண்டின் தோற்ற இயல்புகளும் கலந்தது, மெலிந்த சோர்வுற்ற வெண்கலச் சிலை போல இருந்தது. அதில் இருந்த கண்களில் எதிர்காலத்தின் இலக்கு தெரியவில்லை என்றாலும் பார்வை இருந்தது.

'குதிரைகளை எடுத்துக்கொண்டு புறப்படு,'' என்றார் தந்தை.

## VI

முன்னறை இருண்டு சில்லிட்டு இருந்தது. மலையகத்தின் சித்திரை மாதத்துக் குளிர் நிலத்தின் வழியே அவளுடைய வெற்றுக்கால்களில் ஏறி ஒற்றை ஆடை அணிந்திருந்த உடலில் படர்ந்தது. 'மேலங்கியின் உள்வரித் துணியைக் கிழித்து கறுப்பினத்தவன் காலில் சுற்றிக்கொள்ள கொடுத்திருக்கிறான்' என்றாள்.

'ஒரு கறுப்பினத்தவனுக்காக இதைச் செய்திருக்கிறன்.' அவளுக்குப் பின்னால் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்த அந்த ஆண் உருவம் விளக்கொளியில் பெரிதாகத் தெரிந்தது. கதவு சாற்றபடும் ஓசை கேட்டது. 'வேட்ச்சா அப்பாவா?' எனக் கேட்டாள். தோல் வார் ஒன்று அவள் முதுகைச் சுரீரென்று பதம் பார்த்தது. 'வேட்ச்சாக இருக்குமோ என்று பயந்தேன்,' என்றாள். மீண்டும் அடி விழுந்தது.

'போய் தூங்கு' என்றார் தந்தை.

'நீங்கள் என்னை அடிக்கலாம், அவனை அடிக்க முடியாது' என்றாள்.

மீண்டும் அடி விழுந்தது. முரட்டுத் துணியாலான ஆடையின் கீழே இருந்த சதையில் பட்டதும் தடிமனான தட்டையான சன்னமான ஓசை எழுந்தது.

## VII

யாருமற்ற சமையலறையில் கதவைப் பார்த்தபடியே அடுப்பருகே கிடந்த மரக்கட்டையின் மேல் கொஞ்ச நேரம் அமர்ந்திருந்தான் கறுப்பினத்தவன். பிறகு ஒரு கையால் சுவரைப் பிடித்தபடி கவனமாக மேலே எழுந்தான்.

'ஸ்ஸ்ஸ்! இதைப் போன்ற ஒன்று நம்மூரிலும் இருந்தால் நன்றாக இருக்குமே.'

கதவைப் பார்த்து கண்ணைச் சிமிட்டியபடி உற்றுக் கேட்டான். பிறகு சுவரைப் பிடித்தபடி மெதுவாக நடந்தான். அவ்வப்போது கதவை உற்றுக் கவனித்தான். தடுமாறினாலும் எச்சரிக்கையோடு இருந்தான், எதையோ தந்திரமாகச் செய்வது போல இருந்தது. அறையின் மூலையில் தரையில் இருந்த பலகையை மேலே தூக்கினான். சுவரில் சாய்ந்து நின்றபடி கவனமாகக் குனிந்தான். குடுவையை வெளியே எடுக்கையில் தடுமாறி கீழே விழுந்தான், முகம் நிலத்தோடு உராய்ந்தபோது வியப்பில் அவன் முகம் மாறியதைப் பார்க்க கோமாளித்தனமாக இருந்தது. பிறகு எழுந்து உட்கார்ந்து முட்டிக்கு இடையில் குடுவையைப் பத்திரமாக இடுக்கிக்கொண்டு குடித்தான். நீண்ட நேரம் குடித்தான்.

'ஸ்ஸ்ஸ்... எங்கள் ஊரில் இதைப் பன்றிக்குத்தான் கொடுப்போம். இந்த மலையகத்தைச்

சேர்ந்த குப்பைகள்..." என்றபடியே இன்னும் கொஞ்சம் குடித்தான். அவன் முகத்தில் கவலையும் பயமும் படர்ந்தது. குடுவையை வைத்துவிட்டு மேலே எழ முனைந்தபோது கீழே விழுந்தான். இறுதியில் நேராக நிற்கமுடியாமல் ஆடினான், வாயில் எச்சில் ஒழுகியது. அவன் முகத்தில் கோப மும் பயமும் மண்டியது. மீண்டும் தரையில் பொத் தென நெடுஞ்சாண்கிடையாக விழுந்து குடுவை யைக் கவிழ்த்தான்.

## VIII

தந்தையும் மகனும் வெடெலும் மயங்கிக் கிடந்த கறுப்பினத்தவனின் அருகே நின்றிருந் தார்கள். சன்னமான குரலில் ஒருவரோடொருவர் பேசினார்கள்.

'எல்லோரும் சேர்ந்து தூக்கவேண்டும்,' என்றார் தந்தை.

எல்லோரும் சேர்ந்து தூக்கினார்கள். ஒற்றைக் கையால் அவன் தலையை அசைத்தான் வெடெல். 'ஜுபல்!'

கறுப்பினத்தவன் ஒற்றைக் கையால் தட்டிவிட்டு. 'அவர்களை விடு. அவர்களைப் போக விடு,' என்று முணுமுணுத்தான்.

'ஜுபல்!' மீண்டும் அழைத்தான் வெடெல்.

கறுப்பினத்தவன் கையையும் காலையும் வேகமாகவும் வலிமையாகவும் உதைத்தான். 'அவர்களை விட்டுத்தள்ளு. நான் 'மனிதனிடம்' சொல்லப் போகிறேன். எல்லாவற்றையும் சொல்லப் போகிறேன்.' கொஞ்சம் கொஞ்சமாக முணுமுணுப்பு அடங்கியது. 'வயலில் வேலை செய்பவர்கள். வயலில் வேலைசெய்யும் கறுப்பினத்தவர்கள்.'

'எல்லோரும் சேர்ந்து தூக்கவேண்டும்,'என்றார் தந்தை.

'ஆமாம். இதற்காக வருத்தம் தெரிவிக்கிறேன். உங்களிடம் முன்னரே சொல்லியிருக்க வேண்டும். ஆனால் இன்னொரு குடுவை இருக்குமென்பதோ அதுவும் அவன் எளிதில் எடுக்கக்கூடிய இடத்தில் இருக்குமென்பதோ தெரியாமல் போனது.' கீழே குனிந்து கறுப்பினத்தவனின் தோளுக்குக் கீழே தன் ஒற்றைக் கையை நுழைத்தான்.

'நகர்ந்துகொள், நானும் ஹுலுமே இதைச் சமா ளித்துவிடுவோம்.' அவரும் சிறுவனும் சேர்ந்து கறுப்பினத்தவனைத் தூக்கினார்கள். வெடெல் கதவைத் திறந்தான்.

இருள் சூழ்ந்த குளிருக்குள் நுழைந்தார்கள். கீழே களஞ்சியம் தெரிந்தது. சரிவான பாதையில் கறுப்பினத்தவனைத் தூக்கிக்கொண்டு நடந்தார்கள். 'குதிரைகளை வெளியே கொண்டு வா ஹுல்,' என்றார் தந்தை.

'குதிரைகளா? அவனால் இப்போது பயணம் செய்ய முடியாது. குதிரையின் மேல் உட்கார முடி யாது,' என்றான் வெடெல்.

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். அந்தக் குளிரில், பனிபடர்ந்த அமை தியில் குரல்கள் வரும் திசையை மட்டுமே பார்க்க முடிந்தது.

'நீ இப்போது கிளம்பப் போவதில்லையா?' கேட்டார் தந்தை.

'மன்னிக்கவும். இப்போது கிளம்பும் நிலையில் நானில்லை. விடியும் வரையில் அவன் தெளியும் வரையில் இங்கேதான் தங்கவேண்டும். அதற்குப் பிறகு கிளம்புகிறோம்.'

'அவனை இங்கே விட்டுவிட்டுப் போ. அவனுக் காக ஒரு குதிரையை விட்டுவிட்டு நீ கிளம்பு. அவனொரு கறுப்பினத்தவன்தானே?'

'மன்னிக்கவும். இந்த நான்கு வருட வாழ்க் கைக்குப் பிறகு என்னால் அதைச் செய்ய முடி யாது.' அவன் குரலில் குழப்பமும் தீராத அயர்ச் சியும் இன்னதென்று உறுதியாகச் சொல்ல முடியாத ஏதோ ஒன்றும் தொனித்தது. 'அவனோடு இத் தனை தூரம் வந்துவிட்டேன். அவனை வீடு சேர்ப்பதையும் செய்துவிடுகிறேன்.'

'உன்னை எச்சரித்துவிட்டேன்,' என்றார் தந்தை.

'அதற்கு நன்றிக்கடன்பட்டிருக்கிறேன். விடிந்த தும் கிளம்பிவிடுவோம். அவனைப் பரணில் ஏற் றிப் படுக்க வைக்க ஹுல் உதவிசெய்தால் நல் லது.'

தந்தை பின்னால் நகர்ந்து, 'அந்தக் கறுப்பி னத்தவனைக் கீழே வை, ஹுல்' என்றார்.

'அவனை இங்கேயே விட்டால் குளிரில் விறைத் துப் போவான். அவனைப் பரணில் ஏற்றிப் படுக்க வைக்கவேண்டும்,' என்றான் வெடெல். கறுப்பினத் தவனைச் சுவரின் மீது சாய்த்து உட்கார வைத்தான். தளர்ந்து போயிருந்த உடலைத் தோளில் தூக்க முயன்றான். அதிக கனமில்லை என்றாலும் தந்தை மறுபடியும் பேசும் வரை ஏனென்ற காரணம் புரியவில்லை. 'ஹுல், இங்கே வா.'

'நீ போ,' என்று அமைதியாகச் சொன்னான் வெடெல். 'நானே ஏணியில் ஏற்றிக்கொள்கிறேன்.' சிறுவன் வேகவேகமாக மூச்சுவிட்டான், அந்த ஓசை இளமைத் துடிப்போடும் பரபரப்போடும் இருந்தது. என்ன ஏதென்ற ஆராய்ச்சியில் இறங்க விரும்பவில்லை வெடெல். சிறுவனின் குரலில் தொனித்த கொந்தளிப்பையும் கவனிக்கவில்லை.

'நான் உதவுகிறேன்,' என்று சிறுவன் சொன்ன போது வெடெல் மறுப்பு தெரிவிக்கவில்லை. கறுப் பினத்தவனின் கன்னத்தில் அறைந்து எழுப்பி, அவனுடைய கால்களை ஏணிப்படியில் எடுத்து வைத்தான். இருவரும் சேர்ந்து அவனை மேல் நோக்கி உந்தினார்கள். பாதி தூரம் ஏறியவன் கை காலை அசைத்து அவர்களை அடிக்க ஆரம் பித்தான்.

'அவர்களிடம் சொல்லப் போகிறேன். 'மனித னிடம்' சொல்லப் போகிறேன். எஜமானி அம்மா ளிடம் சொல்லப் போகிறேன். 'வயலில் வேலை செய்பவர்கள். வயல்வெளியில் வேலைசெய்யும் கறுப்பினத்தவர்கள்.'

## IX

பரணில் வைக்கோல் இல்லை. மேலங்கியையும் சேணத்தின் மேல் கிடந்த போர்வைகளையும் போர்த்திக்கொண்டு அருகருகே படுத்திருந்தார்கள் இருவரும். கறுப்பினத்தவன் குறட்டை விட்டுத் தூங்கினான். அவன் மூச்சு துர்நற்றத்தோடு இரைச்சலாக இருந்தது. கீழே இருந்த இலாயத்தில் உயர்ரகக் குதிரை அவ்வப்போது குளம்பை தரை யில் ஓங்கி அடித்தது. வெடெல் மல்லாந்து படுத் திருந்தான். கையை மார்பின் குறுக்கே போட்டு வெட்டுண்ட கையின் எஞ்சிய பகுதியைப் பிடித் திருந்தான்.

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். அந்தக் குளிரில், பனிபடர்ந்த அமைதியில் குரல்கள் வரும் திசையை மட்டுமே பார்க்க முடிந்தது.

கூரையில் இருந்த பிளவுகளின் வழியே கறுத்த, குளிர்ந்த, கனத்த வானம் தெரிந்தது. நாளை தொடங்கி அவர்கள் அந்த மலையகத்தை விட்டு முற்றிலும் அகலும் நாள் வரையில் பொழிய விருக்கும் அடர் மழையைச் சுட்டுவதாக இருந் தது. 'இந்த மலையகத்தைவிட்டு நான் செல்லும் வரையில்,' என்று ஓசையெழுப்பாமல் வாய்விட்டுச் சொன்னான். இன்னமும் கூரையைப் பார்த்தபடி படுத்திருந்தான். பக்கத்தில் கறுப்பினத்தவன் குறட் டைவிடும் ஒலி கேட்டது. 'எனக்குக் கவலையாக இருந்தது. எல்லாம் முடிந்துபோனது, அச்சப்படும் உரிமைப்பேறு அற்றுப்போனது என்று நினைத் தேன். இல்லையென்பது தெரிய வந்ததால் மகிழ்ச் சியாகவே இருக்கிறேன்.' அந்தக் குளிர்ந்த இருட் டில் விறைப்பாகப் படுத்தபடி வீட்டை நினைவு கூர்ந்தான்.

'கவுண்டிமேய்சன். நம் வாழ்க்கையை ஓசைக ளில் அடக்கி முக்கியத்துவம் வாய்ந்ததாகச் செய்துவிடலாம். வெற்றி. தோல்வி. அமைதி. வீடு. அதனால்தான் ஒவ்வொரு ஓசைக்கும் ஒரு பொருளைக் கண்டுப்பிடிக்க வேண்டியிருக்கிறது. குறிப்பாக நீங்கள் வெற்றியை எட்டிப்பிடித்த துர திர்ஷ்டசாலியாக இருந்தால் அதற்கேற்ற அளவு அதிகமாக கண்டுபிடிக்க வேண்டும். சாட்டையடி வாங்குவது நன்றாக இருக்கிறது; சாட்டையடி வாங்கிவிட்டு சிதைந்த கூரைக்குக் கீழே படுத்தபடி வீட்டை நினைப்பது இன்னும் நன்றாக இருக்கிறது.'

கறுப்பினத்தவன் குறட்டைவிட்டான். 'அதற் கேற்ற அளவு அதிகமாக' என்ற சொற்கள் இருட் டில் உருக்கொள்வதைப் பார்த்தபடி படுத்திருந்தான் வெடெல்.

'மெம்ஃபிஸின் கயோஸோவில் வரவேற்புக் கூடத்தில் இருக்கும் மனிதன் உரக்கச் சிரித்தால் என்ன நடக்கும்? ஆனால் நான் மிகுந்த மகிழ்ச் சியாக இருக்கிறேன்...' ஏணியின் மேலே யாரோ ஏறிவரும் ஓசை சன்னமாகக் கேட்டது. உன்னிப் பாகக் கேட்டபடி அசையாமல் படுத்திருந்தான். வெட்டுப்பட்ட வலது கையின் கீழே இருந்த கைத்துப்பாக்கியின் முனையை மற்றொரு கை பற்றியிருந்தது. சிறிய கதவின் வழியே உள்ளே ஊடுருவிய மங்கலான ஒளியை முழுவதுமாக அந்த உருவம் மறைக்கும் வரை நகராமல் படுத்தி ருந்தான். 'அசையாமல் நில்,' என்றான்.

'நான்தான்,' என்றது சிறுவனின் குரல். மூச்சை அடக்கிக்கொண்டு வேகமாகப் பேசும் குரல். இப்போதும்கூட அந்தக் குரலை கிளர்ச்சியுற்றது என்றோ வேறு ஏதாவது சொல்லாலோ விவரிக்க வில்லை வெடெல்.

கைகளையும் முட்டியையும் நிலத்தில் ஊன்றித் தவழ்ந்தபடி 'ஏன் நிறுத்தினாய், சுடு,' என்றான் சிறுவன்.

ஆழ்ந்து மூச்சு வாங்கியபடி வெடெலுக்கு நேர் மேலே நின்றான். 'நான் செத்துப் போயிருக்கலாம். அதைத்தான் விரும்புகிறேன். நாம் இருவரும் செத்துப் போயிருக்கலாம். வேட்ச்சைப் போலவே என் விருப்பங்களை எல்லாம் தெரிவிக்க முடிந் தால் நன்றாக இருக்கும். நீங்கள் ஏன் இங்கே வந் தீர்கள்?'

வெடெல்லிடம் சலனமேதும் இல்லை. எளதற் காக நான் இறக்கவேண்டும் என்று வேட்ச் நினைக் கிறான்?'

'ஏனென்றால் நீங்கள் கத்தும் ஓசை அவனுக்கு இன்னமும் கேட்கிறது. நான் அவனுடன்தான் படுத்துக்கொள்வேன். இரவு நேரத்தில் தூக்கத்தில் இருந்து விழித்துக்கொள்வான், வேர்த்து ஊற்றும். ஒருமுறை என் கழுத்தை நெரிக்கப் பார்த்தான். அப்பா வந்து தடுத்து நிறுத்தினார். உங்களின் அல றும் குரல்கள் அவனுக்கு இன்னமும் கேட்கின்றன. குண்டுகளற்ற துப்பாக்கிகளைத் தவிர வேறு ஏதும் இல்லாததால் சோளக்கொல்லை பொம்மைகளைப் போலச் சோளக்காட்டில் அலறியபடி ஓடியதாகச் சொன்னான் வேட்ச்.'

சிறுவன் இப்போது ஓசையின்றி அழுதான். 'நீ நாசமாய்ப் போக. நீ நரகத்துக்குப் போக!'

'ஆமாம்,' என்றான் வெடெல். 'நானே அவற் றைக் கேட்டிருக்கிறேன். ஆனால் நீ இறந்துபோக வேண்டுமென்று விரும்புகிறாயே, எதனால்?' என்றான்.

'ஏனென்றால் அவளே வரவேண்டும் என்று முயன்றாள். அவளே வந்திருக்க வேண்டும்.'

'யாரந்த அவள்? உன் சகோதரியா?'

'... அறையின் வழியாகத்தான் வெளியே வரமுடியும். அப்பா விழித்திருந்தார். 'அந்தக் கதவைத் தாண்டி வெளியே போனால் திரும்ப உள்ளே வராதே,' என்றார். 'திரும்பி வரும் எண்ண மில்லை,' என்று அவள் சொன்னாள். வேட்ச்சும் விழித்திருந்தான். 'அவனை விரைவில் திருமணம் செய்துகொள். ஏனெனில் விடிந்ததும் விதவையாகப் போகிறாய்,' என்றான். அவள் உள்ளே வந்து என் னிடம் சொன்னாள். நானும் விழித்துக்கொண்டுதான் இருந்தேன். உங்களிடம் சொல்லச் சொன்னாள்."

'என்ன சொல்லச் சொன்னாள்?' என்று வெடெல் கேட்டதும் சிறுவன் சத்தமின்றி அழுதான். பொறு மையினால் உண்டான முழுமையான விரக்தியினால் அழுதான்.

'ங்கள் கறுப்பினத்தவனாக இருந்தால், அவள் சொன்னதைச் செய்திருந்தால் நான்...'

'எதைச் செய்தால்? அவள் எதைச் செய்திருந் தால்? என்னிடம் என்ன சொல்லச் சொன்னாள்?'

'நானும் அவளும் படுக்கும் மேலறையில் இருக் கும் ஜன்னலைப் பற்றி. அங்கே ஓர் ஏணி இருக் கும். இரவில் வேட்டையாடப் போய்விட்டு வரு கையில் நான் பயன்படுத்துவது. நீங்கள் உள்ளே வருவதற்காக விட்டுவைத்தேன். ஆனால் நீங்கள் கறுப்பினத்தவனாக இருந்தால், அவள் சொன்ன தைச் செய்திருந்தால் நான்...'

(தொடரும்)



# முடி உதிர்தல் பிரச்சினைக்கு வந்துவிட்டது தீர்வு!

**கு.கணேசன்**

சென்ற மாதம் வரை மக்களின் பொதுப்புழக்கத்தில் அவ்வளவாக அறியப்படாமல் இருந்த ‘அலோபீசியா ஏரியேட்டா’ (Alopecia Areata) எனும் மருத்துவ மொழி, அண்மையில் நடந்து முடிந்த ஆஸ்கர் விருது வழங்கும் விழாவையடுத்து, உலகளவில் பிரபலமாகிவிட்டது. தனது மனைவி ஜடா பிங்கெட்டை உருவக் கேலி செய்ததற்காக, விழா தொகுப்பாளர் கிறிஸ் ராக்கை, சிறந்த நடிகருக்கான ஆஸ்கர் விருதுபெற்ற வில் ஸ்மித் விழா மேடையிலேயே அதிரடியாகக் கன்னத்தில் அறைந்த நிகழ்வுதான் அதற்குக் காரணம்.

அந்த விழாவில் ஜடா பிங்கெட்டின் தலையில் முடி இல்லாததை வைத்து கிறிஸ் ராக் கேலி செய்திருந்தார். ஜடா பிங்கெட்டுக்கு முடி உதிரும் பிரச்சினை கடந்த சில வருடங்களாக இருந்து வருகிறது. இது சாதாரண முடி உதிரும் பிரச்சினை இல்லை. குளித்தாலோ தலையைச் சீவினாலோ கொத்துக்கொத்தாக முடி உதிரும் ஒரு கொடுமையான பிரச்சினை.

இதனால் ஜடா பிங்கெட் கடுமையான மன உளைச்சலில் இருந்துள்ளார். இந்தச் சூழலில் கிறிஸ்ராக் செய்த கேலி வில்ஸ்மித்துக்குக் கோபத்தைக் கிளற, நிதானம் இழந்துவிட்டார். பின்னர், விழா மேடையில் அவர் மன்னிப்புக் கேட்கவும், பிரச்சினை முடிவுக்கு வந்தது.

**‘பேரிசிடினிப்’ மருந்து ‘ஜேஏகே தடுப்பான்கள்’ (JAK inhibitors) எனும் மருந்து வகையைச் சேர்ந்தது. இது ஏற்கெனவே ருமட்டாய்டு மூட்டுவலிக்குப் பயன்படுத்தப்பட்டுவரும் மருந்துதான். இப்போது இது தலைமுடி உதிரும் பிரச்சினைக்கும் தீர்வு தருவதாகத் தெரிய வந்துள்ளது**

இதைத் தொடர்ந்து, ‘அலோபீசியா ஏரியேட்டா’ தொடர்பில் ஊடகங்களில் உரையாடப்பட்டன. நவீன மருத்துவத்தில் அதற்கு மேற்கொள்ளப்படும் சிகிச்சைகள் குறித்து யூடியூப்களில் விளக்கம் கூறப்பட்டன. அதேநேரத்தில், அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழக மருத்துவ ஆய்வாளர் பிரெட் கிங் ‘அலோபீசியா ஏரியாட்டா’வுக்கு ‘பேரிசிடினிப்’ (Baricitinib) மருந்து நல்ல பயன் அளிப்பதாக அறிவித்தார். அந்த மருந்து தொடர்பான ஆய்வுக் கட்டுரையும் ‘நியூ இங்கிலாந்து ஜேர்னல் ஒஃப் மெடிசின்’ மருத்துவ ஆய்விதழில் வெளிவந்துள்ளது.

இது சென்ற வாரம் முழுவதும் மருத்துவத் துறையில் பேசுபொருளானது. தலைமுடி உதிரும் பிரச்சினைக்குப் புதிய விடியலாகப் பேசப்படும் இந்த மருந்து குறித்து அறியும் முன்னர், ‘அலோபீசியா ஏரியேட்டா’வின் மருத்துவ அறிவியலைக் கொஞ்சம் பார்த்துவிடுவோம். முடி என்பது ‘கெரட்டின்’ எனும் புரதத்தால் ஆனது. ரோமக்காலில் (Hair Follicle) இருந்து வளரக்கூடியது. நம் தலையில் சராசரியாக ஒரு லட்சம் முடிகள் இருக்கின்றன. தினமும் சராசரியாக 100 முடிகள் உதிர்வது இயற்கை. இதற்கு மேல் முடி உதிர்ந்தால் கவனிக்க வேண்டும்.

முடி உதிர்வதற்குப் பொதுவான பெயர், அலோபீசியா. இதில் பல விதம் உண்டு. அதிலொன்று, ‘அலோபீசியா ஏரியேட்டா’. நம் உடலில் உள்ள ‘தடுப்பாற்றல் மண்டலத்தின்’ (Immune System) தவறான கணிப்பு காரணமாக இது ஏற்படுகிறது. பொதுவாக, உடலுக்குக் கெடுதல் செய்யும் கிருமிகளுக்கு எதிராக, ‘எதிரணுக்கள்’ (Antibodies) எனும் சிப்பாய்களை அனுப்பி, அந்த எதிரிகளை அழித்து, நம்மைக் காப்பது தடுப்பாற்றல் மண்டலத்தின் தற்காப்பு வேலை. சமயங்களில் இது உடலில் இருக்கும் இயல்பான உறுப்பையும் தன் எதிரியாக நினைத்துச் செயலில் இறங்கிவிடுவதுதான் துயரம்.


அப்படித்தான் சிலருக்குத் தலைமுடி வளர்கிற ரோமக்கால்களையே எதிரியாக நினைத்து இது அழித்துவிடுகிறது. அப்போது அந்த இடங்களில் கொத்துக்கொத்தாக முடி உதிர்ந்து வழுக்கை விழுகிறது. தொடக்கத்தில் பழைய ஒரு ரூபாய் நாணயம் அளவுக்கு இந்த வழுக்கை தோன்றும். போகப்போக இது உள்ளங்கை அகலத்துக்குப் பரவிவிடும். இதைத்தான் மருத்துவர்கள் ‘அலோபீ சியா ஏரியேட்டா’ என்கின்றனர். உடல் தன்னைத் தானே கெடுத்துக்கொண்டு இப்படி ஒரு நோயை ஏற்படுத்துவதால், இதைச் ‘சுயத் தடுப்பாற்றல் நோய்’ (Auto Immune Disease) எனும் வகையில் சேர்த்துள்ளனர். மேலும், வம்சாவளிக் காரணிகளும் மனக் கவலை, உளக்கொந்தளிப்பு உள்ளிட்ட உளவியல் பிரச்சினைகள் இருந்தாலும் ‘அலோபீசியா ஏரியேட்டா’ தூண்டப்பட வாய்ப்பிருக்கிறது என்கின்றனர்.

இந்த வகை வழுக்கையானது எந்த வயதிலும் வரலாம். ஆண், பெண் என்ற பாகுபாடெல்லாம் இதற்குக் கிடையாது. உலகில் 2% பேருக்கு இந்தப் பிரச்சினை இருக்கிறது. அமெரிக்காவில் மட்டும் ஏறத்தாழ 7 லட்சம் பேர் இதற்காகச் சிகிச்சை எடுத்துக்கொள்கின்றனர். இப்போதுவரை தலையில் தடவப்படும் சில வகை ஸ்டீராய்டு களிம்புகளைப் பரிந்துரை செய்வதுதான் இந்தப் பிரச்சினைக்கு முதல் நிலை சிகிச்சை. அது பயன் தராதபோது, தலையில் தோலுக்கு அடியில் ஸ்டீ ராய்டு மருந்துகளை ஊசி மூலம் செலுத்துவது வழக் கத்தில் உள்ளது. இது தவிர, பி.ஆர்.பி. (Platelet Rich Plasma) எனும் சிகிச்சையும் உள்ளது. அதாவது, பயனாளியின் உடலிலிருந்து குருதியை எடுத்து, அதைத் தலைப் பகுதியில் சில மாத இடைவெளியில் ஊசி மூலம் செலுத்தும் சிகிச்சை முறை இது.

# சிறைக்குள்...

55

தர்மராசா



## சிறை உணவைப்போல தரங்குறைந்த உணவு எங்குமில்லை...!

சிறைச்சாலையில் எத்தகைய உணவுகளைத் தந்தாலும் ஏதோ அவித்துத் தரப்படுகிறது என்ற அளவிலேயே திருப்திப்படவேண்டியிருக்கும். அங்கு அரை அவியலாகத் தரப்படுகின்ற உணவுகளில் சில விற்றமின்கள் அழிந்துபோகமல் கிடைக்கவும் வாய்ப்புண்டு. அந்த உணவுகளின் மணத்தை உள்ளிழுக்காமல் சாப்பிட்டுத் தொலைப்பதில்தான் ஒவ்வொரு கைதியின் கெட்டித்தனமும் உண்டு.

உணவுக்குப் பாவிக்கப்படும் சில பொருள்களை பீடிக்காகவும் கஞ்சா, கெரோய்ன் வாங்குவதற்குப் பணம் பெறுவதற்காகவும் சமையல் செய்ய நியமிக்கப்பட்டுள்ள தண்டனைக் கைதி கள் களவாக எடுத்துவந்து ஏனைய கைதிகளுக்கு விற்றுவிடுவார்கள். தேங்காய்ப்பூ, மிளகாய்த்தூள், தேசிக்காய், தேயிலை ஆகியவற்றை உள்ளா டைக்குள் மறைத்து வைத்துக் கொண்டுவந்து கொடுப்பார்கள். இதனால் பொதுச் சமையலுக்குப் போடப்படும் மிளகாய், வெங்காயம் எல்லாம் குறைவாக இருக்கும். மீன், இறைச்சிக் கறிகள் பால்சொதியைவிட நிறம் குறைவாகவே இருக்கும். கிட்டத்தட்ட சாப்பிட்ட பின்னர் வீடுகளில் கைகழுவி ஊற்றும் தண்ணீர்போல அது இருக்கும்.

களுத்துறையில் சில சிறைச்சாலை ஊழியர்களும் சமையல் சாமான்களை வீட்டுக்குக் கொண்டு செல்வதுண்டு. ஓர் ஊழியர் தண்ணீர் கலனில் அரிசி, பருப்பு ஆகியவற்றைக் கடத்தியபோது பிடிபட்டார். இன்னொருவர் மாட்டிறைச்சியைச் சிறு துண்டுகளாக வெட்டிப் பொலித்தீன் பையில் சுற்றித் தனது தொப்பிக்குள் வைத்துக்கொண்டு தந்திரமாக வெளியேறியபோது சிறைச்சாலை அதிகாரியைக் கண்டதும் சலூட் அடித்தார். அப்போது இறைச்சிப் பொதி கீழே விழுந்ததால் அகப்பட்டார்.

களுத்துறையில் மீன், இறைச்சியைத் துண்டுகளாக வெட்டி யூறியா பையில் கட்டித் தனியாக வைத்துவிட்டுக் குழம்பைக் கொதிக்க வைத்த பின்னர் அதற்குள் இறக்கி அவிய வைப்பார்கள். அவ்வாறு அவிந்த பின் இறைச்சி, மீன் துண்டுகளைப் பெரிய தட்டு ஒன்றில் பரப்பி அடுக்கித் தூக்கிக் கொண்டு வருவார்கள். குழம்பை (ஒரு வகைச் சொதி) வேறாக வாளியில் ஊற்றி வருவார்கள். ஒரு துண்டு மீன் அல்லது இறைச்சியும் ஒரு சிறிய கரண்டிச் சொதியும் ஒரு கைதிக்குக் கிடைக்கும்.

களுத்துறைச் சிறையில் கைதி ஒருவர் தனக்கு மீன் அல்லது இறைச்சி பெரிய துண்டு தர வேண்டும் என்று பாட்டிக்காரருடன் (சமையல் செய்யும் தண்டனைக் கைதிகள்) சண்டை பிடித்தார். ஒரு கைதிக்கு 56 கிராம் இறைச்சி அல்லது மீன் வழங்கப்படவேண்டும் என்பது சிறைச்சாலைச் சட்டமாக இருப்பினும் அவற்றை வெட்டும்போது அதைக் கவனித்து வெட்டுவதில்லை. கறி சமைக்கும்போது சிதைந்துவிடாத துண்டு மீன்களையே பயன்படுத்துவார்கள். பெரும்பாலும் சூரை மீன்தான் தருவார்கள். அதைவிடச் சுவையான நல்ல மீன்கள் வாங்குவதற்கு வாய்ப்பிருந்தும்கூட சிறைச்சாலை நிர்வாகம் அதை வாங்காது. கறி வைக்கும்போது மீன் உடைந்து விட்டால் பங்கீடு செய்வது சிரமம் மட்டுமல்ல கைதிகளும் உடைந்த சிறிய துண்டுகளை வாங்க மாட்டார்கள்.

மீன், இறைச்சிக் கறிகள் துண்டுகளைக் குழம்புக்குள்போட்டு வேக வைக்கும் முறை பூசாவில் இருந்தது. அங்கு தருகின்ற கறி வீட்டில் வைப்பதுபோல இறுக்கமாகவும் மிளகாய்த்தூள் அதிகமாகவும் சுவையாகவும் இருக்கும். அந்தச் சிறை நிர்வாகத்துக்குப் பிரத்தியேகமாக எதுவும் அரசால் வழங்கப்படுவதில்லை. சில சந்தர்ப்பங்களில் விளைமீன், சுறா, நல்ல கருவாடுகள் எல்லாம் சமைத்துத் தருவார்கள். அநுராதபுரத்தில் பெரும்பாலும் மூத்திரச் சுறா என்ற ஒருவகைச் சுவையற்ற மீன் கறியையே தினமும் வைத்துத் தருவார்கள். மட்டக்களப்பில் ஓரளவு நல்ல மீன்கள் காய்ச்சித் தருவார்கள்.

களுத்துறை தமிழ் அரசியல் கைதிகள் மட்டுமிருக்கின்ற சிறை என்பதால் தமிழ்க் கைதிகளின் பாட்டிக்காரர்கள் கூட்டாக முடிவெடுத்துச் சமையல் பாட்டிக்காரரிடம் பீடி, பணம் கொடுத்துச் சாப்பாட்டுப் பொருள்களை வாங்கக்கூடாது என்று தீர்மானித்தால் அந்த நிர்வாகம் தரமான சாப்பாடு தர வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகும். இதனால் பண வசதிகள் இல்லாத கைதிகளும் நன்மையடைவார்கள். இவ்வாறு சிலர் சிந்தித்துப் பலவேளைகளில் தோற்றுப்போனார்கள். பலர் அதற்கு உடன்படாததால் பழைய நிலையே தொடர்ந்தது. கைதிகளை ஒரே கருத்துக்கு உடன்படச் செய்து நடைமுறைப்படுத்துவது மிகச் சிரமம். (தொடரும்)

## முடி உதிர்தல்...

இன்னும் சிலருக்குத் தலையின் முன்பகுதியில் மட்டும் முடி உதிரும். பின்னந்தலையில் முடி இருக்கும். இவர்களுக்கு 'முடி மாற்று சிகிச்சை மூலம்' முடி முளைக்க வைப்பதுண்டு. அதாவது, பின்னந்தலையில் இருக்கும் முடியை எடுத்து, தலையின் முன் பகுதியில் நாற்றங்கால் பயிர் எடுத்து நடுவதுபோல் நடுவது. இந்த சிகிச்சைகள் எல்லாமே 60% வரைதான் பயன் தரும். பலருக்கு இது நல்ல பயன் அளித்தாலும் மீண்டும் மீண்டும் முடி உதிரலாம். ஆகவே, இதற்கு முழுமையாகத் தீர்வு கொடுக்கும் வகையில் புதிய வழிகளைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் உலகளவில் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் யேல் பல்கலைக்கழக ஆய்வு.

இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்ட 'பேரிசிடினிப்' மருந்து 'ஜேஏகே தடுப்பான்கள்' (JAK INHIBITORS) எனும் மருந்து வகையைச் சேர்ந்தது. இது ஏற்கெனவே ருமட்டாய்டு மூட்டுவலிக்குப் பயன்படுத்தப்பட்டுவரும் மருந்துதான். இப்போது இது தலைமுடி உதிரும் பிரச்சினைக்கும் தீர்வு தருவதாகத் தெரிய வந்துள்ளது. எப்படி? நோய்த் தடுப்பாற்றலைத் தருகிற தைமஸ் நிணவணுக்களில் குறிப்பிட்ட சில அணுக்கள் மட்டும் தவறுதலாக தலைப் பகுதி ரோமக்கால் வேர்களை எதிரிகளாக நினைத்து அழித்துவிடுகின்றன. இதுதான் 'அலோபீசியா ஏரியேட்டா' வழுக்கை விழுவதற்குக் காரணம். இவர்களுக்கு 'பேரிசிடினிப்' மருந்தைக் கொடுத்தபோது தைமஸ் நிணவணுக்கள் ரோமக்கால் வேர்களை அழிக்கிற வழிகள் அனைத்தும் அடைபட்டுப்போயின. இதன் பயனால், ரோமக்கால்கள் அழிவதும், வழுக்கை விழுவதும் தடுக்கப்பட்டன. ஆகவே, தலைமுடி உதிரும் பிரச்சினைக்கு 'பேரிசிடினிப்' மருந்து நல்லதொரு வழியைக் காட்டுவதாகக் கருதப்படுகிறது.

இந்த ஆய்வில் பங்கு பெற்ற 74% பேருக்கு 52 வாரங்களில் 90% முடி முளைத்துவிட்டது. பக்கவிளைவுகள் அவ்வளவாக இல்லை. அதனால் 'அலோபீசியா ஏரியேட்டா' பிரச்சினை கடுமையாக உள்ளவர்களுக்கு இந்த மருந்தைப் பயன்படுத்தலாம் என்று அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்துக் கழகம் (FDA) ஒப்புதல் கொடுத்துள்ளது. விரைவில் இது மற்றைய நாடுகளிலும் மக்கள் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



கதிரேசன் காத்தவராயன்

# கொஞ்சமாயெண்டாலும் விளங்குதே?

வாசிசாலைக்குப் போவமோ எண்டு யோசிச்சுக்கொண்டு வெளிக்கிட முருகேசர் வந்தார். "இஞ்சாரண்ணை மாஸ்ரர் தேடின வராம் வாங்கோவன் போவம்" எண்டார். சரியெண்டு அங்கை போனம். பனம்மட்டை விசிறியாலை விசிக்கினபடி இருந்த மாஸ்ரர் "வாங்கோ வாங்கோ" எண்டு வரவேற்றார். "ஆக்களின்ரை சிலமனைக் காணேல்லை கோல்பேசுக்குப் போட்டியளோவெண்டல்லே நினைச்சன்..." எண்டு மாஸ்ரர் சிரிக்க நாங்களும் சிரிச்சம்.

"உண்மையாயோ மாஸ்ரர்... எங்களுக்கும் அதுக்கும் என்ன சம்மந்தம்?" எண்டு முருகேசர் கேட்டு நிப்பாட்டினார். "அதிலை பங்குபற்றி எங்களுக்கென்னப்பா ஆகப்போகுது? புதினம் பாக்கப் போனீங்களோ எண்டல்லே நினைச்சன்" எண்டு மாஸ்ரர் சமாளிச்சார். "போகலாந்தான்...சாப்பாடு தண்ணியோடை பொழுதும் போகும்" எண்டுகொண்டு சுதன் வீட்டுக்குள்ளை இருந்து வந்து இருந்துகொண்டான். "இஞ்சாருங்கோ நாங்களே வரச்சொன்னனாங்கள் இப்ப போகச்சொல்லுறதுக்கு?" எண்டு நான் சொல்ல எல்லாருமாச் சிரிச்சினம்.

"நாங்கள் வேண்டாமெண்டு சொல்லுறம் எண்டதுக்காகவே படுக்கையிலை கிடந்ததுகளையும் கொண்டுபோய் வோட்போடப்பண்ணியல்லே கொண்டந்தவை... இப்ப படுகினம்... நாங்களென்னத்தைச் செய்ய?" எண்டார் முருகேசர். "உதிலை முருகேசர் எங்கடை பங்கும் இருக்குது..." எண்டு நான் தொடங்க "உண்மைதானப்பா கதிரேசு, நாங்கள் எங்களுக்குப் பீக் குண்டுபோட்டவற்றை மேனை ஆதரிக்கிறமெண்டு பகிரங்கமாய் அறிக்கை விட்ட புத்திசாலியள்தானே?" எண்டார் மாஸ்ரர்.

"சாமான் தட்டுப்பாட்டை அறிமுகம் செய்ததும் அவரல்லே? சவுக்காரத்துக்குக்கூட தடை போட்டவையல்லே..." எண்டு சுதன் சொல்ல, "தம்பி நீ சொல்லு பாப்பம் எந்தக் கட்சி நாட்டிலை ரத்தக்களரி காணாதவையெண்டு? தமிழனை மட்டுமே கொண்டு குவிச்சாங்கள்? சிறிமாவும்தான் ஜே.ஆரும் தான் சிங்களப் பெடிபெட்டையளையே கொண்டு குவிச்சவை..." எண்டு முருகேசர் சொல்லிக்கொண்டிருக்க "அவங்கடை கொலைக்கூத்தை தலையாட்டி ஆதரிச்ச ஆக்கள்தானே மிச்சப்பேர்" எண்டன் நான்.

"வரலாறெண்டு மகாவம்சத்தை படிப்பிச்சால் இப்பிடித்தான் வரலாறு சரிவரத் தெரியாத கூட்டமொண்டுதான் மிஞ்சும்... தமிழனை அழிச்சால் வீரமெண்டிற விளக்கந்தானே வரும்" எண்டார் முருகேசர். "அதுக்குள்ளை போராடுகிறவைக்கு தமிழர் வந்து தங்களோடை சேரயில்லையெண்ட கவலையாமல்லே?" எண்டான் சுதன். "அதுதானப்பா சொன்னன்தானே வரலாறு தெரியாட்டி இப்பிடித்தான் கனக்கக் கவலையள் வரும்" எண்டார் முருகேசர்.

"இந்த வரலாற்று உண்மையளை இப்பவெண்டாலும் சிங்கள இளையதுகளுக்குச் சொல்லலாமல்லே எங்கடை பெரியாக்கள்?" எண்டான் சுதன். "சொல்லத்தான் வேணும்... அவங்கள் வளந்த விதம் நாங்கள் ஒண்டைச்சொல்ல அவங்கள் வேறைவிதமாய் விளங்க பிரச்சனையாப்போகும்" எண்டார் மாஸ்ரர். "உண்மைதான் மாஸ்ரர்... இப்ப கவனிச்சனீங்களே? பிக்குமாற்றை தலைப்போடுதல் தொடங்கியிட்டுது... அவங்களே வியாக்கியானம் செய்து குழப்பிப்போடுவங்கள் கண்டியளோ?" எண்டார் முருகேசர்.

"ஓஓஓ... இதுகளெல்லாத்துக்கும் அவங்களுந்தான் காரணம்... தங்கடை பௌத்த சிங்களக் கோட்பாடு சிதையக் கூடாதெண்டதிலை வலு கவனமாயல்லே நிக்கிறாங்கள். அவங்கள் தலைப்போடுகிறது சனத்தின்ரை பசி பட்டினியிலை கரிசனை எடுத்தில்லை... தங்கடை பிடி நழுவக்கூடாதெண்டதுதான்..." எண்டார் மாஸ்ரர்.

"சரியாச் சொன்னீங்கள் மாஸ்ரர்... அவங்கள் நாடு தங்கடை கட்டுப்பாட்டை மீறிப் போகுடுமோ எண்ட பயத்திலைதான் கொந்தளிக்கிறாங்கள்... பெடியள் அவசரப்பட்டு ஏதாலுஞ் செய்துபோடுவங்கள் எண்டிற பயமும்தான்..." எண்டார் முருகேசர். "உண்மைதான்" எண்ட சுதன் "எங்கடை பார்வையாளராயிருக்கிற முடிவுதான் சரிதான்" எண்டான்.

"தம்பி பார்வையாளராயிருக்காமலுக்கு இப்ப விலை பேச வேணும்... என்னத்துக்கு எவ்வளவு? ஐ.நா.வுக்கு இது.. போர்க் குற்றத்துக்கு இது... கையை ஆதரவா உயத்த எது? எண்டு வரலாற்றிலை விட்ட குறையளை தீர்க்க நல்ல சந்தர்ப்பமடா..." எண்டார் உறுதியாய் முருகேசர். "எங்கடையளோ? பேரம் பேசுகிறதோ" எண்டார் எரிச்சலோடை மாஸ்ரர். "இவை தங்களுக்குள்ளை கூடிக் கதைக்கிறதே பிரச்சனையாக் கிடக்குது.. காணாமலாக்கப்பட்டது களின்ரை சொந்தங்களின்ரை போராட்டம் மூண்டு வரியத்தை எட்டப்போகுது... இப்ப பாருங்கோவன் முள்ளிவாய்க்காலிலை ஆர் எத்தினை மணிக்கு விளக்குக்கொழுத்திறது எண்டு அடிபடப் போறாங்களெண்டு?" கதையை முடிக்காமலுக்கு எழும்பி வந்திட்டன்.

## நம்பிக்கையில்லாத்...

வெள்ளிக் கிழமை பிற்பகல் முற்றுகையிட்டனர் முதன்மை எதிர்க்கட்சியான மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

கரீன் பெர்னான்டோ, மனுச நாணக்கார, ரோகினி விஜேவர்த்தன, கெக்டர் அப்புகாமி, முஜிபுர் ரஃமான் ஆகியோர் உள்ளிட்ட ஒரு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரின் அலுவலகத்திற்குள் புகுந்து அவரை முற்றுகையிட்டனர். இதன்போது, நாடாளுமன்றத்துக்கு அருகில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது காவல்துறையினர் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் தண்ணீரைப் பீச் சியடித்தும் பலத்தைப் பயன்படுத்தியது குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் முறையிட்டனர்.

நம்பிக்கையில்லாத் தீர்மான வரைவு மீதான விவாதம் தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடிய பின்னர் நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைவாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அதனை ஏற்றுக்கொள்ளாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மான வரைவு மீதான விவாதத்திற்கு உடனடியாக ஒரு நாள் ஒதுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினர்.

நம்பிக்கையில்லாத் தீர்மான வரைவு மீதான விவாதத்திற்கு நாள் ஒதுக்குவதை சபாநாயகரே மேற்கொள்ள முடியும், அரச தலைவருக்கு எதிரான குற்றவிசாரணைத் தீர்மான வரைவு தொடர்பில் வேண்டுமானால் அவர் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடுவது அவசியம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கரின் பெர்னான்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றம் எதிர்வரும் 17ஆம் நாள் வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதனை மாற்றி 10ஆம் நாளே நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட முடியாதா என்று நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் ரஃமான் சபாநாயகரிடம் வினவினார். தலைமை அமைச்சர் மட்டுமே அப்படி முன்கூட்டியே நாடாளுமன்றத்தைக் கூட்டும்படி கேட்கமுடியும் என்று அதற்குப் பதிலிறுத்தார் சபாநாயகர்.

இதையடுத்து மக்களின் உரிமைகளை மதித்து நடக்கும்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினர். மக்களின் கோரிக்கைகளை ஆட்சியாளர்கள் காதில் விழுத்தவில்லை என்றால் நாட்டில் குருதியாறு ஓடும் என்று சபாநாயகருக்கு எச்சரிக்கை விடுத்தார் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேரட்னே.

## 60 வயதுக்கு...

ளின் பரிந்துரைக்கு அமைய இரண்டாவது ஊக்கியாக 4ஆம் கட்டத் தடுப்பு மருந்தை வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

நான்காம் கட்ட தடுப்பு மருந்தை 20 வயது முதல் 60 வயது வரையானவர்களில் குணப்படுத்த முடியாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களும் நோய் எதிர்ப்பாற்றல் குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்களும் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் எவரும் கட்டாயப்படுத்தப்படமாட்டார்கள். மூன்றாவது கட்ட தடுப்பு மருந்தைப் பெற்று 3 மாதங்கள் கடந்தவர்கள் இந்த நான்காம் கட்ட மருந்தையும் பெற்றுக்கொள்ளலாம் - என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இனப்பிரச்சினைக்கான...

முதல்வர் ஸ்டாலின் இலங்கை மக்கள் அனைவருக்கும் 120 கோடி ரூபாவிற்கும் மேலான பெறுமதிமிக்க உணவுப் பொருட்களை வழங்க முன்வந்துள்ளார். இது மிகவும் மகிழ்ச்சியும் ஆறுதலும் அளிக்கிறது. உதவி என்பதற்கும் அப்பால் சென்று இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் தமிழக முதல்வரின் பங்கு காத்திரமாக இருக்கவேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மேலும் வலியுறுத்தினார்.

# சிறு குழுக்களுக்குப் பயிற்சியும் ஆதரவும்...!

கமலநாதன்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

மேஜர் ஸ்ரீபதி குணசேகர. இவர் 1986இல் படைப்பிரிவில் சேர்ந்தார். இந்தியா, அமெரிக்காவில் கொமாண்டோ சிறப்புப் பயிற்சிகளைப் பெற்றவர். ஆழ ஊடுருவும் படைக் கட்டமைப்பை தானே சிந்தித்து உருவாக்கியவர். ஆழ ஊடுருவும் படையணியின் சிற்பி என வர்ணிக்கப்படுபவர். புலிகளுக்கு எதிரான போராட்டத்தில் முக்கிய நபராகப் போற்றப்படுகிறார். ஆழ ஊடுருவும் படைப்பிரிவின் பல்வேறு நுட்பங்களைக் கண்டுபிடித்தவர். வெளச யூரியூப் தளத்தில் அவர் பகிர்ந்த அனுபவத்தின் முதல் பகுதி கடந்த வாரம் செம்மண் பத்திரிகையில் வெளியாகி இருந்தது. அதன் இரண்டாவது பகுதி இந்த வாரம் வெளியாகின்றது.

**மல்லாகம் படை நடவடிக்கை**

மல்லாகம் நடவடிக்கை டெல்ரா குழுவுக்கு வாழ்வா? சாவா? போராட்டமாக அமைந்தது. எமது அணிக்குச் சகல வசதிகளும் தந்தார்கள். புலிகளின் காவலரணுக்கும் எமது காவலரணுக்கும் இடையில் சில இடங்களில் 100 மீற்றர் தூரமும் சில இடங்களில் 500 மீற்றர் தூரமுமே இடைவெளியாக இருந்தது. இரு சாரரும் தத்தமது எல்லைகளுக்குப் பின்னால் என்ன இருக்கிறது என்று எதிரி கண்டுவிடாதபடி மறைப்புச் செய்திருந்தோம். இருசாராரின் சினைப்பர் படையணியினரும் எந்நேரமும் தாயார் நிலையிலிருந்தனர். ஒரு சிறிய நடமாட்டம் தெரிந்தாலும் உடனேயே சினைப்பர் மூலம் இருசாராரும் சுட்டனர்.

நாம் சென்ற இடத்தில் கப்டன் பகீர் பொறுப்பாக இருந்தார். தனது எல்லை முடியுமிடத்தில் வானூர்திப் படையினரின் தொடர் பதுங்கு குழி எல்லை தொடங்கியது. அங்கு சினைப்பர் அணியினர் இருக்கிறார்கள். அவர்களுடன் கதைத்தால் புலிகளின் நடமாட்டம் பற்றிக் கூறுவார்கள் என்று எமக்கு ஒழுங்குகள் செய்து தந்தார். நான் அந்தச் சினைப்பர்தாரியுடன் உரையாடிய போது மரம் ஒன்றில் ஏறி அவற்றை அவதானிக்க ஏற்பாடு செய்தார். பின்னர் பங்கர்களில் எமது சிறப்பு அணியில் 2 பேர் வீதம் நிலையெடுப்பதற்கு ஒழுங்கு செய்தோம். நிலைமைகளை அவதானித்த பின்னர் நேருக்கு நேராகப் புலிகளும் நாங்களும் மோதிக்கொண்டோம். புலிகளுக்கு அடித்து அவர்களின் பங்கர்களை இடித்துப் புலிகளின் சடலங்களையும் ஆயுதங்களையும் கைப்பற்றினோம். அது எமக்கு மிகவும் உற்சாகத்தைத் தந்தது.

புலிகளின் மேஜர் சுந்தரியின் பங்கர்களை உடைத்ததைப் பிரிகேடியர் ரம்பு பாராட்டினார். மல்லாகம் தாக்குதலின் பின்னர் புலிகளுக்கு அடிக்க முடியும் என்ற தென்பும் நம்பிக்கையும் எமது படையணிக்கு ஏற்பட்டது. பின்னர் ஏனைய படையினருக்கும் 4 பேர், 8 பேர் கொண்ட எமது படைப்பிரிவினரைப் பரவலாக்கினோம்.

**தாடி வைக்க அனுமதி மறுப்பு**

புதிய படைத்தளபதி பொறுப்பேற்றதன் பின்னர் எமது படையணியினரைத் தாடி வளர்க்க அனுமதிக்க முடியாது என்று கூறினார். அது எமது படையினருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது. தாடி வளர்த்திருப்பதால் போர் புரியும் ஓர்மம் அவர்களுக்கு அதிகம் இருந்தது. மீண்டும் குடா ஓயாப் பகுதியில் சிறப்புப் பயிற்சி ஒன்று ஆழ ஊடுருவும் பிரிவினருக்கு வழங்கப்பட்டது. அதன் பின் நடந்த தாக்குதல் ஒன்றில் எமது கொமாண்டோக்கள் சிறப்பாகச் செயற்பட்டதால் தாடி வளர்க்க அனுமதி கிடைத்தது.

**ஆழ ஊடுருவி அதிக நாள்கள் தாக்குப் பிடிக்க முடியாத நிலை**

புலிகளின் பகுதிக்குள் ஆழ ஊடுருவிச் செல்வது மிகச் சிரமமாக இருந்தாலும் அங்கு நீண்ட காலம் தங்கிநின்று வேவு பார்க்கப் போதியளவு உணவு, குடிநீர் போன்றவற்றைக் காவிச் செல்வது மிகவும் சிரமமாக இருந்தது. ஒரு முகாமிலிருந்து புறப்பட்டு ஊடுருவி 24, 48, 98 மணிநேரத்தில் திரும்புவது என்று திட்டமிட்டோம். 98 மணி நேரத்தில் திரும்பும் பயணத்தை தொடங்கும் போது ஆயுதங்கள், குடிதண்ணீர், உணவு என 150 கிலோவுக்கு மேற்பட்ட சுமையைச் சுமந்து செல்ல வேண்டியிருந்தது. பைகளை முதுகில் கொழுவியதும் பின்புறமாக ஆளை இழுக்கும் நிலை இருந்தது.

> லிகளின் பகுதிக்குள் ஆழ ஊடுருவிச் செல்வது மிகச் சிரமமாக இருந்தாலும் அங்கு நீண்ட காலம் தங்கிநின்று வேவு பார்க்கப் போதியளவு உணவு, குடிநீர் போன்றவற்றைக் காவிச் செல்வது மிகவும் சிரமமாக இருந்தது.

ஜெனரல் ஞானக பெரேரா புலிகளின் பகுதிக்குள் ஊடுருவித் தாக்குவதை விரும்பவில்லை. சாதாரணமாகப் புலிகளின் பகுதிக்குள் ஊடுருவுவதே சிரமமானது. அதற்கு மேலதிகமாக "எக்கோ ரீம்" என்ற பெயரில் அல்ப்பா, பிராவோ, டெல்ரா என வேறு படையணிகளையும் இணைத்து 40 பேர் உள்ளே இறங்குவது சாத்தியமில்லை என்றார்.

**வேடர்களிடம் பயிற்சி**

ஒரு மாதம் வரை காட்டுக்குள் தங்கி வாழ்வதற்கான உபாயம் வேடர்களிடம் இருக்கிறது என்று எனது நண்பர் ஒருவர் மூலம் அறிந்தேன். வேட்டையாடுவது, தேன் எடுப்பது, வேறு சில சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவது என வீட்டிலிருந்து புறப்பட்டு ஒரு மாதத்துக்கு மேல் காட்டில் தங்கியிருக்கும் வழக்கம் உள்ளவர்கள் வேடர்கள். அவ்வாறான ஒரு குழுவை நான் அணுகிக் காட்டுக்குள் நீங்கள் எவ்வாறு செயற்படுகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன் - என்று கேட்டதும் நாங்கள் கொமாண்டோ அணி என்பதால் அவர்கள் பயந்தார்கள். தங்களைக் கைது செய்ய முயல்கிறோம் என்று எண்ணினார்கள். பின்னர் அவர்களின் பயத்தைப்போக்கி உங்களது செயற்பாடுகளுக்கு நாம் ஒருபோதும் தடையாக இருக்க மாட்டோம் எனக்கூறி அவர்களுடன் சென்றேன்.

அவர்கள் இறைச்சியைப் பதப்படுத்தும் முறை, தேனைப் பயன்படுத்தும் முறை, தாகம் ஏற்படாது எப்படி இருப்பது போன்ற விடயங்களைக் கற்றுத் தந்தார்கள். அதன் பின் அதிக சுமையைச் சுமக்காமல் காட்டில் தங்கியிருந்து எம்மால் வேவு பார்க்க முடிந்தது.

**காலணியின் அடியை மாற்றியது**

படையினரின் நடமாட்டம் இருக்கிறதா என்பதை எங்களின் சப்பாத்து அடையாளங்களை வைத்துப் புலிகள் கண்டுபிடிப்பர். அதனால் எங்களின் சப்பாத்து அடியில் சாதாரண செருப்பின் அடியைப் பொருத்த அனுமதி கேட்டபோது மேலிடத்தில் மறுத்தனர். பின்னர் சப்பாத்தை விட்டுவிட்டு செருப்பு அல்லது வெறுங்காலுடன் காட்டுக்குள் சென்றோம்.

**ஜி.பி.எஸ். அனுபவம்**

நான் முதன் முதலில் ஜி.பி.எஸ். கருவி பற்றி அறிந்ததும் மிகவும் ஆச்சரியப்பட்டேன். அதை வைத்து இலங்கையின் வீதி வரைபடத்தை பரிசீலித்தபோது வீதி வரைபடத்தில் பல பாதைகள் வரையப்பட்டது பொய்யாக இருப்பதைக் கண்டறிந்தேன். சில இடங்களில் 400 மீற்றர் வரை படத்திலிருப்பதைவிட விலகியிருப்பதை ஜி.பி.எஸ். மூலம் கண்டுபிடித்தேன். அதன் பின்னர் வீதி வரைபடத்தைக் கைவிட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் வரைபடத்தையே பாவிக்கத் தொடங்கினோம். ஆழ ஊடுருவும் படையணி ஒன்றை உருவாக்கி அதன் மூலம் அதிக இழப்பின்றித் தாக்குதல்களை ஒழுங்கு படுத்தியதற்காக நான் பெருமைப்படுகிறேன். 2006ஆம் ஆண்டில் எனது 21 வருடகால கொமாண்டோப் படையணிச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றேன்.

**தொடரும்...**

---

பட்ட தண்ணீர் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அனுராதபுரத்திலுள்ள ஞானாக் கவின் காளி கோயிலுக்குள் நுழைய முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் கிருணிகாவும் நூற்றுக்கணக் கான பெண்களும் முயற்சித்ததை அடுத்து சுமார் 6 வாரங்களாகத் தலைமறைவாகி இருந்த ஞானாக்கா கடந்த செவ்வாய்க்கிழமை மீண்டும் தனது நடவடிக்கைகளைத் தொடங்கினார் என்று அவருக்க நெருக்கமான வட்டாரங்கள் எக்கணி நெக்ஸ்ட் இணையத் தளத்திற்குத் தெரிவித்திருக்கின்றன.

ஞானாக்காவின் சேவை உடனடியாக அனைத்து மக்களுக்கும் கிடைக்காதபோதும், பல நூற்றுக்கணக்கான போத்தல் குடிதண்ணீரில் மந்திரித்த நீரைக் கலந்து அவற்றைப் பொதி செய்து கோத்தா கோ கமவிற்கு அனுப்பும் பணியில் அவர் தீவிரமாக ஈடுபட்டிருந்தார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

"ஆயிரக்கணக்கானவர்கள் அந்த மந்திரித்த நீரை ஏற்கனவே குடித்திருப்பார்கள். கோத்தா கோ கமவிற்கு அவை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்பட்டன. சீருடைத் தரப்பினரின் உதவியுடன் இவை தயார்ப்படுத்தப்பட்டன" என்று ஞானாக்காவிற்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

"மந்திரித்த நீரைக் குடிக்கும் எவரும் ஞானாக்காவால் வசியப்படுத்தப்பட்டு அரச தலைவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எதிரான போராட்டங்களைக் கைவிட்டுவிடுவார்கள் என்கிற உத்தரவாதத்தை ஞானாக்கா வழங்கியுள்ளார்" என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந்த மந்திரித்த தண்ணீரை உருவாக்குவதற்காக அனுராதபுரத்திலேயே அருமையாகக் கிடைக்கக்கூடிய காட்டுப் பூக்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து வரவழைக்கப்பட்ட சில வகையான அரிய பூக்கள் என்பன பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




# நெப்டியூன் கோளின் கண்டுபிடிப்பு

இங்கிலாந்தைச் சேர்ந்த ஜான் கூச் ஆடம்ஸ் யுரேனஸ் கோளின் சுற்றுப்பாதையை ஆராய்ந்துகொண்டிருந்தார். யுரேனஸ் தனது பாதையில் ஒரே சீராகச் செல்லாமல் அலைக்கழிக்கப்படுவதாகத் தெரிந்தது. உடனே தன் கவனத்தை அதில் செலுத்தினார். அப்போதுதான் யுரேனஸுக்கு அப்பால் ஒரு கோள் இருக்கலாம் என்கிற முடிவுக்கு வந்தார்.

**ஜான் கூச் ஆடம்ஸ்**

1845ஆம் ஆண்டு கேம்பிரிட்ஜ் வான் ஆராய்ச்சிக்கூடத்தின் இயக்குநரிடம் சென்று, புதிய கோள் ஒன்று தென்படுவதைக் காட்டினார். அவர் அந்த விடயத்தைப் பெரிதாக எடுத்துக்கொள்ள வில்லை. இங்கிலாந்தின் பிரபல வானவியல் அறிவியலாளரிடமும் சொன்னார். அவரும் இளம் ஜான் கூச் சொல்வதைப் பொருட்படுத்தவில்லை. இப்படிப் புதிய கோள் கண்டுபிடித்த பெருமையை இங்கிலாந்து தவறவிட்டுவிட்டது.



ஜான் கூச் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த அதேநேரம், பிரான்ஸ் நாட்டில் உர்பன் லே வெரியரும் யுரேனஸ் தொடர்பான பிரச்சினையை ஆராய்ந்து, யுரேனஸுக்கு அப்பால் புதிய கோள் இருக்கும் என்கிற முடிவுக்கு வந்தார். ஆடம்ஸ் புதிய கோளைக் கண்டுபிடித்தது அவருக்குத் தெரியாது.


லே வெரியர் கூறுவது சரிதானா என்று உறுதிப்படுத்துமாறு இங்கிலாந்து நிபுணர்களுக்கு வேண்டுகோள் விடப்பட்டது. அப்போதும் இங்கிலாந்து ஆர்வம் காட்டவில்லை. எனவே, ஜெர்மன் அறிவியலாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்தது பிரான்ஸ்.

1846 செப்டம்பர் 23 அன்று தொலைநோக்கி மூலம் வானை ஆராய்ந்து, புதிய கோள் இருப்பதை ஜெர்மனி உறுதி செய்தது. ஜான் கூச் ஆடம்ஸ், லே வெரியர் ஆகிய இருவரும் கண்டுபிடித்த கோளுக்கு நெப்டியூன் (NEPTUNE) என்று ரோமானியக் கடவுளின் பெயர் சூட்டப்பட்டது.

**லே வெரியர்**

நெப்டியூனைக் கண்டுபிடித்த பெருமை யாருக்குச் சொந்தம் என்பதில் இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் இடையே சண்டை வந்தது. இறுதியில் ஜான் கூச் ஆடம்ஸ், லே வெரியர் ஆகிய இருவருக்குமே இந்தப் பெருமை உரியது என்று முடிவு செய்யப்பட்டது.

சூரியனை புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ் ஆகிய கோள்கள் தனித் தனி பாதைகளில் சுற்றி வந்தன. நெப்டியூன் எட்டாவது கோளாகச் சூரியனைச் சுற்றிவந்தது. சூரியனுக்கும் நெப்டியூனுக்கும் உள்ள தொலைவு சுமார் 450 கோடி கிலோ மீற்றர். பூமி சூரியனைச் சுற்றிவர ஓராண்டு காலம் ஆகிறது. நெப்டியூன் ஒரு முறை சூரியனைச் சுற்றிவர 164 பூமி ஆண்டுகள் ஆகின்றன.



நெப்டியூன் கோள் சூரிய மண்டலத்தின் எல்லையில் உள்ளது. தொலைநோக்கி மூலம் பார்த்தால் நீல நிற ஒளிப் புள்ளியாகத் தெரியும். ஹப்புள் தொலைநோக்கி வந்த பிறகுதான் நெப்டியூன் கிரகத்தை முழுதாகப் படம்பிடிக்க முடிந்தது.

வியாழன், சனி, யுரேனஸ் போலவே நெப்டியூன் கோளும் பெரிய பனிக்கட்டி உருண்டையாக இருக்கிறது. இது யுரேனஸ் கோளைவிடச் சற்றே சிறியது. பூமியைப் போல 17 மடங்கு எடை கொண்டது. நெப்டியூன் நீலமாகத் தெரிவதற்கு அந்தக் கோளின் வாயு மண்டலத்தில் மீதேன் வாயு இருப்பதே காரணம்.

நெப்டியூன் கண்டுபிடிக்கப்பட்டு சுமார் 144 ஆண்டுகளுக்குப் பிறகுதான் நெப்டியூன் பற்றிய தகவல்களைப் பெற முடிந்தது. அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம், 1977 ஆம் ஆண்டு வாயேஜர்-2 என்கிற ஆளில்லா விண்கலத்தை விண்ணில் செலுத்தியது. 1989ஆம் ஆண்டு வாயேஜர்-2 விண்கலம் சுமார் 4 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்தில் நெப்டியூனை நெருங்கிப் படங்களை எடுத்து அனுப்பியது.

அறிவியலாளர்கள் பூமியிலிருந்து வாயேஜர் விண்கலத்துக்கு ஆணைகளைப் பிறப்பித்தால் அவை போய்ச் சேர 4 மணி 6 நிமிடங்கள் ஆகும். ஆகவே வாயேஜர் நெப்டியூனை நெருங்கும்போது என்னென்ன செய்யவேண்டும் என்பது தொடர்பான ஆணைகளை மிகக் கவனமாக முன்கூட்டித் தீர்மானித்துத் தகுந்த நேரத்தில் அவற்றை அனுப்ப வேண்டியிருந்தது.

நெப்டியூன் கோள் அடர்ந்த மேகங்களால் சூழப்பட்டது. மணிக்கு 1,500 கிலோ மீற்றர் வேகத்தில் ஓயாத கடும் புயல் வீசிக்கொண்டிருக்கிறது. ஆனாலும் நெப்டியூனின் மையப் பகுதியில் கனல் வீசுகிறது.

நெப்டியூனுக்கு இரண்டு சந்திரன்களே உள்ளதாகக் கருதப்பட்டது. பல சந்திரன்கள் உள்ளதாக வாயேஜர் கண்டுபிடித்துக் கூறினார். தற்போது நெப்டியூனுக்கு 13 சந்திரன்கள் உள்ளன. இவற்றில் மூன்று சந்திரன்கள் பெரியவை.

சனி கோளுக்கு உள்ளது போலவே நெப்டியூனைச் சுற்றியும் வளையங்கள் உள்ளன. இந்த வளையங்களுக்கு நெப்டியூனைக் கண்டுபிடித்த ஜான் கூச் ஆடம்ஸ், லே வெரியர் ஆகியோரின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.




திருச்செந்தூர்

# மதத்துக்குப் பின்னால்...?

மனிதர்களுக்கு மட்டுமா மதத்தைப் பிடிக்கிறது. யானைகளுக்கும் தான். ஆனால், யானைகளுக்கு மதத்தைப் பிடிப்பதில்லை. மாறாக மதம் தான் யானைகளைப் பிடிக்கிறது. மனிதர்களுக்குப் பிடிக்கும் மதத்துக்கும் யானைகளுக்குப் பிடிக்கும் மதத்துக்கும் ஒற்றுமையே கிடையாது என்று தெரிந்திருந்தாலும் யானைகளுக்கு மதம் பிடிப்பது எதனால், அது எப்படி நிகழ்கிறது என்று பலருக்கும் தெரிந்திருப்பதில்லை.



யானைகளுக்கு மதம் பிடிப்பதற்கும் சுயஇன்பம் காணுதல் என்று மனிதர்கள் உட்படச் சில விலங்குகள் நிகழ்த்தும் காரியத்துக்கும் தொடர்பிருக்கிறது என்றால் உங்கள் புருவங்கள் ஆச்சரியத்தில் உயரலாம். யானைகளின் மதத்துக்கும் அவற்றின் இனப்பெருக்கத்துக்கும் தொடர்பிருக்கிறது என்று சொன்னாலும் அதெப்படி என்று நீங்கள் சிந்திக்கலாம். இப்படியாக யானைகளுக்கு மதம் பிடிப்பதன் பின்னால் பல விடயங்கள் மறைந்திருக்கின்றன.

**மதநீர் எனப்படும் இனப்பெருக்கத் திரவம்**

யானைகளின் மதத்துக்கு முக்கிய காரணமே மதநீர் என்கிற ஒருவகைத் திரவம் தான். மதநீர் என்பது வெறும் திரவம் மட்டுமல்ல. அது ஆண் யானைகளுக்கு மாத்திரம் சுரக்கின்ற ஒரு வகை இனப்பெருக்க - பாலுறுப்புச் சார்ந்த திரவம். இதனால்தான் மதம் பிடிப்பது ஆண் யானைகளுக்கு மாத்திரமாக இருக்கிறது. கண்ணுக்கும் காதுக்கும் இடைப்பட்ட பகுதியில் காணப்படுகின்ற ஒரு வகைச் சுரப்பி வழியாகத்தான் இந்த மதநீர் சுரக்கிறது. அவ்வாறு சுரக்கின்ற இந்த மதநீர் அவ்வழியாக வழிந்தோடவும் செய்கிறது. இந்த மதநீர் ஆண் யானைகளுக்கு மாத்திரமே சுரப்பதுடன் வயதான யானைகளுக்குச் சுரப்பது குறைவு. இளம் யானைகளுக்கு பாலுணர்வு அதிகரிக்கும்போது வழிகின்ற இந்தத் திரவம்தான் அவற்றை ஆக்ரோசமிக்கதாக மாற்றுகின்றது என்கிறார்கள். இதனால் ஆபத்தை விளைவிக்கிறது யானை.

**அது ஆண் யானைகளுக்கு மாத்திரம் சுரக்கின்ற ஒரு வகை இனப்பெருக்க - பாலுறுப்புச் சார்ந்த திரவம். இதனால்தான் மதம் பிடிப்பது ஆண் யானைகளுக்கு மாத்திரமாக இருக்கிறது.**

இந்த மதநீர் அதிகம் வழிவதைக் கொண்டுதான் யானைக்கு மதம் பிடிக்கப்போகிறது என்பதைத் தீர்மானிக்கிறார்கள். இணை சேராமல் அதிக மதநீரைச் சுரக்கின்றபோது யானைக்கு மதநீர் அதிகம் சுரக்கும் என்றும் சொல்லப்படுகிறது.

**மதம் கொண்ட யானை என்னவெல்லாம் செய்யும்**

மதம் பிடித்த, மதப் பற்றுள்ள மனிதர்கள் என்னவெல்லாம் செய்வார்களோ அதைப் போன்ற அழிவுகளை உடனடியாக நிகத்தும் பழக்கமே இந்த யானைகளுக்கும் உண்டு. தனது எஜமான், தன்னைச் செலுத்தும் பாகன், அறிந்தவர், தெரிந்தவர், பழக்கமுடைய மனிதர்கள், அதேபோல விலங்கு நண்பர்கள் என எதையும் கவனத்தில் கொள்ளாமல் தாக்கும் நிலைக்கு இந்த மதம் யானைகளைத் தள்ளுகிறது. எனவே மதம் பிடிக்கப்போகிறது என்று மதநீர் அதிகம் வெளியேறுவதை வைத்துக் கண்டறிந்ததும் இந்த இளம் வாலிப ஆண் யானைகளைச் சங்கிலியால் நன்றாகப் பிணைத்துக் கட்டி விடுகின்றனர் அவற்றை வளர்ப்போர். காடுகளில் அவை தனித்து மூர்க்கங்கொண்டு அலைந்து திரியும். அத்தோடு மதம் பிடித்த யானைகளோடு சேர்த்து வயது முதிர்ந்த ஆண் யானைகளைக் கட்டிவிட்டால் மதம் பிடிக்காது என்றும் மதம் பிடிப்பதால் அதற்குண்டாகின்ற ஆக்ரோசத்தைக் குறைக்க முடியும் என்றும் சொல்கிறார்கள். எது எவ்வாறிருப்பினும் ஆண் யானைகளின் பாலுணர்வு சார்ந்த விடயம் ஒன்றால் அவற்றுக்கு மதம் பிடிக்கிறது என்பது நம் பலருக்கும் தெரியாத சங்கதிகளில் ஒன்றுதானே...?

# ஆசைப்பட்டதிலேயே வாழ்வதே பெரிய வெற்றி!

## நடிகர் விதார்த் நேர்காணல்



**இந்து**

2019ஆம் ஆண்டு சுராஜ் வெஞ்சரமூடு நடிப்பில் மலையாளத்தில் வெளியான 'விக்ருதி' படத்தின் தமிழ் மறுபதிப்பாக வெளிவந்துள்ளது 'பயணிகள் கவனிக்கவும்' திரைப்படம். 'ஆஹா' ஓடிடி தளத்தில் வெளியாகியுள்ள இந்த படத்தில் நடிகர் விதார்த் மாற்றுத்திறனாளியாக யதார்த்தமான, அழுத்தமான நடிப்பை வெளிப்படுத்தியிருந்தார். அவரிடம் படம் குறித்து பேசினோம்.

**'பயணிக்கவும் கவனிக்கவும்' படத்தில் உங்களுக்கான வாய்ப்பு அமைந்தது எப்படி?**

குரங்கு பொம்மை படத்தின் ப்ரோமோஷனில் இயக்குநர் சக்திவேல் பணியாற்றிக்கொண்டிருந்தார். அப்போதிருந்து இருவரும் இணைந்து படம் பண்ணலாம் என்று முடிவு செய்தோம். கிட்டதட்ட 5 வருடங்களாகத் திட்டமிட்டிருந்தோம். அவர் எனக்கு நான்கைந்து கதைகள் சொல்லியிருந்தார். அனைத்துமே நல்ல கதைகள். அதில் 2 கதைகளைப் படமாக்கலாம் என நினைத்திருந்தோம். அப்போது மலையாள படமான விக்ருதி படத்தை எடுக்கலாம் என அவர் கூறினார். எனக்கு அவரது இயக்கத்தில் படம் நடிக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டும் இருந்தது. பிறகு இந்த படம் என்று சொன்ன போது, இன்னும் உற்சாகமாக இருந்தது. முடிவெடுத்ததும், படத்தின் அடுத்தடுத்த கட்ட பணிகள் உடனே தொடங்கின. நான் விக்ருதி படத்தை பார்த்திருக்கிறேன். அந்த குறிப்பிட்ட கதாபாத்திரத்தை மலையாளத்திலிருந்து அப்படியே தழுவி நடிக்காமல் மாற்றலாம் என நினைத்தேன். அப்போது ராமகிருஷ்ணன் என்பவருடன் இரண்டு நாட்கள் பயிற்சி எடுத்து நடித்தேன்.




**மாற்றுத்திறனாளியான எழிலன் கதாபாத்திரத்தில் யதார்த்தமான நடிப்பை வெளிப்படுத்தியிருந்தீர்கள். இதிலிருந்த சவால் என்ன?**

எல்லா படமுமே எனக்கு சவால் நிறைந்தது தான். பொதுவாக கதை கேட்கும்போது, இயக்குநர் ஒன்றைச் சொல்வார், நம் கற்பனையில் ஒன்று ஓடும். ஆனால், எனக்கு அப்படியான கற்பனையில் வேலை செய்ய விருப்பம் கிடையாது. என்னைப் பொறுத்தவரை இயக்குநர் என்ன நினைக்கிறார் என்பதை நான் புரிந்து கொள்ளவேண்டும். காரணம், அவர்தான் சிரமப்பட்டு அந்த கதாபாத்திரத்தை எழுதியிருக்கிறார். ஆகவே அவருடைய நோக்கத்தை புரிந்து கொண்டு, அவர் நினைப்பதைப்போல நடிக்கத்தான் நான் முயற்சி செய்வேன். கண்டிப்பாக என்னுடைய சிந்தனையை ஒருபோதும் அவர்களிடம் திணிக்கவே மாட்டேன். "நீங்கள் நினைத்ததை நான் கொண்டுவந்துவிட்டேனா?" என்றுதான் முதலில் கேட்பேன். அவருடைய நோக்கமும், என்னுடைய நோக்கமும் வெவ்வேறாக இருந்தால் சிதைந்துவிடும்.

அவருடைய பாதையில் பயணிக்கவே விரும்புவேன். அதனால் இயக்குநர் விரும்புவதை கொடுக்கவேண்டும் என்ற வகையில் எனக்கு எல்லா கதாபாத்திரங்களும் சவால் நிறைந்ததுதான். இயக்குநர்களின் எண்ணத்தை பிரதிபலிப்பதே சவால். மலையாள படமான விக்ருதியில் சுராஜ் நடிப்பை அப்படியே கொண்டு வர வேண்டும் என நான் நினைக்கவில்லை. மாறாக, நம்மோடு உலவும் மனிதர்களை அப்படியே திரையில் யதார்த்தமாகக் கொண்டு வரவேண்டும எனத்தான் நினைத்தேன். சிறு வயதிலேயே என் அப்பாவின் நண்பர் சீனிவாசன் என்பவரை நான் பார்த்திருக்கிறேன். அவர் காது கேட்க முடியாத, வாய் பேச முடியாதவர்.

அவருடைய குரலைக் கேட்டுப் பழகியிருக்கிறேன். அத்தோடு ராமகிருஷ்ணன் என்பவருடன் பயிற்சி எடுத்தேன். நான் உணர்ந்த ஒரு விஷயத்தை முழுமையாக செய்ய வேண்டும் என நினைத்தேன். மறுஆக்கப் படம் என்றாலே, நடிப்பில் ஒப்பீடு வரும். அதில் எனக்கு ஒருபோதும் உடன்பாடு கிடையாது. ஒவ்வொருவருக்கும் ஒரு ஸ்டைல் இருக்கிறது. அதை அவர்கள் பின்பற்றுகிறார்கள்.

**இந்த படத்திற்கு வரவேற்பு எப்படி இருக்கிறது? திரைத்துறையினர், சக நண்பர்கள், ரசிகர்கள் ரியாக்சன்ஸ் என்னவாக இருந்தது?**

நிறைய போன்கால்கள் வந்தன நான் படம் நடித்த அனைத்து இயக்குநர்களும் போன் செய்து பாராட்டினார்கள். இதைத்தாண்டி, பெரிய அளவில் பழக்கமில்லாத பலரும் பேசினார்கள். பீட்சா படத்தின் ஒளிப்பதிவாளர் கோபி அமர்நாத் தொடர்புகொண்டு அழுது பேசி பாராட்டினார். இசையமைப்பாளர் ராஜேஷ் வைத்யா, தொடர்பு கொண்டு 'என்னால முடியல, படம் பார்த்து அழுதுவிட்டேன்' என்றார். மனோ குடும்பத்துடன் படம்பார்த்து ஒரே அழுகை என்றனர். பத்திரிகையாளர்கள் தரப்பிலிருந்து படத்துக்கு நல்ல வரவேற்பு கொடுத்திருக்கிறார்கள்.

ஓடிடி தளத்தில் இத்தனை பேர் படம் பார்த்திருக்கிறார்கள். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. தியேட்டராக இருந்தால் உடனே ரிசல்ட் வந்துவிடும். ஓடிடியிலிருந்து ரிசல்ட் வர தாமதமாகும் என நினைத்தேன். ஆனால், உடனே வந்தது. இதையெல்லாம் விட்டுவிடுவோம். சாமானிய சினிமா ரசிகர்கள் பலரும் என் நம்பரை எப்படியோ வாங்கி தொடர்பு கொண்டு பேசுகிறார்கள். அதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அவர்களுக்கு என்னுடைய தொலைபேசி எண் எப்படி கிடைத்து, பாராட்ட வேண்டும் என மெனக்கெட்டு தொடர்பு எண்ணை பெற்றிருக்கிறார்கள்.

**இந்த படம் பார்க்கும்போது உங்களுக்கு என்ன தோன்றியது? நீங்கள் நினைத்துபோல உங்கள் கதாபாத்திரம் வந்திருக்கிறதா?**

ஷூட்டிங்கின்போது, நான் நடித்த காட்சியை மானிட்டரில் பார்க்கவே மாட்டேன். எடிட்டிங் செய்து டப்பிங் வரும்போதுதான் பார்ப்பேன். நடுவில் ஃபுட்டேஜை காட்டினாலும் பார்க்க மாட்டேன். அது முழுக்க இயக்குநரின் விருப்பம். அதில் என் தலையீடு இருக்கக்கூடாது என நினைப்பேன். டப்பிங்கின்போதும்கூட இன்னும் ஒரு முறை பேசவா எனக் கேட்டேன். ஏனென்றால் எனக்கு இறுதிவரை எந்த சீக்வன்சிலும் திருப்தி இருக்காது. மைனாவிலிருந்து இன்றைக்கு வரை, வேறு படங்களைப்பார்ப்பது போல என்னால் என் படத்தை பார்க்க முடியாது. வேறு படங்களை ரசித்துப் பார்த்துவிடுவேன். ஆனால், என்னால் என் படத்தை அப்படி சாதாரணமாக பார்த்துவிடமுடியாது. நிறைய மாற்றங்கள் குறித்தும், திருத்தங்கள் குறித்தும் யோசித்துகொண்டேயிருப்பேன். அதனால், எளிதாக ரசித்து என் படத்தை பார்ப்பது கடினம்.



**பொதுவாக எந்த அடிப்படையில் கதைகளை தேர்வு செய்கிறீர்கள்?**

கதை எனக்கு பிடித்திருக்கிறதா, திருப்திகரமாக இருக்கின்றதா என்பதைத்தான் பார்ப்பேன். தவிர, என் கதாபாத்திரம் முக்கியத்துவம் பெறவேண்டும் எனக் கருதமாட்டேன். அப்படிப் பார்த்தால். கிடாயின் கருணை மனு படத்தில் நடித்தே இருக்கமுடியாது. 40 பேரில் நானும் ஒருவனாக இருப்பேன். என்னுடைய கதாபாத்திரம் முக்கியமாக இருக்கவேண்டும் என்றெல்லாம் நான் எதிர்பார்க்க மாட்டேன். அந்த படத்திலேயே மற்றவர்களுக்கு முக்கியத்துவம் இருக்கும். நல்ல கதைக்குள் நான் இருக்கிறேனா? அதில் நான் என்ன செய்கிறேன் என்பதைத்தான் கவனிப்பேன். கதை கேட்டதும், எழுத்துருவைப் படித்துவிடுவேன். கதை என்னை முழுமையாகத் திருப்திபடுத்துகிறதா என்பதைத்தான் பார்ப்பேன்.

**நீங்கள் திரைத்துறைக்கு வந்து ஏறக்குறைய 12 வருடம் நிறைவடைந்துவிட்டது. இந்த 12 ஆண்டுகால சினிமா வாழ்க்கையில் நீங்கள் பெற்றதும்? இழந்ததும் என்ன?**

நான் எதையும் இழக்கவில்லை. நான் சாதாரணமான ஒரு மனிதனாகத்தான் வலம் வருகிறேன். நடிகராவதற்கு முன் எப்படி இருந்தேனோ இன்றும் அப்படித்தான் இருக்கிறேன். இழப்பு என்று எனக்கு எதுவும் கிடையாது. 12 வருட பயணம் மிகவும் பிடித்திருக்கிறது. உங்களுக்கு பிடித்த ஒன்றை நீங்கள் செய்வது எப்போதும் நிறைவைத்தரும். கலையின் தாக்கம் எல்லோருக்குள்ளும் ஏதோ ஒரு வகையில் இருக்கும். நாம் ஆசைப்பட்டதே, தொழிலாக மாறுவது ஒரு பாக்கியம். இதில் நான் எவ்வளவு வருமானத்தை ஈட்டினேன் என்பதல்ல முக்கியம். அது அடுத்த விஷயம். ஆசைப்பட்டதிலேயே வாழ்வதை பெரிய வெற்றியாகப் பார்க்கிறேன். பலரும் காலம் கடந்து தங்களின் விருப்பத்தை நிறைவேற துடிக்கிறார்கள். அந்த வகையில் பலருக்கும் நினைத்து கிடைக்காத விஷயம், நான் விரும்பி எனக்கு கிடைத்திருக்கிறது.

**அடுத்து என்னென்ன படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறீர்கள்?**

ஜெயம் ராஜாவிடம் உதவி இயக்குநராக இருந்த சுப்புராம் இயக்கத்தில் அஞ்சாமை என்ற படத்தில் நடித்து முடித்திருக்கிறேன். பயணிகள் கவனிக்கவும் படம் எப்படியோ, அப்படி இந்த படமும் மனதிற்கு நெருக்கமாக இருக்கும். இன்னொரு படமும் நடித்து முடித்திருக்கிறேன். அதற்கான அறிவிப்பை படக்குழு முறையாக அறிவிக்கும். பிரமாதமான படமாக வெளிவரும். லைகா நிறுவனத்தின் சார்பில் யோகிபாபுவுடன் இணைந்து ஒரு படம் நடித்துக்கொண்டிருக்கிறேன். சாட்டை இயக்குநர் அன்பழகனுடன் இணைந்து ஒருபடமும், சற்குணத்துடன் இணைந்து படமும் நடித்து வருகிறேன். வரிசையாக நான்கைந்து படங்கள் நடித்துகொண்டிருக்கிறேன்- என்றார்.

# 148 எதிர் 65





**சத்தியநாதன்**

கோத்தாபய வீட்டுக்குச் செல்லவேண்டும், மைனா கோ கோம் (மகிந்த வீட்டுக்குப் போ), ராஜபக்ச குடும்பமே அரசியலில் இருந்து விலகவேண்டும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரும் வீட்டுக்குச் செல்லவேண்டும், ஆட்சி செய்யத் துப்பில்லாவிடடால் என்னிடம் கையளித்துவிட்டுப் போங்கள் எனப் பல விடயங்களைத் தலையங்கமாக வைத்துக் கடந்த ஒரு மாத்தை நெருங்கும் காலத்தில் மக்கள், மாணவர்கள், தொழிற்சங்கங்கள் எனப் பல தரப்பினரும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அரச தலைவரும் தலைமை அமைச்சரும் வீட்டுக்குப் போயே ஆகவேண்டும் என்று ஊடகங்கள் கூறி வருகின்றன.

இதற்கு மேலதிகமாக இலங்கை மன்றக் கல்லூரியில் ஜே.வி.பியின் தலைவர் அனுர குமார திசாநாயக்கவால் ஏற்பாடு செய்யப்பட்ட 'ஆதாரா தத்துடன் ஊழலை வெளிப்படுத்திய நிகழ்வு' நடந்து ஓரிரு நாள்களில் (5.5.2022) பிரதிச் சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்யும் பலப் பரீட்சை நாடாளுமன்றில் நடந்தது. அதில் பொது ஜன பெரமுன கட்சியின் சார்பில் யாராவது போட்டியிடுவார்கள் அவருக்கு எதிராகச் செயற்படுவோம் என எதிர்க் கட்சிகள் காத்திருந்தன. பங்காளிக் கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மகிந்த கூட்டிலிருந்த 11 கட்சிகளும் இதில் எதிர்த்து வாக்களிக்கலாம் என எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சற்றும் எதிர்பாராத வகையில் சிறி லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவே அந்தப் பதவிக்கு மீண்டும் முன்மொழியப்பட்டார். இவர் ஏற்கனவே பிரதி சபாநாயகராக இருந்து இரண்டு தடவைகள் தனது பதவி துறப்பை அரச தலைவருக்கு அறிவித்து அரச தலைவரும் அதை ஏற்றுக் கொண்டிருந்தார். இந்த நிலையில் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய மீண்டும் அதே பதவிக்காகப் போட்டியிடுவார் என எவரும் எதிர்பார்க்கவில்லை. இது பற்றி சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலர் தயாசிறி ஜெயசேகர குறிப்பிடுகையில், ''சியம்பலாப்பிட்டியவை முன்மொழியும் நோக்கம் எமது கட்சிக்கு இருக்கவில்லை. காலை 10 மணிக்கு இவ்விடயம் பற்றி யோசிக்க வேண்டியிருந்தது. அப்போது நடாளுமன்றம் கூடியிருந்தது. பொது ஜன பெரமுனவில் யாரும் போட்டியிடாத நிலையில் நாங்கள் ரஞ்சித் சியம்பலப்பிட்டியவை முன்னிறுத்தினோம். அவருக்குச் சார்பாகப் பொது ஜன பெரமுனவும் அதிலிருந்து பிரிந்து சுயாதீனமாகச் செயற்படுகின்ற கட்சிகளும் சியம்பலாப்பிட்டியவுக்குச் சார்பாக வாக்களித்ததால் நிலமை இப்படியாகியது'' என்றார்.

இது பற்றிக் கருத்து வெளியிட்ட சாணக்கியன் ''ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய மீண்டும் போட்டியிடுவார் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை. சியாம்பலப்பிட்டியாவுக்கு வாக்களிக்குமாறு எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் ரணில் விக்கிரமிசிங்க தனிப்பட்ட முறையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பரப்புரை செய்வதைக் காண முடிந்தது. முழுத் திருடர்களும் ஒன்றாக இணைந்து இந்த வெற்றியைப் பெற்றிருக்கிறார்கள். இந்த உயரிய சபையில் 3இல் 2பலத்தைப் பெறுவதற்காக நாம் எத்தகைய தீர்மானத்தைக் கொண்டு வந்தாலும் இந்தத் திருடர் கூட்டம் ஒன்றாகச் சேர்ந்து வாக்களித்து அதை முறியடித்து விடுவார்கள். இந்த நாட்டு மக்களைப் பற்றிச் சிந்திக்கக்கூடியதாக 65 உறுப்பினர்கள் மாத்திரமே இந்த மன்றில் இருப்பது பிரதி சபாநாயகர் தேர்தல் மூலம் தெரிகிறது'' எனக் காட்டமாக உரையாற்றினார்.

**பிரதி சபாநாயகர் பதவி**

அரச தலைவரையோ, தலைமை அமைச்சரையோ, அமைச்சர்களையோ ஒத்த பதவி அல்ல இது. மிகச் சாதாரணமாக நாடாளுமன்றக் கூட்டத் தொடருக்குத் தலைமை வகிக்கும் பதவி. ஆனால் அரசுக்கு எதிராக நாடு முழுதும் நடந்து வருகின்ற எதிர்ப்புச் செயற்பாடுகளின் பின்னர் கோத்தாபாய அரசுக்குள்ள செல்வாக்கைத் தராசில் போட்டு நிறுத்துப் பார்ப்பதற்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பமாகவே இது பார்க்கப்பட்டது. இதில் எதிர்க்கட்சிகள் படுமோசமான தோல்வியைச் சந்தித்திருக்கின்றன.

எதிர்க்கட்சித் தலைவரான சஜித் இரகசிய வாக்கெடுப்பின்போது தான் யாருக்கு வாக்களித்



தேன் என்பதைத் தலைமை அமைச்சருக்கும், அவரைச் சுற்றியிருந்த ஏனைய உறுப்பினர்களுக்கும் காட்டினார். இது நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறிய செயலாகும். அதை எதிர்க்கட்சித் தலைவரே மேற்கொண்டது மிகவும் தரக்குறைவான விடயம் மட்டுமல்ல அவரால் இந்த நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்த முடியாது என்பதையும் தான் ஓர் அரசியல் கோமாளி என்பதையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்தது. அதேவேளை ஒரு சில நாள்களுக்கு முன் சஜித் பிரேமதாசவுக்கு அருகில் அமர்ந்திருந்த சரத் பொன்சேகவுக்கு அவரது கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஹரின் பெனாண்டோ வாக்குவாதப்பட்டு முரண்பட்டதுகூட சஜித்தின் ஆளுமையின்

> **எதிர்க்கட்சித் தலைவரான சஜித் இரகசிய வாக்கெடுப்பின்போது தான் யாருக்கு வாக்களித்தேன் என்பதைத் தலைமை அமைச்சருக்கும், அவரைச் சுற்றியிருந்த ஏனைய உறுப்பினர்களுக் கும் காட்டினார். இது நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறிய செயலாகும்**

மையைக் காட்டுவதாக இருந்தது. அதேவேளை காலிமுகத்திடலிலோ வேறு இடங்களிலோ போராட்டங்களில் ஈடுபட்டு வரும் எவரும் சஜித்தைத் தலைவராக்குவோம் என்று இதுவரை கூறவும் இல்லை.

பிரதி சபாநாயகருக்கான இரகசிய வாக்கெடுப்பு மூலம் கோத்தாபய தரப்பினருக்கு மூன்றிலிரண்டைவிட அதிக செல்வாக்கு உள்ளதை நிரூபிக்க முடிந்திருக்கிறது. இதற்கு எதிர்க்கட்சிகளின் கையலாகாத்தனமும் கோத்தா தரப்புக்கு எதிராகத் திட்டமிட்டுச் செயற்படும் ஆற்றலோ ஒற்றுமையோ ஆளுமையோ இல்லை என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

148 எதிர் 65 என்பது மிகப் பெரிய வித்தியாசமாகவுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் தரப்பில் இம்தியாஸ் பாக்கீர் மக்காரை நியமித்ததுகூட பிழையான தீர்மானமே. முஸ்லிம்களுக்கு எதிரான கசப்புணர்வு நாடு முழுவதும் இருக்கும் நிலையில் அதுவும் காலிமுகத்திடலிலும் ஏனைய பல இடங்களிலும் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருக்கும் நிலையில் அந்தக் கசப்புணர்வை நாடாளுமன்றத்திலும் காட்டுவதற்கான வாய்ப்பை சஜித் பிரேமதாச ஏற்படுத்திக் கொடுத்தது என்பது புத்திசாதுரியமற்ற அரசியல் காய் நகர்த்தலே. ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பிரேரிக்கப்பட்டவரை சிறீலங்க சுதந்திரக் கட்சியினாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருவராக ஒரு சிங்களவரைப் பிரேரித்திருக்க வேண்டும். இவ்வாறான பலவீனமான தெரிவின் பின்னணியிலேயே 148 எதிர் 65 வாக்குகள் என முடிவு வந்தது.

இதில் அனுர குமாரவின் ஊழல் தொடர்பான வெளிப்படுத்தல்களும் ஊழல் செய்தவர்களை மிக இறுக்கமாக ஒன்றுசேர்ந்து செயற்பட வைத்திருக்கிறது. ஊழலைப் பட்டியலிட்டுக் காட்டிய அனுர குமாரவும் அவரது கட்சியைச் சேர்ந்த இருவருமாக 3 செல்லுபடியற்ற வாக்குகளையே நாடாளுமன்றில் செலுத்த முடிந்திருக்கிறது. இத்தகைய நிலையில் அரச தலைவரையும் இந்த ஆட்சியையும் எதிர்க் கட்சிகளால் துரத்தியடிக்க முடியும் என்பது நம்பக்கூடியதாக இல்லை.

நட்சத்திரா

# ஏன்...? அப்படி...?

17



## காய்ச்சிய எண்ணெய் கன காலம் பாவிக்கும்

நமது மூதாதையர்கள் சொல்லிவருகின்ற சில விடயங்களுக்குக் காரண காரியங்கள் இல்லாமலிருக்காது. அத்தகைய ஒரு விடயம் தான் "காய்ச்சியெடுத்த எண்ணெய் கனகாலம் பாவிக்கும்" என்கிற அவர்களின் கூற்றும். பாரம்பரியமாகவே தேங்காய் எண்ணெய்யை இரண்டு வழிகளில் நம்மவர்கள் பெற்று வருகின்றனர். அதில் ஒன்று கொப்பாறா அல்லது குடு குடுப்பை எனப்படும் நிலையிலிருக்கின்ற தேங்காய்களையோ, அல்லது செத்தல் தேங்காய்களையோ சிறிய கீலங்காளாக - துண்டுகளாக நறுக்கி வெயிலில் நன்கு உலர வைத்து அதைச் செக்கிலோ, மில் அரைப்பானிலோ கொடுத்து அரைத்து அதிலிருந்து எண்ணெய் பெறுவது ஒரு முறை. மற்றையது செத்தல் தேங்காய்களைத் துருவியெடுத்து பால் பிளிந்து அந்தப் பாலைப் பெரிய தாச்சிச் சட்டி ஒன்றுக்குள் விட்டு அடுப்பில் வைத்து நன்கு காய்ச்சி அதிலிருந்து எண்ணெய் எடுப்பது. இவ்விரண்டு வழிகளிலும் தேங்காய் எண்ணெய்யைப் பெற்றாலும் காய்ச்சி எடுக்கின்ற எண்ணெய்யே சிறந்தது என்றும் கனகாலத்துக்குப் பேணிப் பாதுகாத்து வைத்துப் பயன்படுத்த முடியும் என்றும் கூறினர் எம் மூதாதையர்.

காய்ச்சி எடுப்பது மிகக் கடினமாக இருந்தாலும் மூதாதையர்கள் அவ்வாறு எண்ணெய் தயாரிப்பதையே அதிகம் விரும்பினர். அதற்கு என்ன காரணம்...? ஏன் காய்ச்சிய எண்ணெய் அதிக காலத்துக்குப் பயன்படுத்தும் விதத்தில் இருக்கிறது...?

காய்ச்சிய எண்ணெய்யில் கலப்படங்கள் எதுவுமில்லாமல் இருப்பதே அதன் நீண்ட காலப் பாவனைக்குக் காரணம். கலப்படம் இல்லாத எண்ணெய் அது என்பதையே எமது மூதாதையர்கள் அவ் வாறு சொல்லி வைத்தனர். வெயிலில் உலர வைக்கும் போது தேங்காயில் எண்ணெய்யுடன் கலந்திருக்கின்ற நீர்ப்பதன் முற்றாக ஆவியாகி விடுவதில்லை. அதை எண் ணையாக்கும் போது நீர் மற்றும் சில சேர்க்கைகள் எண்ணெய்யுடன் கலந்திருக்கவே செய்யும். அதேபோல தேங்காயைக் காயவைக்கும் போது அதன் நீர்ப்பிடிப்பு முற்றிலுமாக ஆவியாகவில்லை என்றால் பூஞ்சணம் பிடிக்கும் (பங்கஸ்). இதனை அப்படியே அரைக்கும் போது பாண்டல் மணமும் உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய பூஞ்சைக் கிருமியும் அதில் சேரும். ஆனால் தேங்காய்ப் பாலை அடுப்பில் - நெருப்பில் நேரடியாகக் காய்ச் சும் போது அது கொண்டுள்ள நீர்ப்பதன் உள்ளிட்ட சேர்க்கைகள் பலவும் எண்ணெய்யிலிருந்து முற்றாகப் பிரித்தெடுக்கப்படுகிறது. இதனால் கலப்படமற்றதாக அந்த எண்ணெய் கிடைக்கிறது. நீண்ட காலத்துக்கு அதனை வைத்துப் பயன்படுத்த முடிகிறது. ஆரோக்கியமானதாகவும் இருக்கிறது. இவைதான் காய்ச்சிய எண்ணெய் நீண்ட காலம் வரை பழுதடையாமல் இருப்பதற்கும் சுத்தமானதாக இருப்பதற்கும் காரணம்.



தனுஷாந்

# கடலின் அதிசயம்...?





பூமியில் பெரும் பரப்பில் பரந்திருப்பது கடல். கரையில் நின்று பார்க்கும்போதும், ஓடத்தில், படகில், ஏன் பெரும் கப்பலில் ஏறி நின்று பார்க்கும்போதும் கடல் தரும் அழகையும் அனுபவத்தையும் விட அவற்றில் ஏறி நடுக்கடலை அடைந்து பார்க்கும்போது ஏற்படும் அனுபவம் அலாதியானது. கடல் நடுவில் சென்றதும் கப்பல் சிறுத்துப்போகப் பெரிதாகத் தெரியும் பிரம்மை ஏற்படும். அது தரும் அனுபவம் பயத்தையும் ஆச்சரியத்தையும் அதிசயத்தையும் அள்ளியிறைக்கத் தவறாது.

கடல் என்பதே அதிசயம்தான் என்றுரைக்கின்ற கவிஞர்கள் பலர். கடலுக்குள் பல அதிசயங்கள் புதைந்திருக்கின்றன என்கிற ஆய்வாளர்கள் பலர். இவ்வாறிருக்கக் கடலின் அதிசயம் என்று பெயர் சூட்டப்பட்டிருக்குமளவுக்குப் புகழ்பெற்ற ஒரு விடயமும் இருக்கிறது. அது மனிதர்கள் உருவாக்கிய கடலின் அதிசயம். அதென்ன கடலின் அதிசயம்...?

வொண்டர் ஒவ் தி சீஸ்

மிகப்பெரும் பயணக் கப்பல் ஒன்றுக்குத்தான் கடலின் அதிசயம் என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள் மனிதர்கள். அதி சொகுசுகள் நிறைந்த இந்தக் கப்பலின் பிரமாண்டம் காரணமாகவே அதைக் கடலின் அதிசயம் என்கிறார்கள். பிரமாண்டமாகவும் அதிசயமாகவும் இருக்கின்ற கடலில் மிதந்து திரிகிற குட்டித் தீவாக இருக்கிறது இந்தக் கப்பல். இன்றைக்குள்ள சுற்றுலாவிக் கப்பல்களில் மிகப் பெரிய கப்பலும் இதுவே. பிரான்ஸ்சில் கட்டப்பட்ட இந்தக் கப்பல் ஆயிரத்து 188 அடி நீளத்தைக் கொண்டது. றோயல் கரீபியன் பன்னாட்டு நிறுவனத்தின் தயாரிப்பு. இதில் 9 ஆயிரத்து 300 பேர் பயணிக்க முடியும் (பயணிகள், பணியாளர்கள்). 16 தளங்களைக் கொண்ட இந்தக் கப்பலில் 4 நீச்சல் குளங்கள், 20 உணவகங்கள், 2 ஆயிரத்து 877 அறைகள், குழந்தைகளுக்கான நீர் விளையாட்டுப் பூங்கா, குழந்தைகள் விளையாட்டு மைதானம், முழு அளவிலான கூடைப்பந்து மைதானம், ஐஸ் ஸ்கேட்டிங் மைதானம், ஆயிரத்து 400 இருக்கைகள் கொண்ட திரையரங்கு எனப் பல அம்சங்கள் காணப்படுகின்றன.

இவற்றையெல்லாம்விட 10ஆயிரத்துக்கு மேற்பட்ட இயற்கைத் தாவரங்கள் உள்ளன. இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கையில் கடலில் மிதந்து திரிகின்ற குட்டித்தீவாக இருக்கிறது இந்த வொண்டர் ஒவ் த சீஸ் என்கிற கடலின் அதிசயம்.



கடல் கடலே

அமெரிக்க படைப்பிரிவின் விமானந்தாங்கிக் கப்பலான யு.எஸ்.நிமிட் கிளாஸ் கப்பலைவிட 98 அடி நீளத்தால் விஞ்சியிருக்கிறது கடலின் அதிசயம். என்னதான் இந்தக் கப்பல் பெரிதாக இருந்தாலும் கடலின் அதிசயம் என்று வர்ணிக்கப்பட்டாலும் நம்மைச் சுற்றியுள்ள இயற்கையுடன் ஒப்பிடுகையில் இது சிறிதே. அதுவும் இயற்கையில் பெரியதும் பிரமாண்டமானதுமான கடலுடன் ஒப்பிடுகையில் எள்ளை விடச் சிறியதாகத்தான் இந்தக் கப்பல் இருக்கும். கடல் எவ்வளவு ஆபத்தானது — பிரமாண்டமானது என்பதை டைட்டானிக் கப்பல் மனிதர்களுக்கு உணர்த்திச் சென்றதை எவராலும் மறக்க முடியாது. ஒருபோதும் கடலில் மூழ்காது என்றிருந்த மனிதர்களின் நம்பிக்கையைத் தனது முதல் கடல் பயணத்திலேயே சுக்குநூறாக்கிய டைட்டானிக் நல்லதொரு பாடம்.

2018ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கடலின் அதிசயம் என்கிற இந்தப் புதிய கப்பலை விடவும் 1912இல் உருவான டைட்டானிக் சிறியதாக இருந்தாலும் கடலுடன் ஒப்பிடுகையில் இந்தக் கப்பல்கள் அனைத்தும் மிகச் சிறியவையே. கடலின் அதிசயம் என்று இந்தப் புதிய கப்பலுக்கு மனிதர்கள் பெயர் சூட்டியிருந்தாலும் அதைத் தீர்மானிப்பது கடலன்றி மனிதர்கள் அல்லர்.

# எலான் மஸ்க் கையில் ட்விட்டர்: நல்லதா கெட்டதா?

ச.கோபாலகிருஷ்ணன்

பிற சமூக வலைதளங்களைவிடக் குறைவான பயனர்களைக் கொண்டிருந்தாலும் சமூகத்தில் அதிக செல்வாக்கு செலுத்தும் ட்விட்டர் தற்போது உலகின் மிகப் பெரிய பணக்காரரான எலான் மஸ்க் வசம் சென்றுவிட்டது. 44 பில்லியன் டாலர் தொகைக்கு ட்விட்டர் நிறுவனத்தின் அனைத்துப் பங்குகளையும் மஸ்க் வாங்கிக்கொள்ள ட்விட்டர் இயக்குநர்கள் குழு (Board of Directors) ஒப்புதல் அளித்துவிட்டது. இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் என்று கூறப்படுகிறது. அதன் பிறகு, எலான் மஸ்க் ட்விட்டர் நிறுவனத்தின் உரிமையாளராகிவிடுவார்.

**செல்வாக்கு மிக்க சமூக ஊடகம்**

அரசுகளின் தலைவர்கள், ஆட்சியாளர்கள், உலக அளவில் செல்வாக்கு மிக்க தலைவர்கள், அரசியலர்கள், சினிமா நட்சத்திரங்கள், எழுத்தாளர்கள், விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட பிரபலங்கள் பலரும் ட்விட்டரையே அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். மிகக் குறைந்த எண்ணிக்கையிலான சொற்களைக் கொண்டு, செய்திகளைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளவும் ஹாஷ்டாக் (#) மூலம் எந்த ஒரு செய்தியையும் அதிவிரைவாகப் பரப்பி, உலக அளவில் ட்ரெண்ட் செய்யவும் மிகவும் தோதான ஊடகமாக இருந்ததால் ட்விட்டர் மிக எளிதில் பிரபலமடைந்தது. 2006இல் தொடங்கப்பட்ட ட்விட்டர் 2010-12-ல் லிபியா, எகிப்து, துனீசியா உள்ளிட்ட நாடுகளில் சர்வாதிகார ஆட்சிகள் அகற்றப்பட்டு, மக்களாட்சி மலர்ந்த 'அரபு வசந்த'த்துக்கு முக்கியப் பங்காற்றியது. உலகின் செய்தி ஊடகங்கள் அனைத்தும் உடனுக்குடன் செய்திகளைத் தமது ட்விட்டர் பக்கங்களில் வலையேற்றுவது இப்போது அத்தியாவசியமாகியிருக்கிறது.

**வியப்புக்குரிய ஆளுமை**

விண்வெளி ஆராய்ச்சிக்கான மலிவு விலை ரொக்கெட்களைத் தயாரிக்கும் 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனத்தைத் தொடங்கியவர் எலான் மஸ்க். அதோடு, கனரக மின்வாகனங்களை உற்பத்தி செய்யும் டெஸ்லா நிறுவனத்தையும் அவர் விலைக்கு வாங்கினார். இவ்விரு நிறுவனங்களிலும் அவர் பணத்தை முதலீடு செய்து லாபம் ஈட்டுகிறவர் மட்டுமல்ல. ஸ்பேஸ் எக்ஸ் மூலமாக விண்வெளிக்கு அனுப்பப்பட்ட ராக்கெட்களின் தலைமை வடிவமைப்பாளரும் அவர்தான். டெஸ்லாவிலும் பல்வேறு மேம்பட்ட வசதிகளை உள்ளடக்கிய புதிய மாடல் கார்களின் வடிவமைப்பில் சி.இ.ஓ. மற்றும் தயாரிப்பு வடிவமைப்பாளரான அவருக்கு முக்கியப் பங்குள்ளது.


இப்படிப் பல நிறுவனங்களைத் தொடங்கியும் விலைக்கு வாங்கியும் விண்வெளி ஆராய்ச்சி, வாகன உற்பத்தி, சூரியசக்தி மின்கலன் தயாரிப்பு, செயற்கை நுண்ணறிவு, சுரங்க வடிவமைப்பு, உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கால்பதித்து, உலகின் மிகப் பெரிய பணக்காரராக உருவெடுத்திருக்கிறார் எலான் மஸ்க். மனித குலத்தை அனைத்துத் துறைகளிலும் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு நகர்த்திச் செல்லும் வேட்கை, தடாலடி முடிவுகளை எடுக்கும் துணிச்சல், பலரால் நினைத்துப் பார்க்கவே முடியாத விஷயங்களை முடித்துக் காட்டும் திறமை ஆகியவற்றால், உலகின் செல்வாக்கு மிக்க தொழிலதிபராகவும் மிகப் புகழ்பெற்ற ஆளுமையாகவும் உயர்ந்திருக்கிறார் எலான் மஸ்க்.

**மஸ்க் முன்வைக்கும் மாற்றங்கள்**

ட்விட்டரைக் கைப்பற்றிய பிறகு, அதில் முக்கியமான மூன்று மாற்றங்களைக் கொண்டுவரப் போவதாகச் சொல்லிவருகிறார் எலான் மஸ்க். ட்விட்டரில் கருத்துரிமை பேணப்படவில்லை என்பது மஸ்கின் முதன்மையான குற்றச்சாட்டு. உண்மைக்குப் புறம்பான தகவல்கள், ஆதாரமற்ற அவதூறுகள், வசைகளை உள்ளடக்கிய ட்வீட்களைப் போலியானவை என்று அம்பலப்படுத்துதல் மற்றும் அவற்றைத் தொடர்ந்து வெளியிடும் ட்விட்டர் கணக்குகளை முடக்குதல் உள்ளிட்ட

(8ம் பக்கம் பார்க்க)

**ட்விட்டரை மஸ்க் கைப்பற்றிய பிறகு நிகழ்ந்த ஊழியர் கூட்டத்தில் விஜயா கண்ணீர் சிந்தி அழுததாகச் செய்திகள் வெளியாகின. விஜயா கட்டேவை மஸ்க் கடுமையாக விமர்சித்துவருகிறார். நீக்கப்பட்டாலும் இவ்விருவரும் அதற்கான இழப்பீட்டுத் தொகையைப் பெறுவார்கள். பிற ஊழியர்கள் இந்த ஆண்டின் இறுதிவரை வேலையை விட்டு நீக்கப்பட மாட்டார்கள் என்று ஊழியர்களுக் கிடையிலான கூட்டத்தில் பராக் அகர்வால் உறுதியளித்துள்ளார்.**




இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.05.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781